
# சுடர் ஒளி

வாராந்த சஞ்சிகை

மே 21 - 27, 2014 பக்கம் - 24 30/-



# அரசன் அன்றறுப்பான் தெய்வம் நின்றறுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2

நடைபெற்று முடிந்த இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் கிரிக்கெட் துறையைச் சேர்ந்த பிரபலங்கள் போட்டியிட்டிருந்தனர். இவர்களின் நிலை என்ன?

இந்தியப் பிரதமராகவுள்ள நரேந்திர மோடி குஜராத் கிரிக்கெட் சங்கத் தலைவர் என்பது குறிப்பிடத்தக்கது. பா.ஜ.க.வை எதிர்த்து காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட கிரிக்கெட் வீரர்களில் முகமட் அசாருதீன் மற்றும் முகமது கைப் ஆகியோர் தோல்வியை தழுவினர்.

இன்னும் கிரிக்கெட் ஆட்டங்களில் ஈடுபட்டு வரும் முகமது கைப், உ.பி. மாநிலத்தின் புல்பூர் தொகுதியில் போட்டியிட்டு ஒரு லட்சத்திற்கும் குறைவான வாக்குளை மட்டும் பெற்று 4-வது இடத்தைப் பெற்றார்.

2ஆவது முறையாக மக்களவைத் தேர்தலைச் சந்திக்கும் முகமட் அசாருதீன், ராஜஸ்தானில் போட்டியிட்டார். அசாருதீன் 4 லட்சம் வாக்குகள் பெற்றும் தோல்வியையே தழுவினார். இவரை விடவும் அதிக வாக்குகளைப் பெற்றார் பா.ஜ.க-வின் சுக்பிர் சிங் ஜானபுரியா.

# தேர்தலும் கிரிக்கெட்டும்

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் துணைத் தலைவராக இருந்து பிறகு பொதுத் தேர்தல்களை முன்னிட்டு பதவி விலகிய பா.ஜ.க-வின் மூத்த தலைவர் அருண் ஜெட்லி, முன்னாள் பஞ்சாப் முதல்வர் அம்ரீந்தர் சிங்கிடம் அதிர்ச்சித் தோல்வியைத் தழுவி னார். முன்னாள் இந்திய கிரிக்கெட் வீரரும் தற்போதைய வர்ணனையாளருமான நவ்ஜோத் சிங் சித்து, இந்தத் தொகுதியில் போட்டியிட இருந்தார். ஆனால் அருண் ஜெட்லி போட்டியிட்டு எதிர்பாராவிதமாக தோல்வியைச் சந்தித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் சபையின் இணைச் செயலரான பா.ஜ.க-வைச் சேர்ந்த அனுராக் தாக்கூர், இமாச்சலத்தின் ஹமிர்பூர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

ஜம்மு காஷ்மீர் மக்களவைத் தொகுதியில் போட்டியிட்ட ஜம்மு காஷ்மீர் கிரிக்கெட் சங்கத் தலைவர் ஃபரூக் அப்துல்லா, ஸ்ரீநகர் தொகுதியில் தோல்வியைத் தழுவினார். மத்தியப் பிரதேச கிரிக்கெட் சங்கத் தலைவர் ஜோதிராதித்யா சிந்தியா, குணா தொகுதியில் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றுள்ளார்.



# வியக்கவைக்கும் வில்லியர்ஸ்

நவீன கிரிக்கெட் உலகில் முழுநிறைவான துடுப்பாட்ட வீரர் ஒருவர் உண்டு என்றால் அது தென்னாபிரிக்காவின் ஏ.பி.டிவிலியர்ஸ்தான் என்று இந்திய முன்னாள் அணிவீரர் வி.வி.எஸ். லஷ்மண் புகழாரம் சூட்டியுள்ளார்.

இது குறித்து லஷ்மண் கூறியதாவது:

சந்தேகமில்லாமல் டிவிலியர்ஸ் ஒரு முழுமையடைந்த துடுப்பாட்ட வீரர் தான். கிளென் மேக்ஸ்வெல் அவருக்கு அருகில் இருக்கிறார். ஒரு பந்தை 3 அல்லது 4 விதங்களில் அடித்தாடும் முறையை கைவசம் வைத்துள்ள வீரர் டிவிலியர்ஸ். அவர் துடுப்பெடுத்தாடும் போது அவரால் முடியாதது எதுவும் இல்லை என்று தோன்றும் அளவுக்கு அசத்துகிறார்.

அவர் தன் கால்களை நகர்த்துவதிலும், விரைவாக முடிவு எடுப்பதிலும் வல்லவராகத் திகழ்கிறார். அவர் விளையாடும் முறைக்கு விரைவாகச் சிந்தித்து முடிவெடுக்கும் மனநிலை வேண்டும். அதனை டிவிலியர்ஸ் சிறப்பாகச் செய்கிறார். சாதாரணபந்து வீச்சாளர்களுக்கு எதிராக மட்டுமல்ல சிறந்த பந்து வீச்சையும் அவர் இவ்வாறு எதிர்கொள்கிறார்.

ஆக்ரோஷமாக ஆடி ஆட்டத்தை தனி நபராக தன் அணியின் பக்கம் திருப்பும் அதே வேளையில் அவர் ஆக்ரோஷத்தைத் தணித்துக் கொண்டு அணிக்காக நிதானமாக ஆடுவதிலும் சிறப்பாகத் திகழ்கிறார். இதனால்தான் அவர் ஒரு முழுமையடைந்த கிரிக்கெட் வீரர் என்கிறேன்- என்றுள்ளார்.

# சூதாட்டத்தை விசாரிக்கும் கங்குலி



சூதாட்டம் குறித்து விசாரிக்கவுள்ள முத்கல் குழுவில் கங்குலியும் இடம் பெறுவார் எனத் தெரிகிறது. ஆறாவது ஐ.பி.எல்., தொடர் சூதாட்டம் குறித்த விசாரணை இன்னும் தீரவில்லை. இதுகுறித்து நீதிபதி முத்கல் குழு அளித்த அறிக்கையில் சீனிவாசன், சென்னை அணித்தலைவர் டோனி உள்ளிட்ட 13 பேர் சிக்கியுள்ளனர்.

இவர்கள் மீதான புகாரை விசாரிக்க, இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ.,) நியமித்த குழுவை ஏற்க மறுத்த உயர் நீதிமன்றம், மீண்டும் முத்கல் குழுவையே நியமித்தது.

ஒகஸ்ட்மாத இறுதியில் விசாரணை அறிக்கையைக் கையளிக்கவுள்ள நிலையில், நேர்மையான முன்னாள் வீரர் ஒருவரை சேர்த்துக் கொள்ளலாம் என, தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால், இந்திய அணியின் முன்னாள் அணித்தலைவர் கங்குலியும் இந்தக்குழுவில் இடம் பெறுவார் என்ற எதிர்பார்க்கப்படுகிறது.

இதுகுறித்து முத்கல் குழுவின் வேண்டுகோளை, கங்குலியும் ஏற்றுக்கொண்டுவிட்டார் என்று தெரிகிறது. தற்போது லண்டனில் உள்ள கங்குலி, இன்னும் ஓரிரு நாள்களில் இந்தியா திரும்பி, விசாரணைக்குழுவில் இணையவுள்ளார்.

# உதைபந்துக் காதலன்

கிரிக்கெட்டில் பந்தை சிக்ஸருக்குப் பறக்கவிடுவதில் வல்லவர் கிறிஸ் கெய்ல். இவருக்கு கிரிக்கெட்டை விட உதைபந்து மீதுதான் அதிக காதலாம்.

தற்போது பெங்களூர் அணி சார்பில் ஐ.பி.எல்., தொடரில் பங்கேற்று வரும் கிறிஸ் கெய்ல் கூறியதாவது:

சிறு வயதிலிருந்தே உதைபந்தில் ஆர்வத்துடன் பங்கேற்பேன். பாடசாலை மட்டத்தில் 14 வயதுக்குட்பட்டோருக்கான அணியை நான் வழிநடத்தியிருக்கிறேன். வீட்டுக்கு வந்தபின்பும் உதைபந்துதான் விளையாடுவேன். அப்போதெல்லாம், கிரிக்கெட் பற்றிய எண்ணமே இருந்தது கிடையாது.

இதன் பின் 19 வயதுக்குட்பட்டோருக்கான தொடரில் பங்கேற்க இருந்தேன். ஆனால், பயிற்சியில் அதிக நேரம் ஓட வேண்டியிருந்தது. இதற்காகவே, அதில் கலந்து கொள்ளவில்லை. இதன் பின் ஆர்வமும் குறைந்துவிட்டது. தற்போது கிரிக்கெட்டில் கூட ஓட்டங்கள் சேர்க்க அதிகளவு நான் ஓடுவதில்லை என விமர்சனம் செய்வார்கள்.

கிரிக்கெட்டுக்கு வந்தபின், உதை பந்துக்கு என செலவு எதுவும் செய்வதில்லை. போட்டியை ரசித்துப் பார்ப்பேன். எப்போதுமே நான் பிரேசில் அணியின் ரசிகன். இம்முறை சொந்த மண்ணில் உலகக்கிண்ணத் தொடர் நடப்பது பிரேசிலுக்கு நெருக்கடி தரலாம். சிறப்பான திட்டத்தால் சம்பியன் பட்டம் வெல்லும் என நம்புகிறேன்.

தனிப்பட்ட முறையில் போர்த்துக்கல் அணியின் கிறிஸ்டியானோ ரொனால்டினோவை பிடிக்கும் - என்றார் கெய்ல்.



# கலிஸின் 4ஆவது காதலி

தென்னாபிரிக்க வீரர் ஜக் கலிஸ் வயது(வயது -38), நான்காவது முறையாகத் தனது காதலியை மாற்றியுள்ளார்.

கலிஸ/க்கு அழகிகள் என்றால் அதிகம் பிடிக்கும் போல. இவரது முதல் காதலி கிளிண்டி நெல், 2002 இல் 'மிஸ் தென் னாபிரிக்கா' வாகத் தேர்வானவர். பின்னர் அவரைக் கழட்டிவிட்டு 2003, 'மிஸ் தென்னாபிரிக்கா' போட்டியில் இரண்டாவது இடம் பெற்ற மரிசா எக்லியுடன் சேர்ந்தார்.

அடுத்து 'மொடல் அழகி' ஷமோன் ஜர்டிமுடன் சுற்றித் திரிந்தார். கடந்த ஆண்டு இவர்களுக்குள் பிரிவு ஏற்பட்ட நிலையில், நான்காவது முறையாக காதலியை மாற்றியுள்ளார் கலிஸ்.

இவரும் (கிம் ரிவாலாண்ட், 23), 2011இல், தென்னாபிரிக்காவின் 'மிஸ் எர்த்' போட்டியில் வெற்றி பெற்றவர் தான்.

இந்த ஆண்டு தொடக்கத்தில் தென்னாபிரிக்காவில் நடந்த விளையாட்டு விருது வழங்கும் நிகழ்ச்சியில் பங்கேற்க, கலிஸும், கிம் ரிவாலாண்டும் முதன் முறையாக இணைந்து வந்தனர்.

தவிர, கடந்த பெப்ரவரி 14, காதலர் தினத்தில், ஒருவருக்கு ஒருவர் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொண்டனர். தற்போது, ஏழாவது ஐ.பி.எல்., தொடரில் கொல்கத்தா அணிக்காக விளையாடி வரும் கலிஸ், கிம்மையும் அழைத்து வந்து விட்டார்.

ஐக்கிய அரபு எமிரேட்சில் முதற்கட்ட போட்டிகள் நடந்த போது, கிடைத்த இடைவெள?யில், பாலைவனத்தில் அழகை ரசித்தபடி இருந்த போட்டோக்களை, கலிஸ் தனது 'ருவிட்டர்' இணையத்தளத்தில வெளியிட்டார்.

மற்றபடி, தங்கள் 'காதல்' குறித்து, இதுவரை இருவரும் எதுவும் தெரிவிக்கவில்லை. ஏற்கனவே, மூன்று காதலிகளை மாற்றிய கலிஸ், கிம்முடன் எத்தனை நாள் இருப்பார் என்று பார்க்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாயம் பூசிய செங்கொடிகள்

ஆசாத்



இலங்கையில் ஜே.வி.பி 1971இல் ஒரு கிளர்ச்சியை நடத்தியது. உழைக்கும் மக்களின் அரசியல் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக நடத்தப்பட்டதாகக் கூறப்படும் இந்தக் கிளர்ச்சிகளில் 1917 இல் இருபத்தையாயிரம் இளைஞர்களும் 1989 இல் எழுபதினாயிரம் இளைஞர்களும் கொல்லப்பட்டனர்.

இந்த இரு சந்தர்ப்பங்களிலும் வெற்றிக்குக் கிட்டக் கூடச் செல்ல முடியாத ஜே.வி.பியினர் இறுதியில் ஜனநாயக நீரோட்டத்தில் சங்கமமாகி விட்டனர். அத்துடன் புரட்சி பற்றிய கொந்தளிப்புக்களும் உழைக்கும் மக்களின் அரசியல் அதிகாரம் பற்றியும் தொய்வான கொள்கைகளும் காற்றில் பறந்து விட்டன. காலப்போக்கில் 1971ல் எந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு எதிராகப் போராடினார்களோ அந்தக் கட்சியின் அரசியல் பங்காளிகளாகவும் மாறிவிட்டனர். அதன் பின்பு அந்தக் கட்சியுடன் முரண்பட்டு வெளியேறி சரத் பொன்சேகாவின் ஜனநாயகக் கட்சியுடன் இணைந்து கொண்டனர்.

முதலாளித்துவக் கண்ணோட்டம் கொண்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்த ஜேவி.பியினர் தற்சமயம் ஒரு இராணுவ சர்வதிகார பார்வை கொண்ட சரத்பொன்சேகாவுடன் இணைந்து விட்டனர்.

இங்கு தான் நாம் இவர்களின் முதலாளித்துவ எதிர்ப்புப் பற்றியும் உழைக்கும் மக்களின் அரசியல் அதிகாரம் பற்றியும் கேள்வி எழுப்ப வேண்டியவர்களாயுள்ளோம்.

ஆனாலும் அவர்கள் இன்னமும் செங்கொடிகளை ஏந்தியவர்களாக தம்மை ஒரு இடதுசாரி அமைப்பு என இனம் காட்டி வருகின்றனர். அதே வேளையில் மாணவர்களை அணிதிரட்டி சில போராட்டங்களை நடத்துவதையும் மறுத்து விட முடியாது.

எனினும் அவர்கள் வார்த்தைகளில் இடதுசாரிகளாகவும் நடைமுறையில் முதலாளித்துவ சக்திகளுடன் சமரசம் செய்து கொள்பவர்களாகவுமே செயற்பட்டு வருகின்றனர். அண்மையில் ஜே.வி.பி தலைவர் அனுரகுமார திசநாயக்கா கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் ஆற்றிய உரை இவர்களின் போலியான மாக்ஸிஸ முன் வைப்புக்களை அம்பலப்படுத்தியுள்ளது.

இலங்கையின் தேசியத்தை மாசுபடுத்த எவரையும் அனுமதிக்க முடியாது எனவும் சிங்கள இனவாதமும் ,தமிழ் இனவாதமும் ஒன்றையொன்று போஷித்து வளர்க்கின்றன எனவும் தெரிவித்திருந்தார் அவர்.

முதலாளித்துவ அரசியல் அதிகார பீடத்தினர் தமது அதிகாரத்துக்கும் சுரண்டலுக்கும் பின்னால் பெரும்பான்மை இன மக்களை அணி திரட்டப் பாவிக்கும் ஆயுதம் தான் பேரினவாதம். அப்படிப் பேரினவாதம் மேலெழுந்து இன ஒடுக்குமுறை கட்டவிழ்த்து விடப்படும் போது அதற்கு எதிராக வெடிப்பவையே உரிமைப் போராட்டங்கள். உழைக்கும் மக்கள் எவ்வாறு தம் மீது திணிக்கப்படும் ஒடுக்கு முறைகளுக்கு எதிராக உரிமைப் போராட்டங்களை முன்னெடுக்கின்றனரோ அவ்வாறே ஒரு இனத்தின் மீதான ஒடுக்கு முறைக்கு எதிரான போராட்டமும் உரிமைப் போராட்டமே. இப்படியான தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை தமிழ் இன வாதம் எனப் பெயர் சூட்டுமளவுக்கு ஜே.வி.பி முதலாளித்துவக் கட்சிகளின் பங்காளியாக மாறிவிட்டது .

கார்ல் மார்க்ஸின் பொதுவுடமை ஆவணமான கம்யூனிஸ்ட் அறிக்கையின் அறிமுக வாசகமே "சகல ஒடுக்கு முறைகளுக்கும் எதிராகப் போராடுவோம்" என்பது தான். ஏனெனில் இன,மத தேசிய ஒடுக்குமுறைகள் என அனைத்து ஒடுக்கு முறைகளுமே வர்க்க ஒடுக்குமுறையின் வெவ்வேறு முகங்களே.

இந்த அடிப்படை மார்க்ஸியச் சித்தாந்தத்தின் படி தமக்கெதிரான இன ஒடுக்குமுறையை வீழ்த்த இன்று தமிழ் மக்கள் நடத்திவரும் உரிமைப்போராட்டத்தை தமிழ் இனவாதம் எனக் காண்பிக்க முனைவது செங்கொடிகளை ஏந்திக் கொண்டு அதே செங்கொடிகளுக்கு எதிராகப் போராடும் கயமைத்தனமாகும்.

ஜே.வி.பி இவ்வாறு உளறுவது இதுதான் முதல்முறையுமல்ல. ஒருகாலத்தில் இதே ஜே.வி.பி. மலையக மக்கள் அனைவரும் இந்திய விஸ்தரிப்பு வாதத்தின் கையாள்களே என்று சிங்கள இளைஞர்கள் மத்தியில் இனவாதமூட்டியது.

இலங்கையில் மிகக் கூடுதலாகச் சுரண்டப்படுபவர்கள் மலையகத் தோட்டத் தொழிலாளர்களே. அடுத்தவேளை உணவுக்கே அல்லற்படும் மலையக மக்களை இந்திய விஸ்தரிப்புவாதிகள் என நாமம் சூட்டுவது அப்பட்டமான ஒரு இனவாதக் கடுங்கோட்பாடாகும்.

அவ்வாறே 1989 ஆம் ஆண்டுக் கிளர்ச்சியின் போது இராணுவத்தினருக்கு எதிராகப் போராடினாலும் கூட இந்தியப் பொருள்களை ஜே.வி.பி புறக்கணித்தமையையும், இந்திய வர்த்தகர்களுக்கும் மலையக இளைஞர்களுக்கும் எதிராகத் தாக்குதல் நடத்தியதையும் நாம் மறந்து விட முடியாது.

அதாவது ஜே.பி.யினரின் போராட்டங்களின் போது ஏதுமறியாத் தமிழ் மக்களும் இலக்கு வைக்கப்படுகின்றனர் என்பது கடந்த கால அனுபவங்கள் தரும் பாடங்களாகும். அதாவது இவர்கள் எவ்வளவு தான் மார்க்ஸிஸம் பேசினாலும் அடிப்படையில் இவர்களும் படுமோசமான இனவாதிகளே.

சுனாமிப் பொதுக் கட்டமைப்பை பெரும் எதிர்ப்புரைகளைத் தெரிவித்து அதை இல்லாமல் செய்ததும், வடக்கையும் கிழக்கையும் பிரிப்பதில் தீவிரமாக முன்னின்று செயற்பட்டதும் இதே ஜே.வி.பியினரே என்பதை நாம் மறந்து விட முடியாது.

இப்போது சிங்களப் பேரினவாதத்தையும் தமிழ் மக்களின் உரிமைக் கோரிக்கைகளையும் ஒரே தராசில் போட்டுதமிழ் இனவாதம் எனப் புதிய கற்பிதத்தை உருவாக்க முனைகின்றனர்.

போலி மார்க்ஸிய வாதிகளை மார்க்ஸ், லெனின், மாதுசேதுங் எனச் சகல தலைவர்களும் விமர்சித்துள்ளதுடன் அவர்கள் பற்றி விழிப்பாக இருக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டனர். இன்று ஜே.வி.பி என்ற போலி மார்க்ஸிய வாதிகள் எம்முன் முகம் காட்டுகின்றனர். தமிழ் மக்கள் இவர்களை நன்கு புரிந்து வைத்திருக்கின்றனர். எனினும் சிங்கள மக்கள் இவர்களை நிராகரிப்பதன் மூலமே ஒரு உழைக்கும் மக்களின் உண்மையான அரசியல் அதிகாரத்தை உருவாக்க முடியும்.

## கொய்யா மருத்துவம்

**கொய்யா** மரத்தின் வேர்,இலைகள், பட்டை, மற்றும் செங்காய் இவைகளில் மருத்துவ குணங்கள் அடங்கியுள்ளன குடல், வயிற்றுழைவு உபாதைகளுக்கு இவை பெரிதும் குணமளிக்கின்றன.

கொய்யா மரத்தின் இலைகளை அரைத்து காயம், புண் இவற்றின் மேல் தடவினால் அவை விரைவில் ஆறிவிடும் கொய்யா இலைகள் அல்சர் மற்றும் பல் வலி என்பவற்றைப் போக்க உதவுகின்றன.

கொய்யாவுக்கு சர்க்கரையைக் குறைக்கும் தன்மையுண்டு கொய்யாக் காய்களை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் இரத்தத்திலுள்ள சர்க்கரையின் அளவு பெருமளவு குறைய வாய்ப்புகள் இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது.

கொய்யா இலைகள் மூலம் தயாரிக்கப்படும் கசாயம் இருமல் தொண்டை மற்றும் இதய சம்பந்தமான நோய்களுக்குத் தீர்வு தருகின்றது. கொய்யா மரத்தின் இளம் புதுக்கிளைகளின் மூலம் தயாரிக்கப்படும் கசாயம் காய்ச்சலைக் கட்டுப்படுத்தும்.



கொய்யா மரத்தின் கிளைகளிலிருந்து தயாரிக்கப்படும் மற்றொரு கசாயம் குழந்தைகளுக்கு வரும் மந்தம், இழுப்பு,காக்காய் வலிப்பு போன்ற வியாதிகளைப் போக்க கொடுக் கப்படுகிறது.

கொய்யா மரத்தின் சில பகுதிகளுடன் வேறு சில பொருள்களும் சேர்த்து தயாரிக்கப்படும் ஒரு கசாயத்தை அருந்தினால் பிரசவத்திற்கு பின்பு வெளியாகும் கழிவுகளை வெளியேற்ற மிகவும் உதவுவதாக சித்த மருத்துவர்கள் கூறுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீரா ஸ்ரீனிவாசன்

# மோடி யார் பக்கம்?



வெள்ளிக்கிழமை பகல் நேரம். இந்தியத் தேர்தல் முடிவுகள் முழுமையாகக்கூட அறிவிக்கப்படவில்லை. இலங்கை அதிபர் மஹிந்த ராஜபக்ஷ , மகத்தான வெற்றி பெற்று இந்தியப் பிரதமராக பொறுப்பேற்க இருக்கும் நரேந்திர மோடியை தொலைபேசியில் அழைத்து வாழ்த்தினார். இலங்கைக்கு வருமாறு நட்புடன் அழைப்பும் விடுத்தார்.

மோடியின் வெற்றி இலங்கை அரசாங்கத்துக்கும் ஒரு வெற்றி போலத்தான். கடந்த சில வருடங்களாக மத்தியில் ஆட்சி செய்த காங்கிரஸ் அரசுடன் ராஜபக் ஷ அரசுக்கு மீனவர் பிரச்சினை, வர்த்தக ரீதியான முரண்பாடுகள் எனப் பல நெருடல்கள். தமிழ்நாட்டு அரசியல் கட்சிகள், குறிப்பாக தி.மு.க.வுடன் சமீபகாலம் வரை காங்கிரஸ் வைத்திருந்த நெருங்கிய உறவும் இலங்கை அரசுக்கு பெரும் சிக்கலாகவே இருந்தது.

எதிர்பார்க்காத பா.ஜ.க.வின் இந்த இமாலய வெற்றியை அதுவும் கூட்டணி நெருக்கடிகளுக்கு



உடன்பட வேண்டிய அவசியம் இல்லாத இந்தச் சூழலைப் பார்த்து ராஜபக்ஷ அரசு ஒரு நிம்மதிப் பெருமூச்சு விட்டுக்கொண்டிருப்பதுபோல் இருக்கிறது. வைகோ போன்ற தமிழ் ஈழ ஆதரவாளர்கள் பா.ஜ.க. கூட் டணியில் இருந்தாலும்கூட, பா.ஜ.க.வின் பிரமாண்டமான வாக்குக் குவிப்பு, தமிழ்நாட்டில் அமோக வெற்றி பெற்ற ஜெயலலிதாவுக்கு தேசிய அளவில் பேரம் பேசும் சக்தியைக் குறைத்துவிட்டதாக இலங்கை அரசு நினைக்கிறது.

**எதிர்பார்க்காத பா.ஜ.க.வின் இந்த இமாலய வெற்றியை அதுவும் கூட்டணி நெருக்கடிகளுக்கு உடன்பட வேண்டிய அவசியம் இல்லாத இந்த சூழலைப் பார்த்து ராஜபக்ஷ அரசு ஒரு நிம்மதிப் பெருமூச்சு விட்டுக்கொண்டிருப்பதுபோல் இருக்கிறது. வைகோ போன்ற தமிழ் ஈழ ஆதரவாளர்கள் பா.ஜ.க. கூட் டணியில் இருந்தாலும்கூட, பா.ஜ.க.வின் பிரமாண்டமான வாக்குக் குவிப்பு, தமிழ்நாட்டில் அமோக வெற்றி பெற்ற ஜெயலலிதாவிற்கு தேசிய அளவில் பேரம் பேசும் சக்தியைக் குறைத்துவிட்டதாக இலங்கை அரசு நினைக்கிறது.**

இலங்கை அரசு சார்புடைய 'தி டெய்லி நியூஸ்' நாளிதழின் தலையங்கமும் மோடி அரசை ஆர்வமாக வரவேற்றிருக்கிறது. இந்தியத் தேர்தல் முடிவுகளை அலசிவிட்டு கடைசி வரிகளில் ஒரு முக்கிய செய்தியைப் பதிவு செய்திருக்கிறது இந்த அரசு சார்ந்த பத்திரிகையின் தலையங்கம். "மஹிந்த ராஜபக்ஷ போலவே யாரும் தடுத்து நிறுத்த முடியாத, விளையாட்டை மாற்றத் தெரிந்த (unstoppable, game changer to boot) ஒரு தலைவர் ஒருவேளை இந்தியாவுக்கும் தேவைப் பட்டிருக்கலாம். அது மோடியாக இருக்கக் கூடும்" என்று அந்தத் தலையங்கம் குறிப்பிட்டிருக்கிறது. இந்த ஒப்பீடு கவலைக்குரியது.

இலங்கை நிர்வாகத்தைப் பொறுத்தவரையில், போரை ஒரு முடிவுக்கு கொண்டுவந்த வெற்றி ராஜபக் ஷவையே சாரும். ஆனால் போர் வெற்றியைத் தொடர்ந் தும், இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தர அரசியல் தீர்வு என்பது உடனடியாக இருப்பதா கத் தெரியவில்லை. போர் முடிந்து ஐந்தாண்டுகளுக்குப் பிறகும் இலங்கை ராணுவத்தின் தலையீடு தமிழ் மக்கள் வாழும் வட மாகாணத்தில் அதிகரித்துக்கொண்டு போகிறதே தவிர, குறையவில்லை.

ராஜபக்ஷ அரசு அடிக்கடி மார் தட்டிக்கொள்ளும் வடக்கின் வளர்ச்சித் திட்டங்களோ நெடுஞ்சாலைகளின் எல்லைகளிலேயே நின்றுவிட்டதாக மக்கள் கவலை யுடன் கூறுகின்றனர். வங்கிகள் பெருகியதில், வடக்கில் ஒவ்வொரு கிராமமும் கடனில்தான் சிக்கத் தொடங்கியுள்ளன. இதில் வளர்ச்சி எங்கே? அது யாருக்காக? அதற்கு நாம் கொடுக்கிற விலை என்ன? இப்படி இங்கு எழத்தொடங்கியுள்ள பல கேள்விகளுக்கு இன்னும் எந்த விடையுமே இல்லாமல், தினசரி பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு எதிராக வேதனைப் போர் தொடுத்தபடியே இருக்கிறார்கள் பெரும்பாலான இலங்கைத் தமிழர்கள்.



கடந்த வருடம் ஜூன் மாதம் பா.ஜ.க.வின் முக்கிய தலைவர்களில் ஒருவரான ரவிசங்கர் பிரசாத் தலைமை யில் ஒரு குழு இலங்கைக்கு பயணம் செய்தது. வட மாகாணத்துக்கும் சென்று, வளர்ச்சித் திட்டங்களை யெல்லாம் பார்த்து ஆச்சரியப்பட்டது. வடக்கின் மாபெரும் வளர்ச்சித் திட்டங்களை ஏகமாகப் பாராட்டிவிட்டும் போனார்கள் அந்த குழுவினர்.


ஒருவகையில், மோடியின் இந்தத் தேர்தல் வெற்றி யும் வளர்ச்சிக்கான வாக்குறுதிக்குக் கிடைத்ததுதான். அந்த அடிப்படையில் இரு அரசாங்கங்களுக்கும் கருத்து ஒற்றுமை இருந்தாலும் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் உள்ள உறவு இனி எப்படி இருக்கும் என்று பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

இதற்கிடையே, வட மாகாணத்தை ஆளும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ராஜபக்ஷவைப் போலவே மோடி அரசாங்கத்தை உற்சாகமாக வரவேற்றிருக்கிறது. ஆக, இருபக்கமும் மோடி அரசு தங்களுக்கே சாதகமாகச் செயற்படும் என்ற நம்பிக்கையுடன் இருக்கின்றன. இதில் யாருடைய நம்பிக்கை வெல்கிறது என்பதற்குக் காலம்தான் பதில் சொல்லும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடுகாட்டுக்கு அழைப்பு

அக்கினிபுத்திரன்



அமைச்சர் டக்ளஸ்தேவானந்தாநாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கு கொள்ள வேண்டும் என அடிக்கடி வலியுறுத்துவதுண்டு.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இனப் பிரச்சினையைத் தீர்க்க விரும்பவில்லை எனவும், அதைத் தீர்க்காமல் இனப்பிரச்சினையைவைத்தே அரசியல் செய்கிறார்கள் எனவும் அவர் குற்றம் சாட்டுவதுண்டு.

இப்போது மீண்டும் அவர் ஒரு அழைப்பை விடுத்துள்ளார். இந்த அழைப்புடன் இன்னொரு மேலதிகத்தையும் சேர்த்துள்ளார். அதாவது நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் நியாயமான தீர்வு கிடைக்காவிடில் அவர் அரசாங்கத்தை விட்டு வெளியேறத் தயாராகவுள்ளாராம்.

அந்தச் சூளுரை நேர்மையானதாகவும், உண்மையானதாகவும் இருந்தால் அவர் இப்போதே அரசாங்கத்தை விட்டு வெளியேறுவதே புத்திசாலித்தனம். அதுவே நியாயமான நடவடிக்கையும் கூட. 18 ஆவது அரசியலமைப்புத் திருத்தம், திவிநெகும சட்டம் என்பன மூலம் மாகாணசபைக்கு 13 ஆவது திருத்தம் என்பன மூலம் வழங்கப்பட்ட அதிகாரங்களில் பல பறிக்கப்பட்ட போது கூட அமைச்சர் டக்ளஸ் அரசை விட்டு வெளியேறவில்லை. மாறாகத் தன் கரங்களை உயர்த்தி அரசின் திட்டமிட்ட தமிழின ஒடுக்குமுறைகளுக்கு ஆதரவும் வழங்கினார்.

இப்போது 13+ ஏற்றுக் கொள்ளப்படாவிட்டால் அரசை விட்டு வெளியேறப் போகிறேன் என்று பூச்சாண்டி காட்டியுள்ளார். 13 ஆவது திருத்தம் பல்வேறு வழிகளிலும் வலுவிழக்கச் செய்யப்பட்ட போது அரசை ஆதரித்த டக்ளஸ் ,13+ கிடைக்கவில்லை என இப்போது அரசை விட்டு வெளியேறப்போகிறாராம். இதய சுத்தியோடு அவர் இந்த வார்த்தைகளைச் சொல்லியிருந்தால், 13 ஆவது திருத்தத்தில் இருந்த கொஞ்ச நஞ்ச அதிகாரங்களும் இல்லாதொழிக்கப்பட்ட காலத்தில், அதை எதிர்த்து அமைச்சுப் பதவி என்ற எலும்புத்துண்டை தூர எறிந்துவிட்டு அவர் மக்களுக்காக வெளியே வந்திருக்கவேண்டும்.ஆனால் வரவில்லை. எலும்பின் சுவையில் மயங்கிக் கிடந்தார். இப்போது தேர்தல் காலம் நெருங்கத் தொடங்கியவுடன் தான் அமைச்சருக்குத் தன்னினம் பற்றிய நினைப்பும் ரோசமும் வந்திருக்கின்றன.

அமைச்சர் டக்ளஸ் காதுகளையும் , கண்களையும் மூடி விட்டு வாயைத் திறந்து வார்த்தைகளைக் கொட்டுவதில் தனி வல்லமைபடைத்தவர் அவர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை என்றுமே நிராகரித்ததில்லை . ஆனால் அரசும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பேசி ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்த பின்பு அந்த இணக்கப்பாட்டு விடயங்களை இரு தரப்பும் இணைந்து நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் முன் வைத்து ஒரு தீர்வை நோக்கி நகர முடியும் என்பதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு.

அவற்றை அமைச்சரின் செவிகள் கேட்பதில்லை. வாய் மட்டும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் நாடாளுமன்ற தெரிவுக் குழுவுக்கு வரவில்லையெனப் புலம்பிக் கொண்டேயிருக்கும். பாவம். அது அவரின் எஜமான விசுவாசம்!

சுனில் முனசிங்க தலைமையில் ஒரு நாடாளுமன்ற தெரிவுக்குழு இனப்பிரச்சினைக்கு தீர்வு தேடியது. எந்தப் பலனையும் எட்ட முடியவில்லை.

அமைச்சு திஸ்ஸ விதாரண தலைமையிலான சர்வகட்சிக்குழு சில பரிந்துரைகளை முன் வைத்தது. அது கிடப்பில் போடப்பட்டு விட்டது.

அரசாங்கமும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் 18 மாதங்கள் பேச்சுக்களை நடத்தின. திடீரென அதை அப்படியே அந்தரத்தில் விட்டு விட்டு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு பாய்ந்தது இலங்கை அரசு.

கடந்த காலத்தில் அமைக்கப்பட்ட தெரிவுக் குழுக்களின் ஒரேசாதனை காலத்தை இழுத்தடித்தது மட்டும் தான். அவற்றின் பரிந்துரைகளை ஏன் நடைமுறைப் படுத்தப்படவில்லை என்பதைப் பற்றிய எந்தவொரு பதிலுமில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், அரசாங்கத்துக்குமிடையே இடம் பெற்ற பேச்சுக்கள் ஏன் அரசால் கைவிடப்பட்டன என்பதற்கும் காரணங்கள் கூறப்படவில்லை.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நிலைப்பாடு தெளிவானது. நாடாளுமன்ற தெரிவுக்குழு என்பது இனப்பிரச்சினை தொடர்பாக பல்வேறு முரண்பட்ட கொள்கைகளில் பிடிவாதமாக இருப்போரைக் கொண்ட ஒரு கலங்கிய குட்டை இதில் வெறுங்கைகளால் மீன் பிடிக்க முடியாது. நிச்சயமாக ஒரு தூண்டில் தேவை.

அந்தத்தூண்டில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்புக்கும் அரசாங்கத்துக்குமிடையிலான ஒரு இணக்கப்பாட்டின் மூலமே உருவாக முடியும். அமைச்சர் டக்ளஸ் அதைப் புரியாதவரல்ல. எனவே நியாயப்படி தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நிலைப்பாட்டை அவர் ஆதரிக்க வேண்டும். ஆனால் அவர் ஆதரிக்க மாட்டார். ஜனாதிபதி விரும்பாத எந்த ஒரு சின்ன விடயத்தையும் கூட அவரின் வாய் கூட உச்சரிக்காது.இது அவரின் ஈழமக்கள் ஜனநாயக இலட்சியம். எனினும் ஒரு கேள்வி. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதி அல்ல என்பது ஜனாதிபதியின் திட்டவட்டமான கருத்து. அமைச்சர்களும் அதையே அடிக்கடி கூறி வருகின்றனர்.


அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் அதைப் பல முறை வலியுறுத்தி விட்டார். ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியில் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். அப்படியான நிலையில் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஏன் எதிர்பார்க்க வேண்டும் . தமிழ் மக்கள் சார்பில் ஈ.பி.டி.பி நாடாளுமன்ற தெரிவுக் குழுவில் கலந்து கொள்ளலாமே.

அமைச்சர் அடிக்கடி சொல்லும் 13+ அங்கு நிறைவேற்றப்பட்டால் , அதாவது 13ஆவது திருத்தத்தின் முழுமையான வடிவமும் அதற்கு மேலதிகமாகவும் சில அதிகாரங்களும் கிடைத்தால் தமிழ் மக்கள் வேண்டாமென ஒதுக்கவா போகிறார்கள்?

அதன் பின்பு அமைச்சர் டக்ளஸை தங்கள் தலைமையாக ஏற்றுக் கொள்வார்களே. எனினும் அமைச்சர் ஏன் அப்படிச் செய்யவில்லை!? இங்கு தான் உண்மைகள் அம்பலமாகின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற தெரிவுக் குழுவில் கலந்து கொள்ள மறுக்கிறது எனக் காலத்தைக் கடத்துவது. அப்படிக் கலந்து கொண்டால் தெரிவுக்குழுவைக் காட்டியே இன்னும் சில காலத்தைக் கடத்திவிட்டு இனவாதிகள் மூலம் குழப்பியடிப்பது. இது தான் அமைச்சரினதும் அவர் சார்ந்த அரசினதும் உண்மையான நோக்கம்.

அதனால் தான் அமைச்சரின் அழைப்பை சுடுகாட்டுக்கான அழைப்பு என்று திட்டவட்டமாக மக்கள் நம்புகிறார்கள். தமிழ் மக்களின் உரிமைகளுக்கு கொள்ளி வைக்கவே அவர் கூட்டமைப்பை தெரிவுக்குழுவுக்கு அழைக்கிறார். அவரும் என்ன செய்ய முடியும்? தனக்கு தெரிந்த இடத்துக்குத்தானே அழைப்பை விடுக்கமுடியும். பாவம்! அமைச்சர். தன்னைப்போலவே கூட்டமைப்பும் எலும்புக்கு ஆசைப்படும் கட்சி என்று எண்ணிவிட்டார் போலும்.

## மீசைக்காரப் பாடகி



ஒஸ்திரிய நாட்டை சேர்ந்த கொன்சிட்டா வூர்ஸ்ட் (CONCHITA WURST) என்ற பாடகி அண்மையில் நடைபெற்ற போட்டியில் 25 மில்லியன் பவுண்ட்ஸ் வென்றுள்ளார்.

25 வயதான இவர், பிறப்பில் ஒரு ஆணாக இருந்தாலும் தற்போது பெண்ணாக – ஒரு திருநங்கையாக– மாறியுள்ளார்.

தோமஸ் நிவ்ரித் என்பதே இவரது இயற் பெயர். அவர் சிறுவனாக இருக்கையில் தனிமை யில் தன்னை பெண்ணாக கருதி கொண்டு. பெண் களின் உடைகளையே விரும்பி அணிவாராம்.

அவர் இசைக்குழுவில் இருந்த போதிலும், அவர் ஸ்ரார் மேனியா என்ற ஒஸ்திரிய நாட்டு தொலைக்காட்சி நிகழ்ச்சியின் மூலம் தான் பிரபலமானார்.

25 வயதாக இருக்கையில், பெண்ணாக மாறிய இவர் தனது பெயரையும் கொன்சிட்டா என்று மாற்றிக்கொண்டார்.

எனினும் கொன்சிட்டா பெண்ணாக மாறு வதற்கு இடையூறாக இருந்தது அவரது மீசை யும், அடர்ந்த தாடியும் தான். அதனால் அவர், முதலில் பலரால் கேலி செய்யப்பட்டபோதிலும், அதைப்பற்றி கவலை கொள்ளாமல் இசைக் குழுவில் கொன்சிட்டா என்ற பெண் பெயரில் சேர்ந்து பாடல்களை தொடர்ந்து பாடிவந்தார்.

அண்மையில் நடைபெற்ற இசைப்போட் டியில் கலந்து கொண்டார் கொன்சிட்டா. மீசை தாடியுடன் பெண் ஒருவர் பாடுவது ரசிகர் களுக்கு புதுமையாக இருந்ததால் அவருடைய பாடல்களை பலத்த கரகோஷத்து டன் வர வேற்றனர்.

இறுதியில் கொன்சிட்டாவே சிறந்த பாடகி யாக தேர்ந்தெடுக்கப்பட்டு 25 மில்லியன் பவுண்ட்ஸ் பரிசினையும் பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மே 21-27, 2014
sudarolijaffna@gmail.com
சுடர் ஒளி
வாராந்த சஞ்சிகை
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 567 7609

# விற்கப்படும் கலாசாரம்

இந்த முறை தென்னிலங்கையை விடவும் வெசாக் கொண்டாட்டங்கள் களைகட்டியது யாழ்ப்பாணத்தில்தான். வழமையாகவே இரண்டு நாள்கள்தான் பெரும்பான்மை இனத்தவர்கள் வாழும் பகுதிகளில் வெசாக் கொண்டாட்டங்கள் நடைபெறுவதுண்டு. ஆனால் அதற்கு மாறாக தமிழர் பகுதிகளில் ஒருவாரத்துக்கு மேலாக வர்ண விளக்குகளின் காட்சிப்படுத்தலோடு கோலாகலமாக நடந்தேறியது வெசாக் திருவிழா.

யாழ்ப்பாணத்தவர்களும் லேசுப்பட்டவர்களல்லர். காய்ந்த மாடு கம்பிலே விழுந்ததுபோல படைத்தரப்பு வழங்கிய அன்னதானத்துக்காக நீண்ட வரிசையிலேயே நின்று, அடித்துப்பிடித்து ஒரே நாளிலேயே 10 ஆயிரம் பேர் உண்ட சாதனையை நிகழ்த்திவிட்டார்கள். இதுநாள்வரை சோற்றையே கண்ணால் காணாதவர்கள் போல படைத்தரப்பின் அன்னதானத்துக்காக ஆயிரக் கணக்கில் படையெடுத்த மக்களைப் பார்த்து அரசுக்கு மகா சந்தோஷம். ஏனென்றால் இப்படி அன்னதானம் போட்டாலே எல்லாவற்றையும் மறந்துவிட்டு தங்கள் பின்னால் தமிழர்கள் வந்துவிடுவார்கள் என்று அரசு கணக்குப்போட்டது.

ஆனாலும் எல்லோருமே சோற்றுக்காக மானத்தை அடகுவைப்பவர்கள் அல்லர் என்பதை மே - 18 படைத்தரப்புக்கு உணர்த்தியிருக்கும். இருந்தபோதிலும் வெசாக் கொண்டாட்டத்துக்கு பல்லாயிரக்கணக்கில் திரண்டதைப்போல முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கும் துணிச்சலோடு மக்கள் வீதிக்கு வந்திருந்தால் இராணுவம் செய்வதறியாது திகைத்திருக்கும். ஆனால் அப்படி பேரெழுச்சியோடு அஞ்சலிக்காவிட்டாலும் உள்ளிருந்தபடி உணர்வு பூர்வமாக நினைவேந்தவே செய்தார்கள்.

என்றைக்கும் இல்லாத மாதிரி இந்த முறை பெருமெடுப்பில் புத்தரின் துணை யாழ்ப்பாணத்திலும் என்ற மகுடவாக்கியத்தோடு படைத்தரப்பு வெசாக் கொண்டாட்டத்தை நடத்தியமைக்கு நிறையக் காரணங்கள் உண்டு.

ஒருவாரத்துக்கு வெசாக் கொண்டாட்டங்களுக்குள் தமிழ் மக்களை மூழ்கடிப்பதன் மூலம் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பற்றிய நினைவுகளுக்குள் அவர்களைப் போகவிடாமல் செய்வது முதற்காரணம்.

ஏனெனில் கேளிக்கைகள் மக்களின் மனதை வேறு திசையில் திருப்பி அவர்களின் வலிகளைத் தற்காலிகமாக மறக்கச் செய்துவிடும் என்ற எண்ணத்தை படைத்தரப்பு கொண்டிருந்தது.

இரண்டாவது காரணம் வெசாக் வெளிச்சக் கூடுகளைப் பார்ப்பதற்கு முண்டியடிக்கும் இளைஞர், யுவதிகளுக்குத் தூண்டில்போட்டு அவர்களை படைத்தரப்புக்குள் உள்வாங்குவது. அப்படித் தூண்டில்போட்டதில் 30 யுவதிகளை இராணுவத்துக்குள் இணைக்கமுடிந்தமை அரசின் யாழ்ப்பாணத்து வெசாக் கொண்டாட்டத்துக்கு கிடைத்த வெற்றியே. எங்கள் துயர்களையும், வலிகளையும் மறந்துவிட்டு கேளிக்கைக்கும், சுயநலத்துக்கும், சுகபோகத்துக்கும் நம்மையும் இனத்தையும் விற்கத்தொடங்கும் கலாசாரத்தின் அறிகுறியே இது.

# விளம்பர அலையில் விளைந்த வெற்றி



சமஸ்

மோடியின் வெற்றியை ஆயிரம் பேர் ஆயிரம் விதமாக அழைக்கலாம்; ஆயிரமாயிரம் காரணங்களையும் கூறலாம். உண்மையில் இதை மக்கள்தொடர்புக் கலைக்குக் கிடைத்த வெற்றி என்றுதான் கூறவேண்டும். நவீன அரசியல் வரலாற்றில், 2008 அமெரிக்கப் பொதுத் தேர்தலில் பாரம்பரியமான எல்லாப் பரப்புரை வழிமுறைகளுடனும் நவீனத் தொழில்நுட்பத்தின் அத்தனைக் கூறுகளையும் உள்ளடக்கி 'மாற்றம்' என்ற கோஷத்துடன் பராக் ஒபாமா கையாண்ட பரப்புரையைப் பலரும் மக்கள்தொடர்புக் கலைக்குக் கிடைத்த வெற்றியாகக் குறிப்பிடுவது உண்டு.

2014 இந்தியப் பொதுத் தேர்தலில் மோடி கையாண்ட பரப்புரைக்கு ஒபாமாதான் முன்னோடி என்றாலும், மோடியின் பரப்புரை அதைக் காட்டிலும் பிரமாண்டமானது. ஒருவகையில், வரலாற்றின் மிகப் பெரிய பரப்புரை இது.

### 3 லட்சம் கி.மீ. பயணம்

இந்தியாவின் முதல் பொதுத் தேர்தலில், நேரு மேற்கொண்ட பரப்புரைக்காக அவர் சுற்றுப்பயணத்தில் தூங்கிய நேரத்தைவிடப் பயணம் செய்த நேரம் அதிகம்; பயணம் செய்த நேரத்தைவிடப் பேசிய நேரம் அதிகம் என்பார்கள். அப்போது 40 ஆயிரம் கி.மீ. பயணம் செய்து, 300 பொதுக்கூட்டங்களில் பேசினார் நேரு. இதில் 29 ஆயிரம் கி.மீ. பயணம் வான்வழிப் பயணம்.

பிரதமர் பதவிக்கான வேட்பாளராகத் தன்னை முன்னிறுத்திக்கொண்ட மோடியின் செயற்பாடுகள் சில ஆண்டுகளுக்கு முன்பே தொடங்கிவிட்டன என்றாலும், பா.ஜ.க. பிரதமர் வேட்பாளராக அவர் அறிவிக்கப்பட்டதற்குப் பிந்தய பரப்புரை பிரமாண்டமானதுதான். 2013 செப்ரெம்பர் 15 அன்று ஹரியானாவின் ரெவாரியில் முன்னாள் இராணுவ வீரர்கள் பேரணியில் தொடங்கிய மோடியின் பரப்புரைப் பயணம், 2014 மே 10 அன்று உத்தரப் பிரதேசத்தின் பலியாவில் முடிந்தது. மோடியின் பெரும்பாலான பயணங்கள் வான்வழிப் பயணங்கள் என்றாலும், இந்த 8 மாத காலத்தில் அவர் 3 லட்சம் கி.மீ. பயணித்திருக்கிறார்.

437 பொதுக்கூட்டங் களில் நேரடியாக அவர் பேசியிருக்கிறார். தவிர, 3டி தொழில்நுட்ப உதவியுடன் நடைபெற்ற 1,350 பேரணிகளிலும் வீடியோ கொன்ஃபிரன்சிங் தொழில்நுட்ப உதவியுடன் சுமார் 4,000 ரீக்கடை விவாதங்களிலும் அவர் பங்கேற்றிருக்கிறார். இன்னும் தொலைக்காட்சிப் பேட்டிகள், ஊடகங்கள் நடத்திய விவாதங்களையும் சேர்த்தால் மொத்தம் 5,385 தேர்தல் நிகழ்ச்சிகளில் அவர் பங்கேற்றிருக்கிறார். இந்த நிகழ்ச்சிகளின் வாயிலாக இந்தக் குறிப்பிட்ட காலகட்டத்தில் 5 கோடி முதல் 10 கோடி வரையிலான மக்களை அவர் சென்றடைந்திருப்பதாகச் சொல்கிறது அவர் சார்ந்திருக்கும் பா.ஜ.க. இந்த மதிப்பீட்டை அதீதமானது என்று சொல்ல முடியாது.

### பரப்புரையில் வலைஞர்கள்

இந்தத் தேர்தலில் மோடி சமூக வலைத் தளங்களைக் கையாள்வதில் துல்லியமாகச் செயற்பட்டார். ஃபேஸ்புக்கில் 1.47 கோடி பேரும் ருவிட்டரில் 40.13 லட்சம் பேரும் அவரைப் பின்தொடர்கிறார்கள்.

வலைஞர்களின் பலத்தை எண்ணிக்கையைக் கொண்டு எடைபோடக் கூடாது. அவர்கள் ஒரு வகையில், கருத்துகளை உருவாக்குபவர்கள். சரியாகச் சொன்னால், இந்தத் தேர்தலின் விவாதப் பொருள் உருவாக்கப்பட்ட இடம் சமூக வலைத் தளங்கள்தான். ஊடகங்கள் சமூகவலைத் தளங்களின் போக்கையும், மக்கள் ஊடகங்களின் போக்கையும் பின்பற்றுபவர்கள் ஆனார்கள்.

### 5,000 கோடி விளம்பரம்

இந்தத் தேர்தலில் பா.ஜ.கவின் உத்தேசச் செலவு ரூ. 5,000 கோடி என்கிறார்கள். சிலர், விளம்பரத்துக்காக மட்டுமே அந்தக்கட்சி செலவிட்ட தொகை ரூ.5,000 கோடி என்கிறார்கள். சுதந்திர இந்தியாவின் முதல் பொதுத் தேர்தலுக்கான மொத்த செலவுடன் ஒப்பிட்டால், இது 476 மடங்கு அதிகம். இந்திய ஜனநாயகம் பணநாயகமாக்கப்படுவது நாம் எதிர்கொள்ளும் மிகப் பெரிய சவால். எனினும், தேர்தல் முடிவுகளைப் பணம் மட்டுமே தீர்மானிப்பதில்லை.

தவிர, நாட்டின் பிரதானக் கட்சியினர் எல்லோருமே இந்த விஷயத்தில் 'சமபலம்' கொண்டவர்கள் ஆகிவிட்ட நிலையில், கடும் உழைப்பும் உத்திகளுமே தேர்தல் முடிவுகளைப் பொறுத்த அளவில் முக்கிய பங்காற்றுகின்றன. அந்த வகையில், மோடியின் வரலாற்றுப் பரப்புரையுடன் ராகுல் காந்தியையோ, ஏனையோரையோ ஒப்பிட்டால், அவர்கள் மோடிக்குப் பக்கத்தில் அல்ல, தூரத்தில்கூட நிற்கவில்லை என்பதே உண்மை!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் வழங்குவார் நீதி?



ஆதங்கன்







மீண்டும் ஒருமுறை இசைப்பிரியாவின் பெயர் ஊடகங்களில் அடிபடத் தொடங்கிவிட்டது. தமிழீழத் தேசியத் தொலைக்காட்சியில் அறிவிப்பாளராகக் கடமையாற்றிய இசைப்பிரியா கொடூரமான முறையில் கொல்லப்பட்டுக்கிடக்கும் புகைப்படங்களும் காணொலிகளும் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தன. அதிலும் நிர்வாணமாக்கப்பட்ட இசைப்பிரியாவின் உடலைக்காட்டி கேலியோடும் பாலியல் வக்கிரத்தோடும் சிரித்துவிளையாடும் படையினரின் செயற்பாடு பார்ப்போரின் இரத்தத்தைக் கொதிக்கவைத்தது.

ஆனாலும் இசைப்பிரியா புலிகளின் முக்கியமான தாக்குதல்போராளி என்றும் அவர் சண்டையில்தான் கொல்லப்பட்டாரே தவிர வேறெந்த முறையிலும் அவரைப் படையினர் கொல்லவில்லை என்று சத்தியம் செய்யாத குறையாக அரசுத் தரப்பு சாதித்தது. ஆனால் கடந்த வருடம் இன்னொரு காணொலி அரசின் இந்தச் சத்தியத்தின் சீத்துவத்தைப் போட்டுடைத்தது. அதில் நீர்நிலையொன்றில் மேலாடைகள் அற்ற நிலையில் அழுதபடி இருக்கும் இசைப்பிரியாவை வெளியே வரச்சொல்லி சிப்பாய்கள் மிரட்டுகிறார்கள். ஆனாலும் மேலாடைகள் அற்ற நிலையில் இசைப்பிரியா வெளியே வர மறுக்க ஒரு சிப்பாய் வெள்ளை நிறத் துணிகொண்டு அவளைப் போர்த்துகிறான். அதன் பின்னர் அழுதபடி வரும் இசைப்பிரியாவை சுற்றிவளைத்துக்கொள்ளும் படையினர் "நீ தானே பிரபாகரனின் மகள்?" என்று அதட்டிக்கேட்கிறார்கள். அதற்கு "ஐயோ அது நானில்லை" என்று அழுதபடியே மறுதலிக்கிறாள் இசைப்பிரியா. பார்ப்போரைப் பதறவைக்கும் காணொலி, படைத்தரப்பிடம் சிக்கிய பின்னர்தான் இசைப்பிரியா பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு கொல்லப்பட்டார் என்பதை வெட்டவெளிச்சமாக்கியது.ஆனாலும் அதில் இசைப்பிரியா அழவில்லை என்று அவர் மகிழ்ச்சியாகப் படையினரோடு உரையாடுவதாகவும் வியாக்கியானப் படுத்தியது அரசு. அழுவதற்கும் சிரிப்பதற்கும் வித்தியாசம் தெரியாதவர்களே உலகத்தில் இருப்பதாக எண்ணிக்கொண்டு தன்னுடைய புளுகுமூடையை அது அவிழ்த்துவிட்டிருந்தது. ஆனாலும் நம்புவோர்தான் எவருமில்லை.

அதன் பின்னர் மெல்ல மெல்ல இசைப்பிரியாவின் பெயரை ஊடகங்களும் மக்களும் மறக்கத் தொடங்கிய காலத்தில்தான் – முள்ளிவாய்க்கால் பேரவலம் நிகழ்ந்து சரியாக 5 வருடங்கள் கழித்து – இசைப்பிரியா படையினரின் பங்கருக்குள் கைதியாக வைக்கப்பட்டிருக்கும் புகைப்படங்கள் வெளியாகி இருக்கின்றன.

இதில் தனியே இசைப்பிரியா மட்டும் நிற்கவில்லை. இன்னொரு பெண்ணும் படையின் பிடியில் சிக்கியிருக்கிறார். சுற்றிலும் குண்டுதுளைக்காத கவசங்கள் பொருத்தப்பட்ட சீருடையோடு படையினர். பின்னர் பெண்கள் இருவரும் நீர் நிறைந்த குழி ஒன்றுக்கருகில் கொண்டு செல்லப்பட்டிருக்கிறார்கள். அந்தக் குழியைச் சுற்றி நூற்றுக்கணக்கான இளைஞர்கள் உள்ளாடைகளோடும், நிர்வாணமாகவும் இருத்தப்பட்டிருக்கிறார்கள். எல்லோரின் கைகளும் பின்புறமாகக் கட்டப்பட்ட நிலையில். கண்களில் "எங்களைக் கொன்றுவிடாதீர்கள்" என்ற கெஞ்சுதல் தேங்கிக்கிடக்கிறது. அந்த இளைஞர்களிடையே இசைப்பிரியாவும் மற்றைய பெண்ணும் இருத்தப்படுகிறார்கள்.

நீர்க்குழியருகே எதற்காக அந்த இளைஞர்கள் கைகள் கட்டப்பட்டு இருத்தப்பட்டார்கள் என்றோ அங்கு இசைப்பிரியாவையும் மற்றைய பெண்ணையும் ஏன் கொண்டு சென்றார்கள் என்பது குறித்தோ சரியாக ஊகிக்க முடியாமல் இருக்கிறது. ஒருவேளை படுகொலைக்காக தேர்வு செய்யப்பட்ட பலியாடுகள் இந்தக் குழிக்குள் இருத்தப்பட்டு விசாரணை, சித்திரவதை என்பவற்றின் பின்னர் கொல்லப்பட்டிருக்கலாம் என்று புலம் பெயர் தமிழ் அமைப்புக்கள் கருத்து வெளியிட்டுள்ளன. ஏனெனில் இந்தப் புகைப்படங்களில் உள்ள இளைஞர்கள் எவரும் தற்போது உயிரோடு இருப்பதாக தகவல்கள் ஏதும் இல்லை. பலர் இன்னமும் காணாமல்போனோர் பட்டியலிலேயே நீடிக்கிறார்கள்.

அரசு ஏலவே சொன்னதைப்போன்று இசைப்பிரியா போரிலே கொல்லப்படவில்லை. மாறாக அவர் படையின ரால் பிடிக்கப்பட்டு சித்திரவதைகளின் பின்னர் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டே காவுகொள்ளப்பட்டிருக்கிறார் என்பதை இப்போது வெளியாகி உள்ள புகைப்படங்கள் ஆணித்தரமாக எடுத்துரைக்கின்றன.

இந்தப் புகைப்படங்கள் முன்னர் வெளியான புகைப்படங்களைவிடவும் மிகவும் தெளிவாகவும் தரத் தன்மை கூடியவையாகவும் உள்ளன. முன்னர் வெளியான புகைப்படங்கள் கைபேசியில் எடுக்கப்பட்டவை. ஆனால் தற்போது வெளியாகியுள்ள புகைப்படங்களின் தன்மையைப் பார்க்கும்போது அவை கமராவால் எடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது தெரிகிறது. எனவே இறுதிப்போரின்போது படைத்தரப்பால் களமுனைக்கு கூட்டிச்செல்லப்பட்ட ஊடகவியலாளர்களில் ஒருவரோ அல்லது படையினர் ஒருவரோ இந்தக் காட்சிகளைப் பகிரங்கமாகப் படம்பிடித்திருக்க வேண்டும். இப்போது அவர் தன் பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொண்ட பின்னர் பணத்தைப் பெற்றுக்கொண்டோ அல்லது மனச்சாட்சியின் உறுத்துதலாலோ இசைப்பிரியாவின் கடைசிக்கணங்கள் பற்றிய இந்தப் புகைப்படங்களை உரியவர்களிடம் சேர்ப்பித்திருக்க வேண்டும். இப்போது அவை வெளிவந்து கொஞ்சநாளாக அமுங்கிக்கிடந்த மனித உரிமை மீறல், போர்க்குற்றம், சர்வதேச விசாரணை போன்ற விடயங்களை சர்வதேசத்துக்கு ஞாபகமூட்டிவிட்டன. இனி கொஞ்சநாளைக்கு ஊடகங்களுக்குத் தீனி போடவும் சர்வதேசம் இலங்கையை நோக்கி தன்கோபத்தைக் காட்டவும் இசைப்பிரியா உதவக்கூடும். ஆனால் கொடூரமாக வேட்டையாடப்பட்ட அந்தப் பெண்ணின் சாவுக்கு யாருமே நீதியை வழங்கப்போவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப் புனல்

## தாயகம்

தாயகம் மீட்கும் கனவுடன்
தாயும் புறப்பட்டாள்.
தொட்டிலில் தூங்கிய
சேயும் புறப்பட்டாள்
தடைபோட பல நாடு-அதில்
விதியாக தமிழ் மக்கள்- எம்
இனம் பட்ட வேதனை
யார்அறிவார்?
எம் கண்ணீரை யார்
துடைப்பார்
நெருப்பினில் கருகியது
எம்மினம்
நொந்து அழுதது எம்மினம்
பட்டினியில் சுருண்டது
எம்மினம்
பார்த்திட யாருமில்லாத
எம் நிலை
அப்போது யாரும் நீதி
கூற வரவில்லை
இப்போது நீதிமன்றம்
வெளியூரில் எமக்கு எதற்கு?
அப்போதே நீதி கேட்க
வந்திருந்தால்
எப்போதே மலர்ந்திருக்கும் -
எம் இனிய தாயகம்

ரீ. காங்கேஸ்,
அக்கராயன்.

## என் இதயம்



காயப்படுத்தினாலும்
கஸ்டப்படுத்தினாலும்
இப்போதெல்லாம்
வலிப்பதேயில்லை
என் இதயத்தை
உனக்கெனக்
கொடுத்த பின்

கு.தவசீலன்,
பளை.

## அறிவு

எதிர்காலத்தின்
வாழ்க்கை
கல்வியின்
அறிவு

வசந்தமது.
கொற்றையூர்.



## மறைக்கப்படும் உண்மைகள்!

ஆதாரப்படுத்தும்
ஆவணங்களுடன்
அசுர பலத்துடன்
அரங்கேற்றப்பட்ட
அநியாயங்களை
அம்பலப்படுத்தினாலும்
அது பொய்யானதென
மறுத்துக் கூறப்படுவது
வழக்கமாகி விட்டது!

இணைக்கப்படும்
பழக்க தோஷங்களால்
வழமை போலவே
உண்மைகளைக் கண்டறியாமல்
மழுப்பப்பட்டு வருவது
இன்று நேற்றல்ல இது
தொன்றுதொட்டு நடைபெறும்
உண்மைச் சம்பவங்கள்.

சேனையூரான்,
மூதூர் கிழக்கு.

## பகட்டுக்காக

பாடசாலையில்
பாடக் கொப்பி தரும்
படைத்தளபதி!
மெய்வன்மைப் போட்டிக்கு
சீருடையில் வரும்
மினிமுகாம்மேஜர்!
அவர்களுக்கு மாலையிட்டு
அபிமானம் பெறும்
அதிபர் ஆசிரியர்!
கேணல் பதவிக்காக
கோணல் மாணவாய்ப்
போகும்
பள்ளி முதல்வர்கள்

-காவியா,
புலோலியூர்

## மனித இயந்திரம்


உலகில் மனிதனுக்கு அவசரம்
அவன் பணத்தைச் சேர்க்கவே
தினம் பறந்து திரிகிறான்
பணத்தை நம்பியே தினம்
குணத்தை இழக்கிறான்

அவன் ஓடும் வீதியில்
பலர்விழுந்து கிடக்கிறார்
யாரும் விழுந்தபோதிலும்
எவரும் தூக்கவே இல்லை
தனதுகடமையே தின்
தன் தலைக்கு மேலேயாம்

இங்கு தினமும் நடப்பது
ஓட்டப்பந்தயம்
இதில் வென்றவர் யார்?
தோற்றவர் யார்?
நீ வென்ற பின்பு
திரும்பிப் பார்க்கையில்
எத்தனையோ கனவுகள்
மிதிபட்டுக் கிடக்கும்

உன் சந்தோஷம் அனைத்தும்
சருகாகிக் கிடக்கும்
தலைமுடியின் நரைமுடிகள்
உன்னை ஏளனம் செய்யும்
பொருள் தேடி தினம்
அலைவதை நிறுத்து
வாழ்வின் பொருள் தன்னைத்
தேடிப் புறப்படு புது வழியில்

அ.அஜந்தன்.



## ஊமையாகிய உண்மைக் காதல்

மரணத்தின் நாள்களோடு
போராடுகிறேன்
மன மங்கையே
நீ எங்கே?

கடிதப் பரப்புக்களை
தேடுகிறேன்
தர்ம தேவதையே
உன் அன்பு எங்கே?

கூடு விட்டு பறந்துசெல்லும்
பூங்குயிலிடம்
என் கருத்தை
தெரிவித்திருந்தேன்
அது உன்னிடம்
என் நிலை கூறவில்லையா?

இறக்கைகள் கட்டி
பறக்க நினைத்த
மனதுக்கு
இரத்த வாள் காயம்
செய்வது சரியா?

ஊமையாகிய
உனது வார்த்தைகளால்
எனது காதல்
ஊனமாகியதே!

வே. வே. அகிலேஸ்வரன்,
மருதங்கேணியூர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலையால் அசைக்க முடியாத இலை

நம்ப முடிகிறதா? இந்தியாவின் மூன்றாவது தனிப்பெரும் கட்சி அ.தி.மு.க. தமிழ்நாடு ஒருவேளை உத்தரப் பிரதேசத்தைப் போல பெரிய மாநிலமாக 80 தொகுதிகளுடன் இருந்திருந் தால், நாட்டின் பிரதான எதிர்க் கட்சியே இன்றைக்கு அ.தி.மு.க தான் என்கிறார்கள் கட்சிக்காரர்கள். உண்மை. இது வரலாறு. எப்போதும் தமிழ்நாட்டு அரசியல் போக்கை முன்னெடுக்கும் முதல் அடியைத் தி.மு.க. தலைவர் மு.கருணாநிதிதான் எடுத்து வைப்பார் என்று சொல்லப்படுவது உண்டு. இந்த முறை சந்தேகத்துக்கே இடம் இல்லாமல் முதல் அடியை எடுத்து வைத்தார் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் ஜெயலலிதா.



அவர் முழங்கத் தொடங்கிய 'நாற்பதும் நமதே' கோஷம் தமிழக அரசியல் வரலாற்றில், மக்களவைத் தேர்தலைக் கட்சிகள் எதிர்கொள்ளும் வியூகத்தையே உடைத்தெறிந்தது. இதுவரை மக்களவைத் தேர்தல் என்றால், கூட்டணியோடு எதிர்கொள்வதை மட்டுமே வியூகமாகக் கொண்டிருந்த எல் லாக் கட்சிகளையும் தனித்துப் போட்டியிடுவதைப் பற்றியோ, சின்ன அளவிலான கூட்டணியோடு போட்டியிடுவதைப் பற் றியோ அவருடைய முடிவு யோசிக்கவைத்தது. தமிழ கத்தில் ஐந்து முனைப் போட்டி உருவாக அடித்தளம் அமைத்தவர் அவர் தான். இறுதிக் கட்டத்தில் இடதுசாரிகளை அவர் கழற்றிவிட்டுவிட்டு முழுக்கத் தனித்து இறங்கியபோது, அவருடைய முகாமில் இருப்பவர்களே கொஞ்சம் மிரண்டனர். கருத்துக் கணிப்புகள் பாதிக்குப் பாதியாக வெற்றி பிரியும் என்று கூறின. சிலர் தி.மு.க. மீண்டும் எழுச்சிபெறும் என்றெல்லாம் கூறினார்கள். எல்லாவற்றையும் தவிடுபொடியாக்கி, தமிழகத்தின் மிகப் பெரிய கட்சி எது என்பதை நிரூபித்திருக் கிறார் ஜெயலலிதா. இந்தத் தேர்தல் ஒருவகையில் ஜெயலலிதாவுக்கு ஒரே கல்லில் மூன்று மாங்காய்களைத் தந்திருக்கிறது.

1. தமிழகத்தில் திராவிடக் கட்சிகளைத் தாண்டி தேசியக் கட்சிகளால் எந்த அலையிலும் ஒன்றும் செய்ய முடியாது என்பதை அகில இந்திய அளவில் நிரூபித்திருக்கிறார்.

2. தன்னுடைய பரம வைரியான தி.மு.க வைக் கூண்டோடு காலி செய்திருக்கிறார்.

3. தன்னுடைய புதிய எதிரியான தே.மு.தி.க வையும் முற்றிலுமாக மூழ்கடித்திருக்கிறார். தமிழகத்தில் ஒவ்வொரு கட்சிக்கும் உள்ள உண்மையான பலத்தையும் பலவீனங்களையும் அவர்களுக்கே காட்டியிருக்கிறார்!

**சவால்கள்**

மின்வெட்டும், தண்ணீர் பிரச்சினையும் இப்போதே தமிழக மக்களை வாட்டி வதைத்துக் கொண்டிருந்தாலும், மூன்றாண்டுகளைத் தொடும் நிலையிலும், மக்கள் ஜெயலலிதாவுக்கு இன்னும் அவகாசம் கொடுத்திருக்கிறார்கள். மாநிலத்தில் அமைச்சர்களின் செயற்பாடுகள் மெச்சிக்கொள்ளும் அளவுக்கு இல்லை. இவையெல்லாம் சீரமைக்கப்பட வேண்டிய பிரச்சினைகள். சீரமைக் கப்படாவிட்டால், சட்டப்பேரவைத் தேர்தலில் விலை கொடுக்க வேண்டியிருக்கும்.

**பெரிய கேள்வி**

தமிழகத்தின் கடந்த கால வளர்ச்சிக்கான முக்கிய மான காரணங்களில் ஒன்று, மத்திய ஆட்சியில் தொடர்ந்து பங்கேற்று, தமிழகத்துக்கு உரிய பங்கைப் பெற்றுவந் தது. பா.ஜ.கவுடன் அ.தி.மு.க. கை கோர்ப்பது தமிழகத் துக்கான உரிய திட்டங்களையும் நிதி ஒதுக்கீட்டையும் பெற உதவும். அதேசமயம், அவர் விரும்பும் மதச்சார் பற்ற விம்பம் சிதையும். அம்மா என்ன செய்வார்?

**இவை நடக்கலாம்**

தமிழகம் முழுவதும் அம்மா உணவகங்கள், மின் தட்டுப்பாட்டைப் போக்க மின் உற்பத்தித் திட்டங்கள், மேலும் சில வெகுஜனத் திட்டங்கள் என்பன அமோக வரவேற்பைப் பெற்றுள்ளன. அதனால் ஏழைகள் குறைந்த செலவுடன் தங்கள் அடிப்படைத் தேவை களைப் பூர்த்தி செய்யக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. இவை இனியும் தொடர வேண்டும்.

**அலைவீச்சு**

மாநிலம் முழுவதும் ஒரே அலை. இலையின் அலை. அம்மா அலை. திமுகவின் குடும்ப வாரிசு அரசியலையும் ஊழல்களையும் மக்கள் இன்னும் மறக்கவில்லை. ஆட்சியின் மீது பெரிய புகார்கள் இல்லாததும் முந்தைய ஆட்சிகளைப் போல ஊழல் குற்றச்சாட்டுகள் எழாமல் பார்த்துக்கொண்டதும் கட்சி ஒட்டுக்குச் சேதாரம் ஏற்படாமல் பார்த்துக்கொண்டது என்றால், அம்மா வெகுஜனத் திட்டங்கள் ஆட்சிக்கு ஆதரவான மனநிலைக்கு மேலும் உதவின.

அ.தி.மு.க. இந்தத் தேர்தலில் தோற்ற இடங்கள் உண்மையில் சாதியும் மதமும் ஆக்கிரமித்திருக்கும் இடங்கள். ஒரு வகையில் தமிழகம் எதிர் கொள்ளும் புதிய அபாயம் இது.

**நண்பர்கள்**

தேசிய அளவில் எதிர்க் கட்சிகளில் காங்கிரஸுக்கு அடுத்து பெரிய கட்சியாக அ.தி.மு.க. உருவெடுத்திருப்பதால், டெல்லியில் ஜெயலலிதாவின் செல்வாக்கு உயரும். எதிர்க் கட்சிகள் முகாமில் அவர் சாய்வதைத் தடுக்க பா.ஜ.க. சுமுகமான உறவையே மேற்கொள்ளும். நண்பர் மோடியின் நட்பு நெருக்கடியான தருணங்களில் உதவக் கூடும்.

**எதிரிகள்**

அ.தி.மு.க வுக்கு வெளியே உள்ள ஜெயலலிதாவின் எதிரிகள் இப்போது பலவீனப்பட்டுவிட்டார்கள். கட்சிக்குள் அனேகமாக அப்படி யாரும் இல்லை. அப்படியென்றால், ஜெயலலிதாவுக்கு யார் எதிரியாகக் கூடும்? ஆம். கண்ணுக்கெட்டிய தூரம் வரை ஜெயலலிதாவுக்கு அவரேதான் எதிரியாகக் கூடும். அவர் எதிர்கொள்ளும் வழக்கு அடுத்து சமாளித்தாக வேண்டிய இன்னொரு எதிரி.

(நன்றி - த இந்து)

# வைகோ: வீழ்ந்தது ஏன்?



பா.ஜ.க. ஆட்சியில் பங்கெடுப்பவர் என்று எதிர்பார்க்கப்பட்ட வைகோ, தன் அதீத தன்னம் பிக்கை யால் விழுந்திருக்கிறார். அவரது பம்பரம் போட்டியிட்ட 7 தொகுதிகளிலும் அடி மேல் அடி வாங்கி சேதப்பட்டிருக்கிறது.

வைகோவின் இந்தச் சறுக்கலுக்கு என்ன காரணம்? விருதுநகரைத் தேர்ந்தெடுத்தது தான் அவர் செய்த முதல் தவறு. கடந்த தேர்த லில் மிகப்பெரிய கட்சியான அ.தி.மு.க. ஆதரவு டன் போட்டியிட்டும், புதிய இளைஞர் ஒருவரிடம் அவர் தோற்றுப்போன தொகுதி இது. தற்போது அவர் அங்கம் வகிக்கும் பா.ஜ.க.வுக்கும் இங்கே ஓட்டு வங்கி கிடையாது. இருந்தும் தன்னை வீழ்த்திய மக்களிடமே "இந்த முறை நான் ஜெயித்துக் காட்டுகிறேன் பார்" என்று அவர் காட்டிய அதீத தன்னம்பிக்கையே விழ்ச்சிக்கு காரணமாக அமைந்துவிட்டது.

**பாஜகவுக்கு மனஉளைச்சல்**

பா.ஜ.க. கூட்டணியில் ஏற் கனவே இருந்தவர்தான் என் றாலும், இந்த முறை மோடியை தன் தலைமேல்வைத்து வைகோ கொண்டாடியவிதம் விமர் சனத்தை ஏற்படுத்தியது. பின் னர் அவர் வெளியிட்ட தேர்தல் அறிக்கையோ பா.ஜ.க.வுக்கே மனஉளைச்சலைத் தந்தது. 'யுனைடெட் ஸ்டேட்ஸ் ஒஃப் இந்தியா' என்று நாட்டின் பெயரை மாற்றுவோம் என்று, வைகோ வின் தேர்தல் அறிக்கையில் வெளிப்பட்ட வாக்குறுதிகளைக் கண்டு பா.ஜ.க அதிர்ச்சி அடைந்தது.

"அவை எல்லாம் நடை முறைக்கு ஒத்துவராதவை" என்று மக்கள் பேசத் தொடங்கி னர். மத்திய தேருக்கு முட்டுக் கட்டையாகக் கருதி மோடி அனுதாபிகள்கூட, 7 தொகுதியி லும் பம்பரத்தைத் தவிர்த்துவிட் டனர்.

**வாக்குக்கு வழிசெய்யவில்லை**

தி.மு.க. உள்கட்சி பிரச்சினையில் எத்தனையோ பேர் தலையிட்டாலும்கூட, மு.க.அழகிரியை வீடு தேடிச் சென்று வைகோவைப் பார்த்ததை அவரது கட்சியின ரா லேயே ஜீரணித்துக்கொள்ள முடியவில்லை. இந்தச் சந்திப்பு ம.தி.மு.க.வை வீழ்த்தியே ஆக வேண்டும் என்ற வேகத்தை தி.மு.க.வினருக்கு ஏற்படுத்தியதே தவிர வாக்குக்கு வழிசெய்யவில்லை.

வாக்குப் பதிவுக்கு 2 நாள்களுக்கு முன்பு, தி.மு.க வேட்பாளர் இலங்கை சென்று ராஜபக்ஷவுடன் விருந்துண்டதாக ஒரு தகவலைத் தந்து மாட்டிக்கொண்டார். இதேபோல, "என்னைத் தோற்கடிப்பதற்காக கேரளத்தில் இருந்து பணம் வந்திருக் கிறது, ராஜபக்ஷ கும்பலிடம் இருந்தும், ஸ்டெர்லைட் நிர்வாகத்தில் இருந்தும் பணம் வந்திருக்கிறது" என்றும் வைகோ சொன்னதும் எடுபடவில்லை.

மத்தியில் மோடி தலைமையிலான பா.ஜ.க. ஆட்சி அமைந்ததும், மத்தியில் வைகோ வுக்கு முக்கிய பொறுப்பு கொடுக்கப்படும் என்று பா.ஜ.க. தலைவர் ராஜ் நாத்சிங் வாக்குறுதி கொடுத்ததும், மத்திய அமைச்சர்போல நடந்து கொண்டார் வைகோ.

கடந்த 6 ஆம் திகதி மதுரையில் ம.தி.மு.க. 21 ஆம் ஆண்டு தொடக்க விழா நடைபெற்றது. அதில் பேசிய வைகோ, "இனிமேல் காதுகுத்து, கல்யாணம் என்று சின்னச்சின்ன நிகழ்ச்சிகளுக்கு எல்லாம் என்னை அழைக்காதீர்கள். உள்ளூரில் பெரிய தலைவர்கள் இருக்கிறார்கள். அவர்களை அழைத்துக்கொள்ளுங்கள். இனி என் நேரத்தை வீணாக்காதீர்கள்" என்றார்

வாக்கு எண்ணிக்கையில், கடந்த தேர்தலைவிட 30,278 வாக்குகள் குறைவாகப் பெற்றிருக்கிறார் வைகோ. இத்தனைக்கும் மொத்த வாக்காளர் எண்ணிக்கையோ, கடந்த தேர்தலைக்காட்டிலும் 3 லட்சம் அதிகம்.

ம.தி.மு.க.வின் வாக்கு வெறும் 3.6 சதவீதம்தான் என்ற உண்மை இப்போது வெளி யாகியிருக்கிறது. இதில், பா.ஜ.க, தே.மு.தி.க.வின் பங்கையும் கழித்துவிட்டால் மிச்சம் என்ன இருக்கும் என்பதை வைகோ புரிந்து நடக்க வேண்டிய காலகட்டம் இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாபா நிகழ்த்திய அற்புதங்களைத் தரிசித்த ஹேமாட் பந்த் என்பவர் எழுதிய தொடர்

# சாயியே சரணம்

## பரவசமூட்டும் ஆன்மீகத் தொடர் – 14



### பாபாவின் எங்கும் நிறை தன்மை

1910 ஆம் ஆண்டில் தீபாவளி விடுமுறையின் போது பாபா 'துனி' க்கருகில் (நெருப்பு) அமர்ந்து குளிர்காய்ந்து கொண்டிருந்தார். பிரகாசமாக எரிந்து கொண்டிருந்த துனியில் விறகை நுழைத்தார். சிறிது நேரத்திற்குப் பின் விறகுகளை நுழைப்பதற்கு பதில் பாபா தமது கரத்தையே துனி உள்ளே நுழைத்து விட்டார். கரம் உடனே கருகி வெந்தது. இதனை வேலையாள் 'மாதவ்'வாலும், மாதவ் ராவ் தேசபண்டேயும் அவதானித்தர்கள். உடனே மாதவ் ராவ் தனது கைகளை பாபாவின் இடுப்பில் கொடுத்துச் சேர்த்து வலிந்து பின்னால் இழுத்து 'தேவா எதற்காக இங்ஙனம் செய்தீர்' என்று கேட் டார். அதற்கு பாபா, தொலை தூரத்தில் உள்ள ஏதோ ஓர் இடத்தில் ஒரு கொல்லனின் மனைவி உலைக்களத்தில் இருந்த துருத்தியில் வேலை செய்து கொணடிருந்தாள். அப்போது அவளது கணவன் அவளைக் கூப்பிட்டான். அவள் தனது இடுப்பில் குழந்தை இருப்பதை மறந்து அவசரமாக ஓடினாள். அதனால்ஊது உலைக்களத்தில்குழந்தை நழுவி விழுந்துவிட்டது. நான் உடனே உலைக்களத்தில் கையை விட்டு குழந்தையைக் காப்பாற்றினேன். எனது கரங்கள் வெந்து போனதைப் பற்றி நான் பொருட் படுத்தவில்லை. குழந்தையின் உயிர் காக்கப்பட்டதை எண்ணி நான் மகிழ்வடைகிறேன் என்றார்.

### குஷ்டரோக அடியவனின் சேவை

மாதவ்ராவ் தேச் பாண்டேயிடமிருந்து பாபாவின் கரங்கள் வெந்து போனதைக் கேள்விப்பட்ட நாணாஸாஹேப் சார்ந்தோர்கர், பம்பாயைச் சேர்ந்த புகழ்பெற்ற வைத்தியரான பரமானந்த் என்பவரை திரவ மருந்து, விண்ட் துணி, பண்டேஜ் உட்பட மருத்துவப் பொருள்களுடன் அழைத்து வந்து, கரத்தைப் பரிசோதிக்கவும், வெந்ததினால் ஏற்பட்ட தீக் காயத்துக்கு சிகிச்சை செய்யவும் பாபாவை வேண்டிக் கொண்டார்.ஆனால் பாபாவினால் இது மறுக்கப்பட்டது. அது முதற்கொண்டு பாகோஜி சிந்தே என்ற குஷ்டரோகி அடியவரால், பாபாவுக்கு சிகிச்சை செய்யப்பட்டு வந்தது. வெந்து போன இடத்தை நெய் போட்டு நன்றாகத் தேய்த்து விட்டு ஒரு இலையை அதன் மீது வைத்துக் கட்டி விடுவது அவரது சிகிச்சையாகும். நானாஸா ஹேப் பலமுறை பாபாவிடம் அந்தக் கட்டை நீக்கி விட்டு வைத்தியர் பரமானந்தை காயத்தைச் சோதிக்கவும் சிகிச்சை செய்யவும், குணப்படுத்தவும் (அது விரைவில் குணப்படும் எண்ணத்துடன்) கேட்டுக் கொண்டார். வைத்தியர் பரமானந்தும் அதையொப்ப பல வேண்டுகோள் செய்தார். 'அல்லா'வே அவரது மருத்துவர் என்று கூறி பாபா மறுத்து விட் டார். அவரைத் தமது கையைச் சோதிக்க அனுமதிக்கவேயில்லை. வைத்தியர் பரமானந்தின் மருந்துகள் சீரடியில் எடுபடவே இல்லை. ஆனால் வைத்தியருக்கு பாபாவின் தரிசனத்தைப பெறும்படியான நல்ல அதிஷ்டம் இருந்தது. தினந்தோறும் பாகோஜி, அவர் கரத்திற்குச் சிகிச்சை செய்ய அனுதிக்கப்பட்டார். சில நாட்களுக்குப் பின் கரம் குணப்படுத்தப்பட்டது. அனைவரும் மகிழ்ச்சியுற்றனர். ஏதோ இலேசான வலி இன்னும் இருந்திருக்குமோ இல்லையோ என்பதை நாம் அறியோம். தினந்தோறும் பாகோஜி தனது நியதிப்படி கட்டுகளைத் தளர்த்தி, நெய்யினால் அதை நன்றாக மீண்டும் தேய்த்து , அழுத்திக் கட்டுப் போடுவார். இது பாபாவின் மஹாசமாதி வரை நடைபெற்றது. அவருக்கு இந்தச் சிகிச்சை உண்மையில் தேவையிருக்கவில்லை. ஆனால் தமது அடியவர் மீதுள்ள அன்பின் காரணத்தால் பாகோஜினது உபாச னையை (சேவையை) முழுவதுமாகத் தடையின்றி நடத்த அனுமதித்தார். பாபா லெண்டித் தோட்டத்திற்குப் புறப்பட்டபோது பாகோஜி. அவருக்குத் குடைபிடித்து அவருடன் கூடச் சென்றார். துனிக்கருகிலுள்ள கம்பத்தருகில் பாபா அமர்ந்ததும் பாகோஜி, தனது சேவையை ஆரம்பித்தார். பாகோஜி முந்திய ஜென்மத்தில் தீவினையாளர். அவர் குஷ்ட ரோகத்தால் அவதியுற்றுக் கொண்டிருந்தார். அவரது கைகள் சுருங்கியிருந்தன. அவர் உடம்பு முழுவதும் கீழாகி, மோசமாக நாற்றம் அடித்தது. வெளியில் அவர் துரதிஷ்டசாலி யாகருப்பதைப் போல் தோன்றினாலும், அவர் மிகவும் அதிர்டஷ்சாலியாகவும் மகிழ்ச்சியுள்ளவராகவும் இருந்தார். ஏனெனில் அவரே பாபாவின் முதன்மையான சேவகர். பாபாவின் நட்பினால் உண்டாகும் நன்மைகளை அடைந்தார்.

### குழந்தை காபாடேயின் பிளேக் வியாதி

அமராவதியைச் சேர்ந்த காதாஸாஹேப் காபர்டேயின் மனைவி சீரடியில் தன் இளம் புதல்வனுடன் சில நாட்கள் தங்கியிருந்தார். அப்போது அவள் புதல்வனுக்கு அதிக காய்ச்சல் வந்து அது நெறிகட்டி பிளேக்காகப் பெரியதானது. தாயார் மிகுந்த மனவேதனையடைந்தாள். பின்பு அமராவதிக்குச் செல்ல நினைத்து, பாபா வழக்கமாக மாலையில் சுற்று வரும்போது, அவர் வாடாவுக்கு (சமாதி மந்திர்) அருகில் வந்து கொண்டிருக்கையில் அவருடைய அனுமதியைப் பெறுவதற்காகப் பக்கத்தில் சென்று நடுங்கும் குரலில் தனது இளம் புத்திரன் பிளேக்கால் பீடிக்கப்பட்டிருப்பதை அவள் அறிவித்தாள். பாபா அவளிடம் அன்பாகவும், மிருதுவாகவும் 'வானம் மேகங்களால் சூழப்பட்டிருக்கிறது. அவைகள் உருகி ஒடிவிடும். எல்லாம் எளிதாகவும் , தூயதாகவும் ஆகிவிடும்' என்று கூறினார். இவ்வாறு கூறிக் கொண்டே தமது கஃப்னி உடையை இடுப்பு வரை தூக்கி அங்கு பிரசன்னமாயிருந்த அனைவருக்கும் நன்றாகப் பெரிதாக முட்டை அளவிற்குத் தோன்றிய நான்கு பிளேக் கட்டிகளைத் காண்பித்து 'பாருங்கள் எனது அடியவர்களுக்காக நான் எங்ஙனம் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. அவர்களது கஷ்டங்களெல்லாம் எனதேயாகும்' என்றார். இந்தச் சிறப்பான அசாதாரண செயலை (லீலை) மக்கள் கண்ணுற்று, பாபா தங்கள் அடியவர்களின் துன்பங்களைத் தாங்குகிறார்கள் என்று உறுதியடைந்தனர்.


### பண்டரீபுரத்துக்கு விஜயம்

'கான்தேசி' இல் உள்ள நந்துர்பாரின மம்லத்தார் பாபாவின் பெரும் அடியவர். அவருக்குப் பண்டரீபுரத்துக்கு மாற்றலாகும் உத்தரவு வந்தது. சாயிபாபாவிடம் அவர் கொண்டுள்ள பக்தியினால் பூலோக வைகுண்டம் என்றழைக்கப்படும் பண்டரீபுரத்துக்குப் போய்த் தங்க உத்தரவு கிடைத்திருக்கிறது. நானாஸாஹேப் அவசரமாக வேலையை ஒப்புக்கொள்ள வேண்டிய கட்டாயம் இருந்ததால் அவர் அவ்விடத்திற்கு உடனே ஒருவருக்கும் தெரிவிக்காமலும், எழுதாமலும் புறப்பட்டார். அவர் தனது பண்டரீபுரமான சீரடிக்கு, ஒரு திடீர் விஜயம் செய்ய விரும்பினார். தமது விட்டோபா (சாயிபாபா) வைப் பார்த்து வணக்கம் தெரிவித்த பின்னர் புறப் பட எண்ணினார். ஒருவரும் , நானாஸா ஹேப் சீரடிக்குப் போவார் என்று கனவு கூடக் காணவில்லை. ஆனால் சாயிபாபா இதை அனைத்தையும் அறிவார். ஏனெனில் அவர் கண்கள் எங்கும் வியாபித்திருந்தன. (சர்வாந்தர்யாமி) சீரடியிலிருந்து சில மைல்கள் உள்ள நிங்காங்வை நானாஸாஹேப் அடைந்தபோது சீரடியில் மசூதியில் ஒரு பரபரப்பு ஏற்பட்டது. பாபா உட்கார்ந்து கொண்டு, மஹால்ஸாபதி , அப்பாசிந்தே, காசிராம் இவர்களுடன் பேசிக்கொண்டிருக்கையில், திடீரென பாபா, 'நாம் நால்வரும் பஜனை செய்வோம், பண்டரிபுரத்தின் கதவுகள் திறந்திருக்கின்றன. நாம் மகிழ்ச்சியாகப் பாடுவோம் என்றார்.

அப்போது கோஷ்டியாக அவர்கள் பாடத் தொடங்கின்ர். அதன் பல்லவி 'நான் பண்டரீ புரத்துக்குப் போக வேண்டும்நான் அங்கே தங்க வேண்டும். ஏனெனில் அதுவே எனது பரமாவின் வீடு'. பாபா பாடினார். அடியவர்களும் அவரைத் தொடர்ந்து பாடினர். சிறிது நேரத்தில் நானாஸாஹேப் தனது குடும்பத்துடன் வந்து பாபாவின் முன்னால் வீழ்ந்து பணிந்து அவரைத் தங்களுடன் பண்டரீபுரத்துக்கு வரவும், அங்கு தங்களுடன் தங்கும் படியும் வேண்டிக்கொண்டார். அவ்வேண்டுகோள் பாபாவுக்குத் தேவையிருக்கவில்லை. ஏனெனில் மற்ற அடியவர்கள் நானாஹேப்பிடம் பாபா ஏற்கனவே பண்டரீபுரத்திற்குப் போவதற்கும் அங்கு தங்குவதற்குமான ஊக்கத்துடன் இருப்பதாக தெரிவித்தனர். இதைக் கேட்டு நானாஸஹேப் உணர்ச்சி வசபட்டார். அவர் காலடியில் வீழ்ந்தார். பிறகு பாபாவின் அனுமதியும், ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொண்டு நானா ஸாஹேப் பண்டரீபுரத்திற்குப் புறப் பட்டார்.

(இன்னும் ஞானத்தை தேடுவோம்)

## சொற்சிலம்பம் போட்டி இல. 621



**மேலிருந்து கீழ்**

1. அயர்ச்சியால் வருவது .
2. மச்சாள்.
3. கச்சை.
4. பேய்.
5. நிணம்.
6. வீட்டின் முன்புறம் அமைந்திருப்பது.
8. கம்பு.
11. செல்வத்துக்குரியவன்.
13. வனம்.
14. விழி.
15. முன்புறத் தோற்றம்.
16. எழு தடவைகள் பத்து.
17. வேகம்.
19. பாய்.
21. தண்ணீர்.
22. பலம்.

**இடமிருந்து வலம்**

1. முழு இருட்டு நாள் .
5. வண்டி.
7. சாமர்த்தியசாலி.
9. சாப்பிடு.
10. நாடியில் வளர்வது.
11. கட்டிப்பிடி.
12. அருளாளன்.
14. வேகம்.
15. கூரையின் உச்சம்.
16. எட்டு முறை பத்து.
18. போதை தரும் பானவகையொன்று.
19. அணி.
20. மூன்று.
21. தீர்ப்பளிப்பவர்.
23. முறையீடு.
24. துண்டிக்கப்பட்ட பகுதி.

அனுப்புபவர் பெயர்:........................................

விலாசம்:........................................

........................................

கையொப்பம்:........................................

### சொற்சிலம்பம் போட்டி இல. 621

சொற்சிலம்பம் போட்டி 621ற்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2014 ஆம் ஆண்டு யூன் 04 ஆம் திகதி ஆகும். விடைகள் மற்றும் வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் முறையே யூன் 11 மற்றும் ஜீன் 18ஆம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும். முதலாவது பரிசாக ரூபா 250 உம் இரண்டாவது பரிசாக ரூபா 150 உம் மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி: **சுடர் ஒளி யாழ். அலுவலகம், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

### சொற்சிலம்பம் போட்டி இல. 619க்கான விடைகள்

**மேலிருந்து கீழ்**

1.கவசம், 2.திடம், 3.காதல், 4.மறி, 5.ஆண்டி, 8.ஆரம்பம், 10.பட்டணம், 11.கல, 12.ஓம், 13.கண்ணன், 14.கல், 16.சுபாவம், 17.அகதி, 18.சலம், 20.படு.

**இடமிருந்து வலம்**

1.கதிர்காமம், 6.வட,7.தறி, 8.ஆண், 9.சம்பல், 11.கரடி, 12.ஓலம், 13.கடகும், 15.பசு, 17.அண்ணல், 18.சம்பா, 19.கணம், 21.பழ, 22.திடல், 22.கடும்ப,

### போட்டி இல. 618இல் பரிசு பெற்றோர்

| | |
|---|---|
| 1ஆம் பரிசு | பா.கபிலன், வெற்றிலைக்கடை சந்தை. முள்ளியவளை. |
| 2ஆம் பரிசு | பா. சுவர்ணகுமார், மாவடிப்பிள்ளையார் கோவிலடி மீசாலை கிழக்கு. மீசாலை. |
| 3ஆம் பரிசு | திருமதி.பி. கஸ்தூரி, இல:- 77/2 , தொட்டியடி. விசுவமடு மேற்கு. விசுவமடு. |

### பாராட்டுப் பெறுவோர்

(1) இ. விஜயசிறி,
வேலணை கிழக்கு, வேலணை-04.

(2) பா. வசந்தன்,
இல;- 64/22 கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு-13.

(3) க. தில்லையம்பலம்,
கதிர்காம கோவிலடி, வதிரி, கரவெட்டி.

(4) சியாம் தயாளன்,
வாணிஅகம், சின்னப்பாவீதி, நவாலி, மானிப்பாய்.

(5) திருமதி மஞ்சுளா இராஜமுத்து,
பிரதேசவைத்தியசாலை, அச்சுவேலி.

(6) திருமதி ம.வளர்மதி,
ஆவரங்கால் மேற்கு, ஆவரங்கால்.

(7) வாகீசன் கோமளா,
முத்துமாரியம்மன் கோவிலடி, அல்வாய் வடக்கு அல்வாய்.

(8) இ. றொஷிந்தன்,
ஆலய வீதி, அராலி வடக்கு, வட்டுக்கோட்டை.

(9) திருமதி தி. புவனேஸ்,
நாவற்குழி கிழக்கு, கைதடி.

(10) செ. சின்னத்துரை,
இல-131, D-10, உருத்திரபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காதல் வந்தால் .....

பொதுவாக ஒரு ஆண், தான் காதலிக்கும் பெண்ணிடம் தனது காதலைத் தெரிவிப்பதே பெரிய விஷயமாக இருக்கும். அப்படியே தைரியமாக காதலை வெளிப்படுத்தி அந்தப் பெண்ணும் அதற்கு சம்மதம் சொல்லிவிட்டால்.. காதலனின் மகிழ்ச்சிக்கு அளவே இருக்காது.

ஆனால் இந்த அளவு கடந்த மகிழ்ச்சியில் சிலர் செய்து விடும் தவறுகள் அவர்களின் காதலுக்கே முற்றுப்புள்ளியாகவும் அமைந்துவிடக்கூடும்.



அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சுதான். எல்லை மீறுதல் என்பது எப்போதுமே ஆபத்துத் தரும் விஷயமே. காதலிலும் அளவுக்கு மீறுதல் என்பது அதிர்ச்சியையும், ஆபத்தையும் தந்துவிடும்.

1.முதல் முறை காதலுக்குச் சம்மதம் கிடைத்த பிறகு அடுத்த சந்திப்பின் போதே பெரும்பாலான அதாவது மிகவும் முக்கியமான விஷயங்களைப் பேசி முடிவெடுத்துக் கொள்வது நல்லது.

2.காதலர்களுக்குள் மிக நல்ல புரிதல் உண்டா கும் வரை விலை உயர்ந்த பரிசுகள் வாங்குதல், கொடுத்தல் வேண்டாம்.

3. கையெழுத்திட்டோ அல்லது புகைப்படங்களை இணைத்தோ வரும் பரிசுகளையும் பகிர்ந்து கொள் வதைத் தவிர்க்கலாம்.

4. எப்போது சந்தித்தாலும் ஒரு பரிசினை வாங்கி அன் பளிப்பாக அளிப்பதையும் தவிர்க்கலாம். ஒரு சில காலத் தில் இது முடியாமல் போகும் போது, அதற்குள் சலித்து விட்டதா என்பது போன்ற பிரச்சினை உருவாகும்.

5.காதலிக்கத் தொடங்கியதும் அடிக்கடி தொலை பேசியில் பேசிக் கொள்வது சகஜம்தான். ஆனால், ஆரம்பத்தில் நிறைய நேரம் பேசிவிட்டுப் பின்னர் பேச இயலாமல் போகும் போதும் பிரச்சினை தலை தூக்கும். அதனால் எத்தனை குறைவான நேரம் பேச முடியுமோ அவ்வளவு குறைவான நேரத்தை மட்டும் பேசுங்கள்.

6.எதையாவது பேசவேண்டும் என தேவையில்லாத தகவல்களைச் சொல்வதும் ஆபத்தாகவே முடியும். ஆரம்பத்திலேயே தேவையில்லாத சில விஷயங்களைப் பேசுவதைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

7.ஆரம்பத்தில் பொதுவான விருப்பங்கள், வெறுப்பு கள், நண்பர்கள், பழக்க வழக்கங்கள் போன்றவற் றையும், அதையும் கடந்து பொதுவான நாட்டு நடப்பு களையும் பற்றிப் பேசலாம்.

# காதல் தந்திரம்

காதலிப்பதை விட, காதலிப்பவரிடம் சென்று 'நான் உன்னைக் காதலிக்கிறேன்' என்று கூறுவதுதான் மிக வும் கடினம். அதைச் செய்து விட்டால் காதலில் நீங்கள் பாதிக்கிணற்றை தாண்டி விட்டீர்கள் என்றுதான் அர்த்தம்.

நீங்கள் காதலிப்பவரிடம் உங்கள் காதலைச் சொல்ல எத்தனையோ வழிகள் உள்ளன. தற்போதெல்லாம் செல்போன் இருப்பதால் எளிதாகக் காதலைச் சொல்லும் வேலை நடந்து விடுகிறது.

ஆனாலும் எத்தனை பேருக்குத்தான் செல்பேசியில் தொடர்பு கொண்டு காதலைச் சொல்லத் தைரியம் இருக் கும்? அப்படித் தைரியம் இல்லாதவர்கள் சில தந்திர மான குறுந்தகவல்களை அனுப்பி அவர்களது மனதில் என்ன இருக்கிறது என்பதை அறிந்து கொள்ளலாம்.

சில நகைச்சுவையான எஸ்.எம்.எஸ்.களை அனுப்பி வையுங்கள். பிறகு பாருங்கள் அதற்கான பதில் எப்படி இருக்கிறது என்று... உதாரணத்துக்கு அப்படிப்பட்ட சில குறுஞ்செய்திகளை இங்கே தருகின்றோம் -


**எஸ்.எம்.எஸ் 1 -**

ஒரு இளைஞனும், பெண்ணும் கண்ணாமூச்சி ஆடுகிறார்கள். அப்போது பையன் ஒளிந்து கொள் கிறான், பெண் தேடுகிறாள்.

பெண் தேடிக் கொண்டிருக்கும் போது அந்த இளை ஞன் செல்பேசியில் பெண்ணுக்கு ஒரு குறுஞ்செய்தியை அனுப்புகிறான்.அது இதுதான் -



**ஒரு வேளை நீ என்னைக் கண்டுபிடித்து விட்டால் நீ என்னைக் காதலிக்கிறாய். நானும் உன்னைக் காதலிக்கிறேன் என்று அர்த்தம். ஆனால் உன்னால் என்னைக் கண்டுபிடிக்க முடியாவிட்டால் பரவா யில்லை.. நான் காரின் பின்புறத்தில் தான் ஒளிந் திருக்கிறேன். வா வந்து என்னை கண்டுபிடி.**



**எஸ்.எம்.எஸ் 2 -**

**சிலர் நமக்கு அழும் கண்ணீரையும், சிரிக்கும் புன்னகையையும் கொடுப்பார்கள். ஆனால் உன்னால் மட்டுமே அழும் புன்னகையையும், சிரிக்கும் கண்ணீ ரையும் அளிக்க முடிகிறது.**

**எஸ்.எம்.எஸ் 3 -**

**என்னிடம் இருந்த இதயம் தற்போது உன்னிடம் சென்றுவிட்டது. பத்திரமாகப் பார்த்துக்கொள் இரண்டு இதயங்களையும். இரண்டையும் உன்னால் பார்த்துக் கொள்ள முடியாவிட்டால் உன்னுடையதை என்னிடம் கொடு.**

**எஸ்.எம்.எஸ் 4 -**

**இந்த எஸ்.எம்.எஸ்ஸை நீ படித்தால் நீ என்னைக் காதலிக்கிறாய் என்று அர்த்தம். அப்படியில்லாமல் அழித்துவிட்டால் நீ என்னை நினைத்துக் கொண்டி ருக்கிறாய் என்று அர்த்தம். இதனைப் பத்திரப்படுத்தி வைத்துக் கொண்டால், என் நினைவால் வாடுகிறாய் என்று அர்த்தம். இதற்குப் பதில் அனுப்பினால் மேற்கூறிய அனைத்தும் உண்மை என்று அர்த்தம். ஒரு வேளை இதனை மறுத்தால் நீ எனக்குச் சொந்தம் என்று அர்த்தம். இதில் எதைச் செய்ய போகிறாய்?**




## டாடி மம்மி வீட்டில் இல்லை...

தன் காதலியை ஒருநாளாவது தனிமையில் சந்திக்க அவனுக்கு பெரு விருப்பம். அதனால் "உன் வீட்டில் யாரும் இல்லையென்றால் எனக்கு முன்கூட்டியே சொல்லு. நான் வருகிறேன்" என்று அவளுக்குச் சொல்லிவைத்திருந்தான். ஒருநாள் காதலியிடம் இருந்து போன் வந்தது .

"நாளைக்கு என் வீட்டுக்கு நீ வரலாம். வீட்டில் யாருமே இருக்க மாட்டார்கள்" என்று சொன்னாள். அவனுக்கு சந்தோசத்தில் என்ன செய்வதென்றே தெரியவில்லை. அடுத்தநாள் எப்போது விடியும் என்று காத்திருந்தான். விடிந்தவுடனேயே

காதலன் நிறையக் கனவுகளோடு காதலியின் வீட்டுக்குச் சென்றான்.

காதலி சொன்னது போலவே வீட்டில் யாருமே இல்லை.

வாசலில் பூட்டு தொங்கியது. அவன் காதலி உட்பட வீட்டில் உள்ளவர்கள் அனைவரும் கோயி லுக்கு போன செய்தியைப் பின்னர்தான் அறிந்து கொண்டான். தன்னைக் காதலி செல்லமாக ஏமாற்றிவிட்டதை எண்ணி வெட்கத்தில் தலை குனிந்தான்.

## ஈரடியில் இதயங்கள் பற்றி...! 8

இரண்டே வரிகளில் உலகின் அத்தனை விடயங்களையும் அடக்கிய திருக்குறளில் காமத்துப் பாலை யாரும் பெரிதாகக் கண்டுகொள்வதில்லை. ஆனால் எந்தக் காலக் காதலுக்கும் பொருந்தக்கூடிய கருத்துக்களை அது கொண்டுள்ளது. வள்ளுவர் எழுதிய காதல் குறள்களுக்கு நவீன கவிதைவடிவில் பொருள் சொல்லும் ஒரு புதிய முயற்சியே இந்தப் பகுதி.

குறள் 1118:
மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல்
காதலை வாழி மதி.

அவளுக்கு இணையாக
அழகானால் நிலவை
காதலிப்பது பற்றியும்
சற்று யோசிக்கலாம்.

குறள் 1119:
மலரன்ன கண்ணாள் முகமொத்தி யாயின்
பலர்காணத் தோன்றல் மதி.

பிரபஞ்ச அழகிப் போட்டியில்
பேரழகி அவளை வென்றி
அப்பாவி நிலவுக்குத் தேவை
எவர் கண்ணும் படா பர்தா.

— சரவணா கார்த்திகேயன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கௌதம் மேனன் இயக்கத்தில் அஜித்தின் புதிய படத்தில் ஜோடியாக அனுஷ்கா நடிக்கிறார். இதன் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடந்து வருகிறது.

இந்த படத்துக்கு என்ன தலைப்பு வைப்பது என்று அஜித்துடன் கௌதம் மேனன் ஆலோசித்ததில் நிறைய பெயர்கள் பரிசீலிக்கப்பட்டது. இறுதியில் 'சத்யா' என்ற பெயரை தேர்வு செய்துள்ளதாக கூறப்படுகிறது. அஜித் சத்யா என்ற பெயரில் நடிப்பதாகவும் எனவே அதையே தலைப்பாக தேர்வு செய்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

இப்படத்தில் அஜித்துடன் விவேக் இணைந்து நடிக்கிறார். அஜித்துடன் இணைந்து நடிப்பது சுலபமாக இருக்கிறது என்று விவேக் தனது டுவிட்டர் பக்கத்தில் கூறியுள்ளார். மேலும் கௌதம் மேனனுடன் நான் இப்படத்தில் இணைந்தது அழகான அனுபவம் என்றும் கூறியுள்ளார். விவேக் கதாநாயகனாக நடித்துள்ள 'நான் தான் பாலா' படம் ஜூன் 6ஆம் திகதி வெளியாகிறது.

## அஜித்துடன் நடிப்பது சுலபம் - விவேக்





## கேன்ஸ் திரைப்பட விழாவில் கமல்

ஆண்டு தோறும் பிரான்சில் உள்ள கேன்ஸ் நகரில் உலகத் திரைப்பட விழா நடைபெற்றுவருகிறது. இது சர்வதேச அளவில் முக்கியமான திரைப்பட விழா ஆகும். இதில் கலந்து கொள்வதை உலகம் முழுவதும் உள்ள நடிகர் நடிகைகள் பெருமையாக கருதுகிறார்கள்.

இந்த விழாவுக்கு ஹிந்தி நடிகர் நடிகைகள் அழைக்கப்பட்டு சிறந்த வரவேற்பு அளிக்கப்படுவது வழக்கம். இந்த திரைப்பட விழாவில் கலந்து கொள்ள கமலஹாசன் அங்கு சென்றுள்ளார்.

இப்படவிழாவில் கலந்துகொள்வது குறித்து கமலஹாசன் கூறுகையில், 'கேனஸ் பட விழாவுக்கு செல்லும் இந்தியப் பிரதிநிதிகள் குழுவுக்கு தலைமை பொறுப்பு ஏற்று செல்வதை பெருமை யாக கருதுகிறேன்.


இன்றைய இந்திய சினிமாதுறை குறித்து அந்த விழாவில் பேச எனக்கு கிடைத்த வாய்ப்பாக இதை கருதுகிறேன்' என்றார்.



## இருவேடங்களில் சரத்குமார்

இரு வேடங்களில் சரத்குமார் நடிக்கு... படம் 'சண்டமாருதம்'. ...னை பிரேம்ஸ் சார்பில் சரத்குமார், ராதிகா சர... லிஸ்டின் ஸ்டீபன் இணைந்து தயாரிக்கி... ஏ.வெங்கடேஷ் இயக்குகிறார். ஜேம்ஸ் ... இசையமைக்கிறார்.

படத்தின் தொடக்க விழாவில் ந... சரத்குமார், ராம்கி, அருண்விஜய், அ... ஸ்ரீகாந்த், நடிகைகள் நிரோஷா, ... ராதிகா சரத்குமார், தயாரிப்பாளர்கள் க... தாணு, டி.சிவா, ஏ.எல்.தேனப்பன் உள்... கலந்து கொண்டனர். இதுவரை...



படங்களில் சுப்ரீம் ஸ்டார் என்ற அ... யுடன் அழைக்கப்பட்ட சரத்குமார், இந்த... மூலம் புரட்சித் திலகம் என்ற அடைமொ... வருகிறார்.

இந்தப்படம் குறித்து சரத்குமார் கூற... சண்டமாருதம் படத்தில் எனது மு... மாதிரி மிகவும் ஆவலோடு நடித்து வரு... நீண்ட நாள் கழித்து வில்லன் பாத்... நடிப்பது மகிழ்ச்சியை தருகிறது என்று...


## விரைவில் 'உன் சமையல் அறையில்'



ஆஷிக் அபு இயக்கத்தில் பிரகாஷ்ராஜ் தயாரிப்பில் வெளிவர இருக்கும் படம் உன் சமயலறையில்.

இந்தப் படத்தில் பிரகாஷ்ராஜ் மற்றும் அவருக்கு ஜோடியாக முதன் முதலாக புன்னகை அரசி சினேகா நடித்துள்ளார். மேலும் உன் சமயலறையில் படம் லால், ஸ்வேதா மேனன் நடிப்பில் வெளிவந்த 'சால்ட் அன்ட் பெப்பர்' என்ற மலையாளப் படத்தின் தழுவல் ஆகும்.

இப்படம் ஜூன் 6ஆம் திகதி வெளிவர இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இப்படம் தெலுங்கிலும், கன்னடத்திலும் வெளியாகவுள்ளது.



## காற்று வாங்கப் போனேன்...

விஜய்யை வைத்து ஒரு படத்தை இயக்கவிருந்தார் கௌதம் மேனன். ஆனால், விஜய் முழுக்கதையையும் சொன்னால்தான் நடிப்பது பற்றி நான் முடிவு சொல்ல முடியும் என்று சொன்னதால் அவர்களது கூட்டணி உடைந்தது.

அதையடுத்து, சூர்யாவை வைத்து படம் இயக்குவதற்காக பூஜையும் போட்டார் கௌதம். ஆனால், இவர் சொன்ன கதை சூர்யாவுக்கு பிடிக்காததால் கதையில் மாற்றம் செய்யச்சொன்னார். அதற்கு கௌதம்மேனன் உடன்படாததால அந்த கூட்டணியும் தகர்ந்தது.

தற்போது சிம்புவை வைத்து படத்தை ஆரம்பித்தார். அதற்கு 'மாறுது வானிலை' என்றுகூட பெயர் வைத்தார். ஆனால், அதே பெயரை ஏற்கனவே ஒரு நிறுவனம் பதிவு செய்து வைத்திருப்பதை அறிந்ததும், வேறு பெயரை ஆலோசித்து வந்த கௌதம்மேனன்.. இப்போது கலங்கரை விளக்கம் என்ற படத்தில், காற்று வாங்க போனேன் ஒரு கவிதை வாங்கி வந்தேன் என்று எம்.ஜிஆர் பாடிய அந்த பாடல் வரியை தனது படத்திற்கு பெயராக வைக்கப்போகிறாராம். இந்தப் பெயர் சிம்புவுக்கும் பிடித்து விட்டதாம்.அதனால் விரைவில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கவிருக்கிறார் கௌதம்.

## தனுஷ் படத்தில் 5 இயக்குநர்கள்

'ராஞ்சனா' ஹிந்தி படத்தையடுத்து மீண்டும் ஹிந்திப் படத்தில் நடிக்கிறார் தனுஷ். ஆர்.பால்கி படத்தை இயக்குகிறார். இதில் முக்கிய வேடத்தில் அமிதாப்பச்சன் நடிக்கிறார். 'ராஞ்சனா' படத்தில் பாடசாலை மாணவனாக நடித்திருந்த தனுஷ் இப்படத்தில் காதுகேளாத, வாய் பேசாத மாற்றுத்திறனாளி கதாபாத்திரத்தில் நடிக்கிறார்.

ஹிந்தியில் பிரபலமான இயக்குனர்கள் ராஜ்குமார் ஹிரானி, ரகேஷ் ஓம்பிரகாஷ் மெஹறா, கரண் ஜோஹர், அனுராக் பாசு, கவுரி ஷிண்டே ஆகிய 5 இயக்குநர்கள் இப்படத்தில் நடிக்கின்றனர்.

## பாடலாசிரியராக ஸ்ரீசாந்த்

ஐபிஎல் சூதாட்ட சர்ச்சையில் சிக்கியதால் கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்க தடை விதிக்கப்பட்ட கேரள மாநிலத்தவரான ஸ்ரீசாந்த் புதிய தமிழ் திரைப்படம் ஒன்றில் பாடலாசிரியராகவும், இசையமைப்பாளராகவும் அறிமுகமாக உள்ளார்.

தமிழ், தெலுங்கு ஆகிய இரு மொழிகளிலும் எடுக்கப்படும் 'அன்புள்ள அழகே" என்ற ஸ்ரீசாந்த் பாடல்களை எழுத உள்ளார். ஏற்கனவே ஷாருக்கானுடன் இணைந்து ஆடிய நிகழ்ச்சி ஒன்றில் ஸ்ரீசாந்த் தன்னுடைய நடனத் திறமையையும் வெளிப்படுத்தியிருந்தார்.

## கமலுடன் ஆண்...



முன்... நடிக்... நடிகை... ஆன... 2. உ... கமலு... இது... 'சினி... பார்த்... வரு... விட்... கூற... இப்... நடிகை... ஆச்ச...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ரில்

ர் நடிக்கும் புதிய
ளை ஜிக்
ாதிகா சரத்குமார்,
தயாரிக்கின்றனர்.
ஜேம்ஸ் வசந்தன்

வில் நடிகர்கள்
விஜய், அருள்நிதி,
ாஷா, ஸ்ரீப்ரியா,
ளர்கள் கலைப்புலி
பன் உள்ளிட்டோர்
துவரையிலான



ன்ற அடைமொழி
ார். இந்த படத்தின்
அடைமொழியு டன்

ார் கூறும்போது,
னது முதல் படம
த்து வருகிறேன்.
ன் பாத்திரத்தில்
என்று கூறினார்.

## நட்சத்திரப் பட்டாளங்களின் நடிப்பில் அரண்மனை

சுந்தர்.சி இயக்கத்தில் உருவாகிவரும் படம் அரண்மனை. இதில் நாயகனாக சுந்தர்.சி, வினய், சந்தானம் கதாநாயகிகளாக ஹன்சிகா மோத்வானி, ஆண்டரியா, லட்சுமிராய், நடிக்கிறார்கள் மேலும் இந்தப் படத்தில் சரவணன், கோவை சரளா, மனோபாலா, காதல்தண்டபாணி, கோட்டா சீனிவாசராவ், சித்ரா லட்சுமணன், நிதின் சத்யா மற்றும் 21 நட்சத்திர பட்டாளங்கள் நடிக்கின்றனர். தமிழ், தெலுங்கு ஆகிய இரு மொழிகளில் இந்தப் படத்தை எடுக்கிறார்கள்.

அரண்மனையில் நடக்கும் திகிலான சம்பவங்களை மையப்படுத்தி உருவாகி வரும் இப்படத்தில் அரண்மனையும் முக்கிய கதாபாத்திரமாக இருக்குமாம். இப்படத்திற்காக ஐதராபாத்திலுள்ள மணிக்கொண்டா என்ற இடத்தில் அதிக பொருட் செலவில் ஒரு அரண்மனையை கலை இயக்குனர் குருராஜ் உருவாக்கியுள்ளார். மிகப்பிரமாண்டமாக உருவாக்கப்பட்ட இந்த அரண்மனையை 400 ஊழியர்கள் 3 மாதம் இரவு பகலாக வேலை செய்து உருவாக்கினார்களாம். இப்படத்தில் சந்தானம் நகைச்சுவையில் மிரட்டியிருக்கிறார். கோவை சரளா, மனோ பாலா முதன் முதலாக ஜோடி சேர்ந்து நடித்துள்ளனர. இந்த ஜோடியும் நகைச்சுவையில் கலக்கியிருக்கிறார்கள்.

மூன்று கதாநாயகிகளும் நடிப்பிலும், பாடல் காட்சிகளிலும் ஏட்டிக்குப் போட்டியாக நடித்துள்ளார்கள்..இசையை பரத்வாஜ் அமைத்துள்ளார். இவர் இசையில் 5 பாடல்கள் உருவாகியுள்ளன. இறுதிக்கட்ட வேலைகள் முடிந்தவுடன் இப்படத்தின் பாடல்கள் விரைவில் வெளியிடப்படவுள்ளன.

## ண்டரியா

முன்னணி நாயகர்களுடன், சிறந்த பாத்திரத்தில், ஒரு படத்தில் நடிக்க சந்தர்ப்பம் கிடைப்பதையே பெரிய அதிரஷ்டமாக நடிகைகள் கருதுகின்றனர்.

ஆனால், ஆண்ட்ரியாவுக்கோ, விஸ்வரூபம், விஸ்வரூபம் - 2, உத்தம வில்லன் என, வரிசையாக மூன்று படங்களில், கமலுடன் நடிக்கும் அதிர்ஷ்டம் அடித்துள்ளது.

இதுபற்றி அவர் கூறுகையில்,

'சினிமாவில் நடிக்கத் தொடங்கியபோது, கமலின் நடிப்பை பார்த்து, வியந்த பெண் நான். அப்படிப்பட்ட என்னை, 'விஸ்வரூபம்' படத்தில் நடிக்க, அவர் அழைத்த போது, ஆடிப்போய் விட்டேன். இதை, எனக்கு கிடைத்த அதிர்ஷ்டம் என்று தான் கூற வேண்டும்.

இப்போது நான் நடிப்பில் அதிகம் தேறிவிட்டேன். எத்தனை நடிகைகளுக்கு, இப்படியான வாய்ப்பு கிடைக்கும் என ஆச்சரியப்படுகின்றார் ஆண்டரியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 3 கிராமங்களின் கதை

## நிலம் - 16

# அது ஓர் அழகிய நிலாக்காலம்

மகாலிங்கம் பத்மநாபன்

சுட்டதீவுக்கு அருகாமையில் ஒரு நிலப் பரப்பு காணப்பட்டது. அதன் மூன்று பக்கம் கடலால் சூழப்பட்டு ஒரு பக்கம் மட்டும் நீண்டபாதை போன்று நிலப் பரப்பு ஏனைய பிரதேசங்களுடன் இணைத்தது. அந்த நிலப்பரப்பில் நிறைய மேய்ச்சல் தரவை, ஒரு பகுதியில் பொட்டல் காடும், சில பகுதியில் மிக உயர்ந்த மரங்கள் நிறைந்த மேட்டுப்பகுதியும் காணப்பட்டன. கால போகம் விதைத்ததும் மூன்று கிராமத்து மாடுகளும் இந்தத் தீவில் விடப்படும். மாரி மழை பெய்ததும் தொடர்புப்பாதை நீரில் மூழ்கிவிடும். அது ஒரு தீவாக மாறிவிடும். பின்னர் அரிவி வெட்டியபின்தான் மாடுகளைக் கிராமத்துக்குக் கொண்டு செல்வர். அதுவரை பால்கறக்கவும் புதிதாக ஈனப் படும் கன்றுகளை நரிகளிடமிருந்து பாது காக்கவும் நான்கு ஐந்து பேர் முறைபோட்டு மாறி, மாறி போய்வருவர். மழை பெய்யும் பொழுது மாடுகள் மேட்டு நில மரங்களின் கீழ் ஒதுங்கி விடும். பால் கறப்போருக்காக இரண்டு மூன்று கொட்டில்கள் அமைக்கப்பட்டிருக்கும்.

இந்தத் தீவைப் பார்ப்பதற்காக இளம் வயதில் நானும் நண்பனும் சென்றோம். தீவின் உயரமான மரமொன்றில் ஏறிப்பார்த்தோம். ஒருபக்கத்தில் மாடுகள் மேய்ந்தன. இடைக்கிடை மான்களும், மரைகளும் மேய்ந்தன. அங்காங்கே பன்றிகளும் காணப்பட்டன. திடீரென ஒரு பக்கத்தில் யானைக்கூட்டம் மேய்வதும் தெரிந்தது. ஒரு எல்லையில் ஒற்றை யானையைக் கண்டோம். தனியன் யானை, தனிப்பன்றி, தனியன் குழுவன் மாடு ஏனையவற்றிலிருந்து விலகி அல்லது விலக்கப்பட்டு வாழ்பவை. மனிதரை மூர்க்கமாகத் தாக்கும் இயல்பு உடையவை. நல்லகாலம் நாங்கள் காற்று வீசும் திசையில் இல்லை. மிக அவசரமாக தீவை விட்டு நீங்கி வீடு நோக்கி நடந்தோம். வன்னியில் காடுகள் அழிக்கப்பட்டபின் இவ்வாறான இயற்கை அழகும் அழிந்துவிட்டது.

**ரங்கூன் மணியத்தார்**

இவர் பர்மாவின் ரங்கூனிலிருந்து திரும்பி வந்தவர். நீலன் ஆற்றங்கரையில் காணியைப் பெற்றுத் திருத்தி சிறந்த பண்ணையாளராகவும் உயர்ந்த மனிதப்பண்பு கொண்டவராகவும் திகழ்ந்தார். சொந்த ஊர் அளவெட்டி. இவரைக் குறிப்பிடாது மூன்று கிராமத்தின் கதை முழுமை பெறாது. ஏன் கண்டாவளைப் பிரதேசமே இவருக்குக் கடமைப்பட்டது. குஞ்சுப்பரந்தன், பெரியபரந்தன், செருக்கன், குமரபுரம், முரசுமோட்டை, கண்டாவளை, கரவெட்டித்திடல், புதிதாகத் தோன்றிய தர்மபுரம் கிராமமக்களை ஒன்றிணைத்து கரைச்சி வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தை நிறுவி அதன் தலைவராக நீண்டகாலம் ஊதியம் ஏதும் பெறாது கடமையாற்றி வளர்த்தெடுத்தவர். கொழும்பு வரை சென்று பண்டங்களைத் தரமானவையாகத் தெரிவு செய்து கொண்டுவந்து மக்களுக்கு தனியார் கடைகளை விடக் குறைந்த விலைக்கு கொடுத்தவர். அதே நேரம் சங்கத்தை இலாபகரமாகவும் நடத்திக் காட்டியவர்.

**பிளாக்கர் பொன்னம்பலம்**

இவரையும் குறிப்பிடல் பொருத்தமானது. அன்ரன் பொன்னம்பலம் என்பது இயற்பெயர். கரைச்சிக் கிராமச்சபையின் தலைவராகவும் கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கத்தின் தலைவராகவும் இருந்தவர். பெரிய பரந்தனின் தெற்குப் பக்கத்தில் எட்டாம் வாய்க்காலும், உருத்திரபுரம் வீதியும் சந்திக்கும் மூலையில் காணியைப் பெற்று தென்னஞ்சோலையும், வயல்வெளியையும் உண்டாக்கியவர். குஞ்சுப்பரந்தன் கிராமச்சபை உறுப்பினரது வாக்கும் பெரியபரந்தன் கிராமச்சபை உறுப்பினரது வாக்கும் தலைவராவதற்குத் தேவையாக இருந்தமையால் மூன்று கிராம மக்களுடன் நல்ல தொடர்புகளை வைத்திருந்தவர்.

(இன்னும் நிலம் விரியும்)



# மணல் மின்சாரம் கண்டறிந்த தமிழர்

உலகின் பெருகிவரும் மின் தேவையைப் பூர்த்தி செய்ய மணலில் இருந்து மின் சக்தி பிறந்திருக்கிறது. அதைக் கண்டு பிடித்திருப்பவர் ஒரு தமிழர்.

உலகின் எந்தக் கண்டத்திலும், கடற்கரைகளில் எளிதாகக் கிடைக்கும் மணல் தான் இதன் மூலப் பொருள். இதில் ஜிர்கானியம் ஒக்ஸைட் என்கிற இரசாயனப் பொருளைப் பிரித்து மின்சக்தியைத் தரும் ஃப்யூல் செல்லைத் தயாரிக்கலாம் என்பதை 1980இல் ஆர்தர் நான்ஸ்ட் என்பவர் கண்டு பிடித்திருந்தார். ஆனால் அதைத் தயாரிக்க பிளாட்டினம் போன்ற விலையுயர்ந்த,எளிதில் கிடைக்காத பொருள்கள் தேவைப்பட்டதால் இந்த முறைமை புழக்கத்துக்கு வரவில்லை.



இப்போது அதே முறையில் அதிக செலவில்லாமல் ஃப்யூல் செல்லை உருவாக்கும் ஒரு முறையை பத்து ஆண்டுகள் கடின ஆராய்ச்சிக்குப் பின்னர் கண்டு பிடித்திருக்கிறார் ஆர். கே. ஸ்ரீதர்.

தமிழகத்தைச் சேர்ந்த ஸ்ரீதர் தற்போது நாஸாவில் பணிபுரிந்து வருகிறார். நாஸாவின் செவ்வாய் பயணத் திட்டத்துக்கான மின் சக்தியை, ஃப்யூல் செல்முறையில் உருவாக்கும் ஆராய்ச்சியில் ஈடுபட்டு வெற்றி கண்டுள்ளார்.

பவுடரிலிருந்து பவர்என்ற திட்டத்தின் மூலம் இவர் இதை மிகப் பெரிய அளவில் மக்கள் பயன்பாட்டுக்காகத் தயாரிக்க விரும்பினார். ஆனால் இவரது ஆராய்ச்சியைத் தொடர சோதனை உற்பத்திக்கு மிகப்பெரிய முதலீடு தேவைப்பட்டது. ஆராய்ச்சியின் விபரம் அறிந்த கெலினர் பெர்கின்ஸ்ர் என்பவரின் நிறுவனம் பல மில்லியன் டாலர்கள் முதலீடாகத் தந்து ஸ்ரீதரின் தலை மையில் ஒரு தனி நிறுவனத்தை 2001 இல் தொடங்கியது. இந்த கெலினர் தான் கூகிள், ஈபே போன்ற நிறுவனங்களுக்கு முதலீடு செய்தவர். உற்பத்தித் தொடங்கியதும் தங்களுக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் கோகோகோலா, பாங்க் ஒப் அமெரிக்கா, வால் மார்ட் போன்ற பெரிய நிறுவனங்கள் அதிகளவில் பணம் தந்து இந்தத் திட்டத்துக்கு உதவி இருக்கின்றன.

சதுர வடிவ அட்டைகளை அடுக்கி இணைத்து கறுப்பு வண்ணத்தில் ஒரு செங்கல் கட்டி வடிவத்தில் இருக்கும் பெட்டி தான் இவரது கண்டு பிடிப்பு. இது ஒரு வீட்டுக்கு ஒரு வருடத்துக்கான மின்சாரத்தைத் தரும். இதுபோல பல செங்கற்களை இணைத்து தேவைகளுக்கு ஏற்ப பெரிய பெட்டிகளை உருவாக்கிக் கொள்ளலாம். அதற்கு 'புளும் சேர்வர்'என்று பெயரிட்டு இருக்கிறார்.

மின்சக்தியைச் சேமிப்பதோடு சுற்றுச்சூழல் மாசுபடாமல் இருக்க வே ண்டும் என்ற தாகத்தில் எழுந்த முயற்சியின் வெற்றி இது என்று சொல்கிறார் ஸ்ரீதர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைநழுவும் கனதிகள்..



என்னுடைய நண்பர் ஒருவரின் மகளுக்கு திருமணம் நடந்திருந்தது. என்னுடைய நீண்டகால நண்பர் என்பதால் நானும் அவ்விழாவுக்குச் சென்றிருந்தேன். மண்டபத்தில் கூட்டம் அலைமோதியது. மணமகள் பக்கம் இருந்தும் மணமகன் பக்கமிருந்தும் அதிகமான உறவுக்காரர்கள் வந்திருந்தார்கள். மணமக்களை வீடியோக்காரரும் போட்டோக்காரரும் படாதபாடு படுத்திக்கொண்டிருந்தார்கள்.

சடங்குகள் எல்லாம் முடிந்து ஒவ்வொருவராக சென்று வாழ்த்துக்கூறிவிட்டு புறப்பட்டுக்கொண்டிருந்தனர். மணப் பெண்ணினுடைய அழகுக்கலை நிபுணர் அவ்வப்போது வந்து சேலையை சரிப்பண்ணிவிட்டு போனார். ஒரு கட்டத்தில் அவர் வந்து சொன்னார்.

"நெடுக ஒவ்வொருத்தரின்ர காலிலும் தொட்டு ஆசி வாங்கிறதால சாறிய நெடுக சரிப்பண்ண வேண்டியிருக்கு. போட்டோக்கு வடிவா இருக்காது. கால தொட்டது காணும். நேரமும் போகுது போட்டோவ மட்டும் எடுங்கோ.. "

எனக்கு கண்ணைக்கட்டியது. ஒரே ஒரு கேள்வி மட்டும் அந்த ரத்தில் தொங்கிக்கொண்டிருந்தது.

திருமணம் என்பது உறவுகளிடம் இருந்து ஆசியைப் பெற்று நல்வாழ்வை ஆரம்பிப்பதற்கா.? .அல்லது அழகு என்ற பெயரில் அமர்க்களப்படுத்தி ஆயிரம் போட்டோவை எடுத்து அல்பத்தில் மாட்டிவைப்பதற்கா?

# பெண்களை இறுக்கும் சுருக்குகள்

பொம்பிளை சிரிச்சா போச்சு புகையிலை விரிச்சா போச்சு என்று முன்னொரு காலத்தில் கூற்று ஒன்று இருந்தது. அதன் பிடியில் பெற்றோர்கள் தமது பெண்குழந்தைகளுக்கு பல்வேறு கட்டுப்பாடுகளை இடுகிறார்கள். பெண்கள் கல்வியில் சிறந்து வெளியே பல்வேறு உயர் பதவிகளில் இருந்தாலும் வீடுகளில் கட்டுப்பாடுகளை எதிர்நோக்கியே தீரவேண்டும்.

வீட்டில் அம்மாவின் கோபத்துக்கும் அப்பாவின் கட்டுப்பாடுகளுக்கும் பயந்து தமது சின்னச் சின்ன ஆசைகளைக் கூட தமக்குள்ளேயே அடக்கிவைக்கமுயல்கிறார்கள். தமது எண்ணங்களை வெளியிடவும் தயங்குகிறார்கள். பெற்றோர்களும் பெண்பிள்ளைகளின் அபிலாசைகள் பற்றி தெரிந்துகொள்ளாமலேயே கட்டுப்பாடுகளை மட்டும் விதிக்கிறார்கள். இந்தநிலையில் வெளியே சிறு அளவில் ஒரு அக்கறை அல்லது பாசம் காட்டப்படும் நிலை தோன்றியதும் பெண்கள் அப்படியே உருகிவிடுகிறார்கள். அதுதான் தமது வாழ்க்கை என்று முடிவே எடுத்துவிடுகிறார்கள்.

அவர்கள் வீட்டில் செய்கின்ற சின்னச் சின்ன தவறுகளுக்கு அளவுக்கதிகமாக குத்திப்பேசுவதால் அவர்கள் பின்னாளில் செய்யப்போகின்ற பெரிய பிழைகளுக்கான அடித்தளத்தை பெற்றோர்களே நீங்கள் தான் இடுகிறீர்கள். அதைத் தவிர்க்க வீடுகளில் பெண்பிள்ளைகளுக்கு மரியாதை அளியுங்கள். அவர்களின் கருத்துக்களையும் கவனத்தில் எடுங்கள். அவர்களின் அபிலாசைகளைத் தீர்த்துவைக்க முயற்சியுங்கள். அவ்வாறு முடியவில்லையாயின் அதன் யதார்த்தம் பற்றி தெளிவாகப் புரியவையுங்கள். அதைத் தவிர்த்து அளவுக்கதிக கட்டுப்பாடுகளை ஏற்படுத்தி அவர்கள் வாழ்வைக் கெடுத்துக்கொள்ள நீங்கள் காரணமாகிவிடாதீர்கள்.



# மறுமணம் என்பது தவறா..?



ஆணும் பெண்ணும் இணைந்த வாழ்வே திருமணபந்தம். இதில் ஆணுக்கு இருக்கின்ற அதே பங்கும் அக்கறையும் பெண்ணுக்கும் இருக்கிறது. ஆனால் எதிர்பாராத விதமாக அந்த வாழ்வு இடைநடுவில் பிரச்சினைகளை எதிர்நோக்கும் போது மட்டும் ஆணும் பெண்ணும் வெவ்வேறு கோணங்களில் நோக்கப்படுவது ஏன்?

ஒரு ஆணுக்கு அவனுடைய மனைவி இறந்துவிட்டால் சிறிது காலத்தின் பின் இரண்டாவது திருமணம் செய்கிறார்கள். ஆனால் பெண்களை விதவை என்ற பெயரில் சமூகத்திலிருந்து ஒதுக்கி வைத்துவிடுகிறார்கள். தன் கணவன் இறந்துவிட்டால் அவனது மனைவி அவனுடைய குழந்தைகளுக்காகவும் குடும்பத்துக்காகவும் தனியே வாழவேண்டும். மறுமணம் என்ற பேச்சே தவறு என்கின்ற அர்த்தத்தில் நோக்கப்படுகின்றது. ஆனால் ஆணுக்கு மட்டும் மறுமணம் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

ஒரு ஆணுக்கு மறுமணம் செய்துவைக்க இவ்வளவு ஆர்வப்படும் சமூகம் பெண்களுக்கான மறுமணத்துக்கும் இன்னொரு வாழ்க்கைத்துணையை தேர்வுசெய்வதற்கும் ஏன் இவ்வளவு பின்னடிக்கிறது?



தொகுப்பு: ஸ்ருதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றின் திருப்புமுனை

சு.கோமேஸ்



தென்னிலங்கை அரசியல் சற்று சூடுபிடிக்க தொடங்கியுள்ளது. அடுத்து இடம்பெறப் போகும் தேர்தல் தென்னிலங்கையின் அரசியல் வரலாற்றைத் தீர்மானிக்கும் தேர்தல் ஒன்றாக தான் அமையப் போகிறது.

அது ஜனாதிபதித் தேர்தலாக இருந்தாலும் சரி, நாடாளுமன்றத் தேர்தலாக இருந்தாலும் சரி. ஏனென்றால் அண்மையில் நடந்து முடிந்த மாகாண சபைகளின் தேர்தல் மற்றும் கசினோ சட்டம் தொடர்பான வாக்கெடுப்பு போன்றவையினை வைத்து பார்க்கும் போது ஆட்சியிலுள்ள மஹிந்த தலைமையிலான அரசு சற்று சரியத் தொடங்கியுள்ளதை அவதானிக்க முடியும்.

சுத்தமான குடிநீர் வேண்டும், தொழில் செய்வதற்கு மானியம் வேண்டும் என்று கேட்டு போராட்டம் செய்பவர்கள் மீது துப்பாக்கிச் சன்னங்கள் மூலம் தீர்வினைக் காண நினைப்பவர்களை மக்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்

முப்பது வருட காலமாக தமிழ் மக்கள் அனுபவித்து வந்த துன்பங்களைத் தற்போது சிங்கள மக்களும் அனுபவிக்க தொடங்கி விட்டார்கள். அதாவது அன்று தமிழ் மக்களுக்கு எவ்வாறான துன்பங்களை இந்த சர்வாதிகார அரசு வழங்கியதே அதனையே இப்போது சிங்கள மக்களுக்கு வழங்குகிறது.

இதனைச் சிங்கள மக்கள் ஏற்றுக் கொள்ள போவதில்லை. போர் முடிவடைந்து ஐந்து ஆண்டுகள் கடந்து விட்டன. இந்த ஐந்து ஆண்டுகளில் நடந்த தேர்தல்களில் தென்னிலங்கையினைப் பொறுத்த வரையில் மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கமே வெற்றிவாகை சூடியிருந்தது.

இதற்கு போர் வெற்றியும் ஒரு காரணமாக இருந்து வந்துள்ளது. பயங்கரவாதம் என்று கூறி தமிழர்களின் இனவிடுதலைப் போரை அழித்த பெரும் தலைவராக மஹிந்த கடந்த ஐந்து வருடங்களாக சிங்கள மக்கள் மத்தியில் இருந்து வருகின்றார். ஆனால் இதே வெற்றி விம்பத்தை அவரால் தொடர்ந்து தக்க வைக்கமுடியாது.

நாளுக்கு நாள் அதிகரிக்கும் பொருள்களின் விலையேற்றம் தமிழ் மக்களை விடவும் சிங்கள மக்களையே அதிகம் பாதிக்கின்றது. இத்தகைய விலையேற்றங்களைச் சிங்கள மக்களால் ஏற்றுக் கொள்ள முடியாத நிலையில் அரசாங்கத்தை வீழ்த்துவதை தவிர அவர்களுக்கு வேறு வழி இல்லை,

எப்படியாவது மஹிந்த தலைமையிலான ஆட்சியாளர்களை நாட்டை விட்டு விரட்ட வேண்டும் என்ற ஆதங்கத்தில் எதிர்க் கட்சிகளும் துடித்துக் கொண்டிருக்கின்றன. அதற்கான முன்னேற்பாடு களை எதிர்க்கட்சிகள் அனைத் தும் செய்து வருகின்றன. அதற்கான முன்னேற்பாடே எதிரணிகளின் பொதுவேட்பாளர் என்ற திட்டம்.

பொதுவேட்பாளர் என்பவர் எந்தவொரு அரசியல் கட்சியையும் பிரதிபலிக்காதவராக இருக்கவேண்டும்.

அவ்வாறு முன்னிறுத்தும் போது தான் தமது கட்சி ஆதரவு வழங்கும் என ஒரு சில எதிர்க் கட்சிகள் தெரிவித்துள்ள நிலையில் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கு யாரைத்தெரிவு செய்வது என்ற இழுபறியில் எதிர்க் கட்சிகள் நிற்கின்றன

தென்னிலங்கை அரசியலில் இருந்து வரும் கருத்துக்களை வைத்துப் பார்க்கும் போது பௌத்த தேரர் ஒருவரை பொதுவேட்பாளராக நியமிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எனினும் பொது வேட்பாளராக வடக்கு முதல்வர் விக்னேஸ்வரனை நிறுத்துவது பொருத்தமாக அமையாது. ஏனெனில் இலங்கை அடிப்படையில் ஒரு பௌத்த சிங்கள நாடு. இங்கு தமிழர் ஒருவர் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் முதல்வராகவோ அல்லது நாடாளுமன்ற உறுப்பினராகவோ வரலாமே தவிர ஜனாதிபதியாக வருவது என்பது கனவில் கூட நடக்காது.

அது ஒருபுறமிருக்க அண்மைக்காலமாக நிறைவேற்று அதிகார முறைமையினை ஒழிக்க வேண்டும் என மல்வத்த பீடாதிபதிகள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இவ்வாறான ஒரு நிலைமையில் தேரர் ஒருவர் பொதுவேட்பாளராக நியமிக்கப்படும் போது அவரை சிங்கள பௌத்த மக்கள் ஆதரிப்பார்கள். அவரை கொண்டு நிறைவேற்று அதிகாரம் மற்றும் மஹிந்த ராஜபக்ஷவின் குடும்ப ஆட்சிக்கு கடைசி புள்ளி வைக்க முடியும். அவர் இந்த இரண்டையும் நிறைவேற்றியதுடன் பதவி விலகுவார். அதனை தொடர்ந்து ரணில் விக்கிரம சிங்க ஜனாதிபதியாக இருப்பார் என்பது ஐ.தே.க.வின் திட்டமாக இருக்கிறது.

நடைபெறப் போகும் தேர்தலில் மஹிந்த தலைமையிலான அரசாங்கத்தை வீழ்த்த முடியவில்லை என்றால் இலங்கையில் வரலாற்றை யாராலும் மாற்ற முடியாமல் போய்விடும்.

# முதியோருக்கு கை, கால் நடுக்கம் ஆபத்தா?

வயதானவர்களுக்கு பொதுவாக மூன்று விதமான தொல்லைகள் ஏற்படும். முதுமையின் விளைவாக உண்டாகும் கண் புரை, காது கேளாமை, கைகளில் நடுக்கம், தோல் நிறம் மாறுதல், மலச்சிக்கல் போன்றவை. அடுத்ததாக, நடுத்தர வயதில் ஆரம்பித்த உயர் ரத்த அழுத்தம், நீரிழிவு நோய், இதயத் தாக்குதல் போன்றவை முதுமையில் தொடர்கின்றன. இதுதவிர உதறுவாதம் என்ற 'பார்கின்சன்ஸ்' நோய், மறதி, சிறுநீர் கசிவு, அடிக்கடி கீழே விழுதல், எலும்பு வலிமை இழத்தல் மற்றும் சில வகையான புற்றுநோய்கள் வருகின்றன.

பொதுவாக முதுமையை பல நோய்களின் மேய்ச்சல் காடு என்பார்கள். சில நோய்கள் அறிகுறி இல்லாமல், மறைந்து காணப்படும். ஆனால், நோய்களால் ஏற்படும் தொல்லைகள் அதிகம் இருக்கும். உடல் பரிசோதனையில்தான், பிரச்சினை என்னவென்று தெரியவரும். அதனால், முதியவர்கள் கண்டிப்பாக ஆண்டுக்கு ஒருமுறை முழு உடல் பரிசோதனை செய்துகொள்ள வேண்டும். அப்போதுதான் மறைந்திருக்கும் நோய்களை ஆரம்பத்திலேயே கண்டறிந்து சிகிச்சை பெற முடியும்.

மது அருந்துபவர்கள் திடீரென்று மதுவை நிறுத்தக்கூடாது. அப்படிச் செய்தால் நடுக்கம் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. இயல்பாக முதுமையில் வரும் நடுக்கத்தால் எவ்விதமான பாதிப்பும் இல்லை. நடுக்கத்தைப் போக்க மருந்து, மாத்திரைகள் உள்ளன. அதே சமயம், நரம்பு சார்ந்த நோய்களால் ஏற்படும் உதறுவாதம் என்கிற பார்கின்சன்ஸ் நடுக்கத்திற்கு கட்டாயம் சிகிச்சை பெற வேண்டும்.

இது ஏற்பட்டால் முதலில் கையில் நடுக்கம் ஆரம்பிக்கும். வேலை செய்யும்போது, தூங்கும்போது நடுக்கம் இருக்காது. நாளடைவில் உடல் தசைகள் இறுகி மரக்கட்டைபோல ஆகிவிடும். பொறுமையாக நடப்பார்கள். சட்டையைக்கூட போட முடியாது. பேச்சு சரியாக வராது. சாப்பிட முடியாது. ஆனால், மனநிலை நன்றாக இருக்கும். இவர்களது அனைத்து வேலைகளுக்கும் மற்றவர்கள் உதவி செய்ய வேண்டும். ஆரம்பத்திலேயே கண்டுபிடித்தால் நோயின் தீவிரத்தைக் குறைக்கலாம்.

எனவே, முதுமையில் உடல் நடுக்கம் வந்த உடனே மருத்துவரிடம் சென்று அது இயல்பான நடுக்கமா அல்லது உதறுவாதம் நடுக்கமா என்று ஆலோசியுங்கள். நடுக்கத்தைப் போக்க மருந்துகள், பிசியோதெரபி சிகிச்சைகள் உள்ளன. நோய் முற்றிய நிலையில் இருப்பவர்களுக்கு அறுவை சிகிச்சை மூலமாகவும் சிகிச்சை அளித்து குணப்படுத்தலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



01

# இரைதேடும் இணையவலை

சுருதன்னி

இன்று இணையத்தளங்களின் இண்டு இடுக்கிலெல்லாம் உபயோகிக்கப்படும் தகவலூட்டம் (RSS d web fee) எனும் தொழில் நுட்பத்தினை உருவாக்கிய முக்கியப் புள்ளிகளில் ஒருவராக இணையம் கூறும் நல்லுலகிற்கு ஆரொன் ஸ்வார்ட்ஸ் அறிமுகமாகும் பொழுது அவருக்கு வயது வெறும் 14 தான். தனது ஆழ்ந்த அறிவாற்றல் மூலம் ஏதேனும் மென்பொருள் நிறுவனத்தில் பணியாற்றி கைக்கொள்ளாமல் சம்பளம் வாங்கி, விடுமுறையில் பட்டாம்பூச்சிகளோடு விண்ணைத்தாண்டும் வாய்ப்புகள் இருந்தாலும், அதையெல்லாம் தவிர்த்து கட்டற்ற தகவல் களஞ்சியமாக இணையத்தினை மாற்றுவதில் தீவிர ஈடுபாடு கொண்ட ஆரொன், இன்று வாசகர்களே செய்திகளின் முக்கியத்துவத்தைத் தீர்மானிக்கும் செய்தித்தளமாக புகழ்பெற்று விளங்கும் ரெட்டிட் (www.reddit.com) தளத்தின் நிறுவனர்களில் ஒருவர்.

இணையத்தில் உள்ள தகவல்கள் அனைத்தும் உலகத்திலுள்ள அனைவருக்கும் இலவசமாகக் கிடைக்க வேண்டும் என்று போராடும் பகிரங்க செயற்பாட்டு இயக்கம் (Open Access Movement) எனும் குழுவின் கதாநாயகன். அதற்கு எதிராக அமெரிக்க அரசு கொண்டு வந்த சோபா (Stop Online Piracy Act) எனும் சட்டத்தினை எதிர்த்து ஒரு இயக்கத்தினை ஆரம்பித்து அதில் வெற்றியும் கண்டவர். கட்டற்ற தகவல் களஞ்சியமான விக்கிப்பீடியாவின் முக்கிய ஆர்வலர்.

ஸ்டான்போர்ட் பல்கலைக்கழகத்தில் ஒரு வருடம் சமூகவியல் படித்து விட்டு அங்கு அறிவுபூர்வமான சூழல் இல்லை என்று காரணம் கூறி விலகி கல்வியாளர்களை வியக்க வைத்தவர். பின்பு ஹார்வர்டில் ஒழுக்கவியல் குறித்த ஆராய்ச்சிக்கற்றலில் சேர்ந்தார். தமிழ் சினிமாவில் காதலர்களுக்கே யோசனை சொல்லும் குழந்தைகளுக்கு இணையாகக் கணினித் தொழில்நுட்பத்தில் சிறு வயதிலேயே கோலோச்சிய ஆரொனின் சிந்தனையெல்லாம் இணையத்தில் தகவல்களை அனைவருக்கும் இலவசமாகக் கிடைக்கச் செய்வதிலேயே இருந்தது. தன் 21 ஆவது வயதில் அமெரிக்க நீதிமன்றங்களின் வழக்கு விசாரணை ஆவணங்களை இணையத்தில் கட்டணச்சேவை மூலம் தரவிறக்கம் செய்து கொள்ள ஏற்பாடு செய்திருந்த பேசர் (Public Access to Court Electronic Records) என்னும் தளத்தின் வழங்கியில் தன் சொந்தச் செலவில் ஏறக்குறைய அனைத்து ஆவணங்களையும் தரவிறக்கம் செய்து இணையத்தில் இலவசமாக உலவ விட்டு உலகத்தின் பார்வையைத் தன் பக்கம் திருப்பியவர். இதுகுறித்து உள்ளூர் பொலிஸ் முதல் எப்.பி.ஐ வரை விசாரணை செய்தும் முடிவில் குற்றம் சுமத்துவதற்கு சட்டத்தில் இடமில்லாத காரணத்தால் விடுவிக்கப்பட்டவர்.

இப்படி இணைய உலகின் அசகாயசூரனாக அனைவராலும் பார்க்கப்பட்ட ஆரொன், கடந்த ஜனவரி 11, 2013 அன்று புரூக்ளினில் உள்ள தனது அடுக்குமாடிக் குடியிருப்பில் தூக்குப் போட்டுத் தற்கொலை செய்து கொண்டார் என்ற செய்தி, ஆரொன் குறித்து அறிந்தவர்களனை வருக்கும் பேரதிர்ச்சியையும், தாங்க முடியாத கோபத்தையும் ஏற்படுத்தியது. கோபத்திற்குக் காரணம் தற்கொலைக்கு முன்பான 24 மாதங்களில் ஆரொனின் வாழ்க்கையில் நடந்த சம்பவங்கள் தான்.

அமெரிக்க பல்கலைக்கழகங்களின் ஆராய்ச்சிக் கட்டுரைகளின் ஆவணக் களஞ்சியமான ஜேர்னல் ஸ்ரோர் (Journal Storage) எனும் இணையத்தளத்தின் வழங்கியில் இருந்து எக்கச்சக்கமான ஆவணங்களைத் தரவிறக்கம் செய்தார் ஆரோன். இந்தத்தளத்திலிருந்து எல்லோராலும் தரவிறக்கம் செய்து விட முடியாது. ஆனால் ஹார்வர்டின் ஆராய்ச்சி மாணவர் என்ற வகையில் ஆரொனுக்கு ஜேர்னல் ஸ்ரார் தளத்தினைப் பார்வையிடவும், தரவிறக்கம் செய்து கொள்ளவும் உரிமை இருந்தது. இது தவிர எம்.ஐ.ரி(Massachusetts Institute of Technology) வளாகத்தினுள் இருக்கும் வலையமைப்பில் உங்களை விருந்தினராகப் பதிவு செய்து கொண்டாலும் ஜேர்னல் ஸ்ரார் தளத்துக் குச் சென்று தேவையான ஆவணங்களை யாரும் பதிவு செய்து கொள்ள முடியும்.

ஆரொன் எம்.ஐ.ரி. வளாகத்தி னுள் ஒரு மடிக்கணினியினை வைத்து விருந்தினராக குறித்த வலையமைப்பில் பதிவு செய்து, தான் எழுதிய ஒரு நிரல் மூலம் கிட்டத்தட்ட அனைத்து ஆவணங்களையும் தரவிறக்கம் செய்ய ஆரம்பித்தார். ஒரு குறிப்பிட்ட கணினி மட்டும் ஏகப்பட்ட ஆவணங்களைத் தொடர்ந்து மேய்வதைக் கண்ட கண்காணிப்பாளர்கள் அந்த கணினியின் செயற்பாட்டு முகவரியினைத் தடை செய்தனர். வலையமைப்பின் பாதுகாப்பு சூட்சுமங்களை அறிந்த அன்பர்களுக்கு செயற்பாட்டு முகவரியினை மாற்றுவதன்பது தமிழகத்தில் திரைப்படங்களுக்குத் தடை விதிக்கக் கோரி வழக்குப் போடுவதை விட எளிதானது. தன் முயற்சியில் சற்றும் மனம் தளராத ஆரொன் ஆவன செய்து தனது தரவிறக்க வேட்டையினைத் தொடர்ந்தார்.

ஜேர்னல் ஸ்ரார் வலையமைப்பின் கண்காணிப்பாளர்கள் இம்சை தொடர்வது கண்டு, இந்தமுறை எந்தத் தடையினையும் உருவாக்காமல், அதன் மூலத்தை நோக்கி தங்கள் தேடல் குதிரையை முடுக்கி விட்டனர், அது சென்று சேர்ந்த இடம் ஆரொன். கையும், கணினி யுமாக மாட்டிக் கொண்ட ஆரொன், ஆவ ணங்களனைத்தையும் திரும்ப ஒப்படைத்து ஜேர்னல்ஸ்ரார் உடனான பஞ்சாயத்தினை முடித்துக் கொண்டார். எம்.ஐ.ரி. இது குறித்து வாயே திறக்கவில்லை.

ஆனால் ஆரொனைத் தொடர்ந்து கண்காணித்து வந்த அமெரிக்க அரசாங்கம் இந்தப்பிரச்சினையை விடுவதாக இல்லை. செயற்பாட்டு முகவரியினை மாற்றியது, நிரல் மூலம் விதிமுறைக்குப் புறம்பாக ஆவணங்களைத் தரவிறக்கம் செய்தது என்று பலப்பல காரணங்களைக் கூறி ஆரொன் மேல் வழக்குத் தொடர்ந்தது. இன்று பிறந்த குழந்தையைப்பார்த்து இது வளர்ந்து 25 வயதில் திருடுவதற்குத் தான் பிறந்திருக்கிறது என்று கூறி கைது செய்வதைப் போல, தரவிறக்கம் செய்த ஆவணங்கள் மாட்டியிருக்காவிட்டால் அவற்றை இணையத்தில் உலவ விட்டிருப்பார் ஆரொன் என்பதும் அமெரிக்க அரசின் முக்கிய குற்றச்சாட்டு.

கணினியின் இணையச் செயற்பாட்டு முகவரியினை மாற்றுவதென்பது அநேக இணைய வல்லுநர்களின் அன்றாட நடவடிக்கைகளில் ஒன்று. ஆனால் சட்டப்படி அது ஆள்மாறாட்டம், தவறாக அடையாளப்படுத்தி ஏமாற்றுதல் போன்ற குற்றங்களுக்கு ஒப்பாகும் என்று ஒப்பாரி வைத்ததன் விளைவாக ஆரொனுக்கு சுமாராக 35 வருடங்கள் சிறையும், 1 மில்லியன் டொலர் அபராதமும் விதிக்க சட்டத்தில் இடமிருப்பதாக நீதிமன்றம் கூறியது. அதுவரை குற்றத்தினை ஒத்துக் கொள்ளாத ஆரொன், ஒப்புக் கொண்டால் குறைந்தபட்ச தண்டனை வழங்க வாய்ப்பிருப்பதாகவும் தெரிவித்தது. விசாரணை, தவணை என்று இவ்வளவும் நடந்து முடிய இரண்டு வருடங்கள் ஆனது. இதனால் தொடர்ந்து ஏற்பட்ட மன உளைச்சலும், குற்றத்தினை ஒப்புக் கொள்ளாவிட்டால் கிடைக்கப் போகும் தண்டனை குறித்தான பயமும் ஆரொனைக் கடைசியாகத் தூக்கில் தஞ்சமடைய வைத்து விட்டது.

(வலை விரியும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திர வேட்கை

அடேல் பாலசிங்கம்

நிம்மதியாக மூச்சு விட்டோம். மகிழ்ச்சியாக ஆனால் சிறிது அசட்டுத்தனத்தோடு பகீனும் சென்னைக்கு விமானம் ஏறினார். சென்னையை அடைந்த மறுகணமே உடற்பயிற்சிகளில் ஈடுபட்டு உடல் நலத்தைப் பேணியதோடு தம்மை யாழ்ப்பாணம் அனுப்புமாறு ஒவ்வொருவரையும் நச்சரிக்கத் தொடங்கினார். இறுதியில் தமது கிராமமான வல்வெட்டித்துறையைச் சென்றடைந்தார். ஆனால், விரைவிலேயே உலகை விட்டே அவர் செல்ல நேர்ந்தது. வல்வெட்டித்துறையில் இடம்பெற்ற சுற்றி வளைப்பில் கைதான இளைஞர்களில் பகீனும் ஒருவர். தப்பி ஓட முடியாத நிலை ஏற்பட்டதும் பகீன் தமது சயனைட் குப்பியைக் கடித்தார். விடுதலைப் போராளிகளிடையே சயனைட் உட்கொண்டு தற்கொலை செய்து




வீரச்சாவைத் தழுவிய முதல் வீரர் பகீனேதான்.

1983 இற்கு முன், நாம் காத்திருந்த காலத்தில் நிறையப் படிக்கக் கிடைத்தது. புத்தகக் கடைகளில் நூல்களைத் தேடி வாங்குவதில் நேரத்தைப் போக்காட்டுவது எமது ஆகப் பெரிய மகிழ்ச்சியான பொழுது போக்குகளில் ஒன்றாக இருந்தது. என்னை அறியாமலேயே பெண்கள் எழுதிய நூல்களைத் தேர்ந்தெடுத்தேன். அல்லது பெண் எழுத்தாளர்களின் நூல்களையே தேடிக் கொண்டிருந்தேன். பெண் எழுத்தாளரான டொறிஸ் லெசிங் அவர்களின் படைப்புக்கள் என்னைக் கவர்ந்தன; அவரது ஆளுமையும் என்னைக் கவர்ந்தது. தவறுகளை இனம் காண்பதில் அவருக்கு இருந்த ஆற்றலும், தமது வாழ்க்கையை மாற்றுவதற்கு வேண்டிய முடிவுகளை எடுக்கும் போது உணர்ச்சி பூர்வமாகத் தாம் எவ்வளவு பாதிக்கப்படுவார் என்றோ மனத்தளம்பல் இல்லாமல் அவர் முடிவுகளுக்கு வரும் உறுதி எனக்குப் பிடித்திருந்தது. இன்னொருவர் எலிசபெத் குரோல். சீனப் பெண்களைப் பற்றி இவர் நிறைய எழுதியிருக்கிறார். குறிப்பாக " சீனாவில் பெண்ணியமும் சோஷலிசமும் " என்ற அவருடைய நூல் என்னைக் கவர்ந்தது. சீனாவில் பெண்கள் இயக்கம் பற்றிய சுவையான விபரம் அதில் உள்ளது. பெண்ணியப் போராட்டத்துக்கும், சமுதாயப் போராட்டத்துக்கும் இடையிலான நலன்களின் முரண்பாடுகள் பற்றி அவர் அதில் விபரிக்கின்றார். அதே போல சோஷலிச சமுதாயத்தில் பெண்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் பற்றியும் அவர் கூறுகிறார். அடுத்து அலனோஹெயற்லிங்கர் எழதிய "பெண்களும் அரச சோஷலிசமும்; சோவியத் யூனியனிம் செக்கோஸ்லாவாக்கியாவிலும் "சமத்துவ இன்மை" என்ற எழுத்தாக்கத்தின் தலைப்பே கருவை உணர்த்துவது. அதில் நிறைய விபரங்கள் உண்டு. சிந்தனையைக் கிளறுவதாகவும் அது அமைந்திருக்கிறது. சூசன்பிறவுன்மில்லர் என்பவர் "பாலியல் வன்முறைக்கு எதிராக எமது விருப்பத்திற்கு மாறாக" என்ற மிகச் சிறந்த நூலை எழுதியிருக்கிறார். ஆன் ஒக்லியின் பெண்கள் தொடர்பான சமூக ஆய்வுகளும் எப்போதுமே கருத்துப் பொதிந்தவை. "சண்டினோவின் புதல்விகள்" "மூன்றாம் உலகு இரண்டாம் பால்" ஆகியவையும் இன்னும் பல நூல்களும் போராட்டத்தில் ஈடுபட்ட பெண்களின் வெற்றிகளையும் அவர்கள் முகம் கொடுத்த இடர்களையும் விளக்குவன;அவற்றோடு எம்மையும்; இணைத்துக் கொள்ளத் தூண்டுவன ; உற்சாகம் தருவன . இவை எல்லாம் எப்போதோ நடந்தது போன்ற பிரமையைத் தருவன. இவை எல்லாம் நேற்றைய நூல்கள். ஆனாலும் அவை போராட்டத்தில் ஒரு வேறுபட்ட மெய்யுண்மையை விளக்குகின்றன.

ஒரு ஆய்வுமுயற்சிக்கான அறிவைத் தரவல்ல ஒரு நீண்ட பட்டியல் நூல்களைத் வாசித்திருந்தேன். எழுதத் தொடங்கலாமா என்ற சிந்தனை கூட வந்து போயிற்று. இளவயதில் இருந்ததை விட இப்போது தன்னம்பிக்கை அதிகரித்து இருந்தது. போராட்டத்தில் ஈடுபடவிருக்கும் தமிழ்ப்பெண்களுக்கு உதவியாக, வேறு உலக விடுதலைப் போராட்டங்களில் ஈடுபட்ட பெண்களின் அனுபவங்களை சிறிய நூல் வடிவில் கொண்டு வர முற்பட்டேன்.

**(பதிவு தொடரும்)**




21.05.2014 - 27.05.2014

### மேஷம்

**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**

மனம். செயலில் உறுதி இருக்கும். உழைப்பினால் அதிக பணம் சம்பாதிக்கிற வாய்ப்புக்களை. தவறாமல் பயன்படுத்துவீர்கள். சுய அந்தஸ்து பாதுகாக்க. பணச்செலவில் தாராள குணம் பின்பற்றுவீர்கள். பொது இடங்களில் உங்கள் சொல்லுக்கு. கூடுதல் மரியாதை கிடைக்கும்.வாகன பயன்பாடு. சராசரி அளவில் இருக்கும். புத்திரர் உடல் நலத்தில் தகுந்த கவனம் வேண்டும். எதிர்ப்பாளரை சமயோசிதமாக வெற்றிக் கொள்வீர்கள். இல்லறத்துணையின் கூடுதல் அன்பு, பாசம் மனமகிழ்ச்சி தரும். தொழில் வளர. தேவையான பணி புரிவீர்கள். பணியாளர்களுக்கு வேலையில் கவனம் அதிகரிக்கும். பெண்கள் குடும்ப ஒற்றுமை பாதுகாத்திடுவர். மாணவர்கள். பொது அறிவு செய்திகளில் ஆர்வம் கொள்வர்.

### ரிஷபம்

**கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்**

சமூகத்தில் கிடைத்த செல்வாக்கை அக்கறையுடன் பாதுகாத்துடுவீர்கள். உடன் பிறந்தவர்களின் உதவி. முழு அளவில் கிடைக்கும். வாகன பராமரிப்பு மேற்கொள்வதால். பயணம் சௌகரியமாக அமைந்திடும்.புத்திரர் சிறு விஷயங்களில் பிடிவாதம் கொள்வர். பிணி. தொந்தரவு அணுகாத ஆரோக்கிய உடல்நலம் பெறுவீர்கள். இல்லறத்துணை உறுதுணையாக நடந்து கொள்வார். தொழிலில் அபிவிருத்தி பணி செய்து உற்பத்தி. விற்பனையில் திருப்திகரமான இலக்கை அடைவீர்கள். பணியாளர்களுக்கு அதிக வேலைவாய்ப்பு. உபரி பணவரவு கிடைக்கும். பெண்கள். பண வசதிக்கேற்ப வீட்டு அலங்காரப் பொருள் வாங்குவர்.

### மிதுனம்

**மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

இளைய சகோதரர் வகையில். எதிர்பார்ப்புகளை ஓரளவு நிறைவேற்றுவீர்கள். அறிமுகம் இல்லாதவர்களுக்கு வீடு. வாகனத்தில் இடம் தரவேண்டாம்.புத்திரர் ஆடம்பர பொருள் வாங்குவதில். ஆர்வம் கொள்வர். காலமுறை உணவுப்பழக்கம். சீரான ஓய்வு உடல் நலம் பாதுகாக்கும். இல்லறத்துணையின் மனக்கஷ்டம். சரியாக ஆறுதல்வார்த்தை சொல்வது உரிய பலன் தரும். தொழில். வியாபாரத்தில் போட்டியை சமாளிக்க. கூடுதல் முயற்சி தேவைப்படும். பணியாளர்கள். நிர்வாகத்தின் வழிகாட்டுதல் தவறாமல் பின்பற்றவும். பெண்கள். நகை இரவல் கொடுக்க வாங்க கூடாது. மாணவர்கள். நண்பர்களிடம் பேசுவதில் நிதானம் வேண்டும்.

### கடகம்

**புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

இஷ்ட தெய்வ அருளுடன், முருகப்பெருமானின் நல்லருள் பலமும் துணை நிற்கும். புத்தி சாதுர்யத்தினால் வாழ்வில் புதிய முன்னேற்றப்பாதையை அறிவீர்கள்.குடும்பத்தில் ஒற்றுமை, மகிழ்ச்சி வளரும். சிலர் புதிய வாகனம் வாங்க அனுகூலம் உண்டு. உடல் நல ஆரோக்கியம் சீராக இருக்கும். இல்லறத்துணை வழிசார்ந்த உறவினர், உதவிகரமாக செயல்படுவர். தொழில் வளர்ச்சியும், பணவரவும் அதிகரிக்கும். உத்தியோகஸ் பணியாளர்களை ஊக்கப்படுத்தி உற்பத்தி இலக்கை அடைவர். பெண்கள் குடும்பநலன் பேணுவதில், அதி அக்கறை கொள்வர். மாணவர்கள் வெகுநாள் வாங்க விரும்பிய பொருளை, பெற்றோர் வாங்கித்தருவர்.

### சிம்மம்

**மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்**

மனதில் உற்சாகமும். செயல்களில். புதிய பரிமளிப்பும் உருவாகும். தம்பி. தங்கையின் வீட்டில் மங்கல நிகழ்ச்சி நடத்த அனுகூலம் வளரும். வாகன பயணம் அளவுடன் மேற்கொள்வீர்கள். புத்திரர் அறிவுத்திறன் வளர்த்து படிப்பு. வேலைவாய்ப்பில் முன்னேற்றம் காண்பர். இல்லறத்துணை கூடுதல் அன்பு. பாசத்துடன் உறுதுணையாக நடந்து கொள்வார். பணியாளர்கள். விசுவாசம் நிறைந்த பணிக்காக பாராட்டுப் பெறுவர். பெண்கள். கணவரின் அன்பு. தாராள பணவசதியுடன். மகிழ்ச்சிகர வாழ்வு நடத்துவர்.

### கன்னி

**உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம் 1, 2 ஆம் பாதங்கள்**

உங்களை ஏளனமாக பேசுபவரிடம் விலகுவதால். நற்பெயரைப் பாதுகாக்கலாம். செயல் நிறைவேற புதிய முயற்சி தேவைப்படும். கண்களின் பாதுகாப்பில். உரிய கவனம் வேண்டும். வீடு. வாகனத்தில் பராமரிப்பு பணச்செலவு அதிகரிக்கும். புத்திரரின் சேர்க்கை சகவாசம் அறிந்து. நல்வழியில் நடத்துவது அவசியம். பணக்கடனால் உருவாகிற நெருக்குதல் சரி செய்ய. மனைவி வழி உறவினர் உதவுவர். தொழில். வியாபாரத்தில் கிடைத்த அனுகூலம் பாதுகாக்க கூடுதல் பொறுப்புணர்வு பின்பற்ற வேண்டும். பணியாளர்கள். பணியிடத்தில் சச்சரவு பேசக்கூடாது.

### துலாம்

**சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

இளைய சகோதரர் சொல்லும் வார்த்தையை வேதம் என கருதுவீர்கள். வாகனத்தில் மித வேகம் பின்பற்றவும். புத்திரர் ஆடம்பரமாக செயலாற்றுவதில் ஆர்வம் கொள்வர். உங்கள் நற்செயலின் தாக்கம் எதிரியின் மனதில் நல்மாற்றம் உருவாக்கும். தொழில். வியாபாரத்தில் பொறுமையுடன். சில மாற்றம்செய்வதால் வளர்ச்சி பணவரவும் கூடும். பணியாளர்கள். பணித்திறன் நன்கு பயன்படுத்தி திட்டமிட்டஇலக்கு நிறைவேற்றுவர். பெண்கள். குடும்ப உறுப்பினர்களின் கருத்துகளை கனிவுடன் கேட்டு செயற்படுவர்.

### விருச்சிகம்

**விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

குடும்பத்தேவை நிறைவேற்ற தாராள பணவசதி துணை நிற்கும். இளைய சகோதரரின் கருத்துக்கு முக்கியத்துவம் தந்து. குடும்ப ஒற்றுமையைப் பாதுகாப்பீர்கள். வாகனத்தில் பராமரிப்புப் பணி தேவைப்படும். மகளின் ஜாதக யோக பலம் புதிய சொத்து வாங்க அனுகூலம் தரும். எதிர்ப்பாளர் உங்கள் வாழ்வின் சிறப்பு உணர்ந்து வியப்புடன் விலகுவர். தொழில். வியாபாரத்தில் உருவாகிற குறையை தாமதமின்றி சரி செய்து. தகுந்த நன்மையைப் பெறுவீர்கள். பணியாளர்கள். நிர்வாகத்தின் சட்ட திட்டம் கருத்துடன் பின்பற்றுவர்.மாணவர்கள் தாயின் ஆலோசனை கேட்டு நடந்து கொள்வர்.

### தனுசு

**மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்**

பல நாள் மனதில் உதித்த திட்டம். செயல் வடிவம் பெறும். சிலர் வீடு. வாகனம் புதிதாக வாங்க நல்யோகம் உண்டு.புத்திரர் ஆன்மிக விஷயங்களில். தேவையான விளக்கம் பெற உங்களை அணுகுவர். இல்லறத்துணை விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். தொழில். வியாபாரத்தில் புதிய ஒப்பந்தம் கிடைத்து. வளர்ச்சியை உருவாக்கும். பணியாளர்கள். அதிக வேலை வாய்ப்பு. திருப்தி கர அளவில் பணவரவு பெறுவர். பெண்கள். உறவினர் குடும்பத்தில் மங்கள நிகழ்ச்சி சிறப்பாக நடத்த உதவுவர். மாணவர்கள். நண்பர்களிடம் நல்ல கருத்துகளை பகிர்ந்து கொள்வர்.

### மகரம்

**உத்தராடம் 2, 3, 4ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்**

நண்பருடன் வாகனத்தில் மிதவேகம் நல்லது.புத்திரரின் விளையாட்டுக் குணம் நிறைந்த செயலை, இதம்பதமாக அறிவுரை சொல்லி மாற்றுவீர்கள். அளவான உழைப்பு. சீரான ஓய்வு. உடல் நலத்தைப் பாதுகாக்கும். இல்லறத்துணை. உங்களின் மனக்கவலையை மாற்றுவார். தொழில். வியாபாரத்தில் வளர்ச்சி பெற புதியநுட்பம் பயன்படுத்துவீர்கள். பணியாளர்கள் பெற வேண்டிய சலுகை. எளிய முயற்சியால் கிடைக்கும். பெண்கள். பிள்ளைகளின் எதிர்கால நலன் சிறக்க. தேவையான பணி மேற்கொள்வர்.

### கும்பம்

**அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம் 1, 2, 3ஆம் பாதங்கள்**

பணவசதி திருப்திகர அளவில் இருக்கும். ஆன்மிக நம்பிக்கை வளர்ந்து வழிபாடுகளில் ஈடுபடுவீர்கள். உறவினர் வருகை. வீட்டில் மகிழ்ச்சியை அதிகரிக்கும்.புத்திரர் புதிய கலைகள் கற்பதில். ஆர்வமுடன் ஈடுபடுவர். உடல்நலத்திற்கு ஒவ்வாத வகையிலான உணவு உண்பதைத் தவிர்ப்பது நல்லது. இல்லறத்துணை. உங்களின் கருத்துகளை ஏற்று நடப்பார். பணியாளர்கள். தனக்கான கடமை உணர்ந்து பணிபுரிவர். குடும்ப பெண்கள். தாராள பணவசதி. கணவரின் அன்பு கிடைத்து. சந்தோஷ வாழ்வு நடத்துவர்.


### மீனம்

**பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

முகத்தில் சந்தோஷத்தின் வெளிப்பாடு பிரகாசமாக இருக்கும். புதிய முயற்சியை, தகுந்த திட்டமிடுதலுடன் தொடங்குவீர்கள். எதிர்ப்புகள் விலகி, வாழ்வில் ஒளிமயமான பாதையைத் தரும்.புத்திரர் நல்லவிதமாக நடந்து, பெருமை தேடித்தருவர். உடல் நல ஆரோக்கியம் சீராக இருக்கும். இல்லறத்துணை, ஒற்றுமை மனதுடன் வேண்டிய உதவி வழங்குவார். தொழில். வியாபாரத்தில் சில மாற்றம் பின்பற்றுவதால், வளர்ச்சி நிலை உருவாகும். பணியாளர்கள். பணியிடத்தில் பொறுப்பு உணர்ந்து செயல்படுவர். மாணவர்கள். பாடம் கற்பித்த ஆசிரியரின் நல்ல குணம் எண்ணி மகிழ்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிறுவர்களுக்கான குட்டிக் கதை

# ஈகைத் திறன்

கோதை நாட்டை கோதண்டராமன் என்ற மன்னர் மன்னர் நீதி தவறாமல் ஆட்சி செய்து வந்தார். ஏழை மக்களுக்கு தன்னால் இயன்ற உதவிகளை எல்லாம் உடனுக்குடன் செய்து கொடுப்பார். கலைஞர்களுக்கும், கவிஞர்களுக்கும் பரிசுகளை வாரி வாரி விழங்குவார். இதனால் மன்னரின் புகழ் எல்லா நாள்களிலும் பரவத் தொடங்கியது.

வேங்கை நாட்டு மன்னர் வேழவேந்தன் கோதண்டராமனைக் கண்டு பொறாமை யடைந்தார். அவரும் என்னைப் போன்ற மன்னர் தானே. அவருக்கு மட்டும் எப்படி இந்தப் பேரும்புகழும் கிடைத்தது? என்று வியப்போடு தனது மந்திரியான காளதீபனிடம் அடிக்கடி கேட்டுக் கொள்வார்.

மந்திரியர் காளதீபன் வேழவேந்தரின் கஞ்சத்தனத்தையும், கொடூர குணத்தையும் நன்கு அறிவார். நம் மன்னரைத் திருத்த இது ஒரு நல்ல சந்தர்ப்பம் என்பதை உணர்ந்து கொண்ட அவர் மன்னரை வணங்கி "அரசே! மன்னர் கோதண்டராமனுக்கு தாங்கள் இணை யானவர் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. ஆனால் உங்களுக்கு ஏற்படாத பேரும், புகழும் அவருக்கு எப்படி ஏற்பட்டது என்பதை விளக்க நீங்களும், நானும் மாறு வேடம் அணிந்து அவர் அரண் மனைக்குச் செல்ல வேண்டும். நான் சொன்னபடி நீங்களும் அங்கே நடிக்க வேண் டும். அதற்கு சம்மதமானால் நாம் இன்றே கோதை நாட்டுக்குப் புறப்படலாம்" என்று கூறினார்.

மன்னர் வேழவேந்தனும் ஆர்வத்துடன் அதற்கு ஒப்புக்கொண்டார். இருவரும் ஏழை விவசாயிகள் போன்று மாறுவேடம் கொண்டு கோதை நாட்டுக்குப் புறப்பட்டார்கள்.

அரண்மனையில் நுழையும் நேரம் காவலர்கள் அவர்களை இன்முகத்தோடு வரவேற்று, "என்ன காரணத்திற்காக வந்திருக்கிறீர்கள்?" என்று விசாரித்தார்கள்.

"ஐயா! நாங்கள் இருவரும் மிகவும் வறுமையால் வாடிக் கொண்டிருக்கின்றோம். மன்னரிடம் உதவி பெற்று எங்கள் வாழ்க்கையை வளமாக்கிக் கொள்ளலாம் என்று வந்துள்ளோம்" என்று கூறினார் மாறுவேடத்தில் இருந்த காளதீபன்.

காவலர்கள் இருவரையும் அரண்மனை அழைத்துச் சென்றார்கள். அந்த நேரத்தில் அரண்மனையில் மன்னர் இல்லை. மன்னர் அவசர வேலை காரணமாக தன் அறையைவிட்டு வெளியே கிளம்பிக் கொண்டிருந்தார். காவலர்கள் மன்னரை வணங்கி அவர் காதருகே ஏதோ கூறினார்கள்.

மன்னர் புன்னகைத்தபடி "நண்பர்களே! நீங்கள் இருவரும் என்னிடம் உதவிபெற வந்திருப்பதைக் கண்டு மகிழ்ச்சியடை கிறேன். இதோ எனது முத்துமாலை இரண்டை உங்கள் இரு வருக்கும் பரிசளிக்கிறேன்" என்று கூறியவாறு தன் கழுத்தில் கிடந்த இரண்டு முத்து மாலைகளையும் மாறு வேடத்தில் இருந்தமன்னர் வேழவேந்தனிடமும், மந்திரியார் காளதீபனிடமும் கொடுத்து விட்டுச் சென்றார்.

நினைத்த மாத்திரத்தில் தர்மம் செய்கின்ற மன்னரின் கொடைத் தன்மையைக் கண்டு மன்னன் வேழவேந்தன் வியப்புற்றார். இருவரும் அரண்மனையை விட்டு வெளியே வந்தனர். மந்திரியார் காளதீபன் "அரசே இப்போது கவனித் தீர்களா மன்னர் கோதண்டராமனின் தர்மம் செய்யும் முறை யே, அவரை புகழ் உச்சியில் கொண்டு சென்றுள்ளது. ஒரு நாட்டை ஆளுகின்ற மன்னருக்கு ஈகைத் திறன் மிகவும் முக்கியம்" என்றார்.

மன்னர் வேழவேந்தன் அன்றுமுதல் தன்னுடைய பொறாமை எண்ணத்தையும் கஞ்சத்தனத்தையும் விட்டுவிட்டார். தன் நாட்டு மக்களுக்கு பல உதவிகளையும் செய்யலானார். மன்னர் வேழவேந்தனின் செயல்களைக் கண்ட மக்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள்.

தர்மம் செய்து வாழ்பவர்கள் எல்லா நன்மைகளையும் கிடைக்கப் பெறுவார்கள்.

## நாடுகளும் அவற்றின் தேசியசின்னங்களும்

- இந்தியா - சிங்கங்கள் முகப்பு
- வங்க தேசம் - நீர் அல்லி
- கனடா - வெள்ளை அல்லி
- நோர்வே - சிங்கம்
- ஈரான் - ரோஜா
- பாகிஸ்தான் - பிறை, நட்சத்திரம்
- ஜேர்மனி - தானியக் கதிர்
- ஸ்பெயின் - கழுகு
- துருக்கி - பிறையும் நட்சத்திரமும்
- பிரான்ஸ் - அல்லி
- அவுஸ்ரேலியா- கங்காரு
- டென்மார்க் - கடற்கரை
- ஹொங்ஹொங் - ஓர்ச்சிட் இலை
- இஸ்ரேல் - மெழுகுவர்த்தி தாங்கி
- கயானா - வால்குருவி
- சூடான் - செயலாளர் பறவை
- அயர்லாந்து - மூன்று இலவங்க இலைகள்
- டொமினிக்கா - சிசரோ குருவி
- பெல்ஜியம் - சிங்கம்
- இத்தாலி - வெள்ளை அல்லி
- பப்புவா நியுகினியா -சொர்க்கப் பறவை
- ஜிம்பாப்வே - ஜிம்பாவே பறவை
- லெபனானன் -செடார் மரம்
- நெதர்லாந்து - சிங்கம்
- ஐவரிகோஸ்ட்- யானை
- பார்படோஸ் - திரிசூலம்
- ஜப்பான் - க்ரிசாந்தமம்
- அமெரிக்கா - தங்கக் கழுகு
- செனகல் - பவோபாப் மரம்
- நியூசிலாந்து -கிவி பறவை, வெள்ளிஃபெர்ன் இலை

## மாதங்கள்



சித்திரை வைகாசி மாதம்
சீர்மிகு இளவேனிற் பருவம்!
ஆனி ஆடி மாதம்
அழகு முதுவேனிற் பருவம்!

ஆவணி புரட்டாசி மாதம்
அடர்மழை பொழியும் பருவம்!
ஐப்பசி கார்த்திகை மாதம்
அதிக குளிர்மிகு பருவம்!

மார்கழி நற்தை மாதம்
வாட்டும் முன்பனிப் பருவம்!
மாசி பங்குனி மாதம்
வளரும் பின்பனிப் பருவம்!

## தெரிந்து கொள்வோம்

01. தேனை விரும்பிச் சாப்பிடும் விலங்கு எது?
கரடி
02. உமர்கய்யாம் எந்த நாட்டுக் கவிஞர்?
பாரசீகம்.
03. மணநூல் என்று அழைக்கப்படும் காப்பியம் எது?
சீவகசிந்தாமணி.
04. கலாபம் எனப்படுவது எது?
மயில்தோகை.
05. காலில் கண் உள்ள பிராணி எது?
வெட்டுக்கிளி.
06. உலகிலேயே அதிகமாக எந்த நாட்டு பசு பால் கொடுக்கிறது?
அமெரிக்கா
07. கொசுவுக்கு எத்தனை பற்கள் உண்டு?
47
08. இலண்டனில் உள்ள புகழ் பெற்ற கடிகாரத்தின் பெயர் என்ன?
பிக்பென்




## வாரம் ஒரு திருக்குறள் படிப்போம்.

தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான் பிறிது
இன்னுயிர் நீக்கும் வினை

**விளக்கம்** : தன் உயிர் உடம்பிலிருந்து நீங்கிப் போவதாக இருந்தாலும் அதைத்தடுப்பதற்காகத் தான் வேறொர் உயிரை நீக்கும் செயலைச் செய்யக் கூடாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும்



"நல்லூர் ஆலயத்தை அண்மித்தபோது இராணுவத்தின் வாசனையை உணரமுடிந்தது. முள்ளிவாய்க்கால் தினத்தில் நல்லூர்க்கந்தன் இராணுவத்தின் மீது போர் தொடுக்கப்போகிறார் என்று யாரும் தவறான தகவலைக் கொடுத்திருப்பார்களோ தெரியவில்லை."

**2014 மே 18.**

காலை ஒருவித பரபரப்போடுதான் விடிந்தது. இரவோடு இரவாக வந்திறங்கிய படையினர் வழக்கத்துக்கு மாறாக போர்க்காலத்தில் பயன்படுத்திய தலைக்கவசங்களோடு முக்கியமான இடங்களில் எல்லாம் குவிந்து நின்றார்கள். குறிப்பாக எல்லா ஆலயங்களும் படைத்தரப்பின் கழுகுப் பார்வைக்குள் சிக்கியிருந்தது.கடவுள்களுக்குப் பயத்தில் காய்ச்சல் வந்திருக்கும்.

நல்லூர் ஆலயத்தை அண்மித்தபோது சிவில் உடையிலும் சீருடையிலும் இராணுவத்தின் வாசனையை ஒவ்வொருவரும் உணரமுடிந்தது. சிலவேளைகளில் முள்ளிவாய்க்கால் தினத்தில் நல்லூர்க்கந்தன் இலங்கை இராணுவத்தின் மீது போர் தொடுக்கப்போகிறார் என்று யாரும் தவறான தகவலைக் கொடுத்திருப்பார்களோ தெரியவில்லை.

தாக்குதலுக்குத் தயாராக துப்பாக்கிவிசையில் விரலைவைத்தபடி படைத்தரப்பு எல்லோரையும் சந்தேகக் கண்கொண்டு பார்த்துக் கொண்டிருந்தது. அவர்களின் பார்வை பட்டவர்களின் அடிவயிறு இனம்புரியாத பயத்தால் கலங்கியது. எதற்கு வீண் வம்பு என்ற அச்சத்தில் பலர் அன்றைக்கு வீடுகளுக்குள்ளேயே முடங்கிக்கொண்டார்கள். நல்லவேளையாக அன்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் தங்கள் வாழ்வை வீட்டுவளவுக்குள்ளேயே பலரும் சுருக்கிக்கொள்ள ஏதுவாக இருந்தது. ஏதும் அவசரத் தேவையிருந்தவர்கள் மாத்திரமே வீதிகளில் அங்கொன்றும் இங்கொன்றுமாக நடமாடிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் கூட தமக்கேதும் நடந்துவிடுமோ என்ற அச்சத்தில் ஓர் அவசரத்தனத்தை வாகனங்களில் காட்டிக்கொண்டிருந்தார்கள்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை ஆலயங்களில் தீபம் ஏற்றி எவரும் அனுஷ்டிக்கக் கூடாது என்பதில் படைத்தரப்பு குறியாக இருந்தது. அவ்வாறு அஞ்சலித்து இறுதிப்போரில் உயிர் துறந்த அப்பாவிகளின் ஆன்மாக்கள் சாந்தியடையக்கூடாது என்பதே அவர்களின் நோக்கம் போலும்.

கொல்லும்போதுதான் கொடூரமாகக் கொன்றார்கள். கொன்றபின்னும் அவர்களின் உயிர்களை அந்தரிக்க விட்டு, சாந்தியடையச் செய்யாமல் சித்திரவதை செய்யும் நூதன யுக்தியை இந்த வெசாக் தினத்தில் புத்தர் இலங்கை அரசுக்கும் படைகளுக்கும் போதித்திருக்க வேண்டும். அதனால்தான் கோயில்களுக்குக் கூட சென்று தங்கள் மனக்குமுறலை மக்கள் கொட்ட முடியாத அளவுக்கு சிப்பாய்களை எங்கும் கொட்டியிருந்தது அதிகாரம். ஆனாலும் அதையும் மீறி அஞ்சலிப்புகளும் நினைவேந்தல் களும் நடக்கத்தான் செய்தன. தீபங்களை முதல்நாளே தட்டிவிழுத்தும் பணியை பொலிஸ் தொடக்கிவைத்திருந்தது. அப்படியிருந்தும் இரகசியமான இடங்களிலும், வீடுகளிலும் நினைவேந்தல் தீபங்கள் ஒளிரத் தொடங்கின. அஞ்சலிப்புகளாலும் அழுகைகளாலும் தமிழர் வாழும் வெளிகள் நிறையத் தொடங்கின. வீதிகளில் இறங்கித்தான் அஞ்சலிக்க வேண்டும் என்பதில்லையே. படைகள் அஞ்சலிப்பை அடக்கவென வெளியில் காவல் நிற்க உள்ளார்ந்த இடங்களில் நினைவுப் பூக்களின் சொரிதல்கள் நடந்தேறவே செய்தன.



ஆத்மசாந்திப் பிரார்த்தனைக்குச் செல்லப் போராடும் அனந்தி





நல்லூரில் அஞ்சலிப்பு



உதயன் ஊடகத்தை முற்றுகையிட்ட படையினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்களம்



நல்லூரில் காவல் இருந்த படைகள்

## குருதிக்கொடைக்கும் அனுமதியில்லை

அவர்கள் முள்ளிவாய்க்காலில் தங்கள் உறவுகள் கொத்துக்கொத்தாக கொன்றொழிக்கப்பட்ட தினத்தை மனதில் நினைவு கொண்டு இரத்த தான நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தார்கள். கடந்த இரண்டு வருடங்களாக அவர்களின் இருப்பிடத்துக்கே வந்து யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியர்களும், தாதியர்களும் இரத்தத்தை கொடையாகப் பெற்றுச்செல்வது நடந்திருக்கிறது. இந்த முறையும் வழக்கம்போல மே 18 ஆம் திகதி அவர்களை வரச்சொல்லி, அழைப்பு விடுக்கப்பட்டது. ஆனால் எடுத்த எடுப்பிலேயே இரத்தவங்கிக்குப் பொறுப்பான மருத்துவர் தன் மறுதலிப்பை வெளியிட்டார்.

" நாங்கள் அங்கு வரமுடியாது" என்று அவர் திட்டவட்டமாகச் சொல்லிவிட்டார். போதாக்குறைக்கு குருதிக் கொடை விடயத்தை யாரோ படைத்தரப்பின் காதில் போட்டுவிட்டார்கள். அவ்வளவுதான். புலனாய்வுக்காரர்கள் துள்ளியெழுந்தார்கள். "ஆரும் இரத்த தானம் செய்தால் அவ்வளவுதான். என்ன செய்வம் எண்டு எங்களுக்கே தெரியாது. மரியாதையா உந்த நிகழ்வை நிப்பாட்டு" என்று அவர்கள் பல்வேறு வழிகள் ஊடாக தங்கள் மிரட்டல் அலையை தொடரவிட்டார்கள்.

என்றாலும் அவர்கள் தாங்கள் குருதிக்கொடை செய்யவேண்டும் என்ற விடயத்தில் உறுதியாகவே இருந்தார்கள். "எங்களுடைய இருப்பிடத்துக்குத்தானே உங்களால் வரமுடியாது. நாங்களே இரத்த வங்கிக்கு வருகிறோம்" என்று மனதில் முடிவெடுத்துக்கொண்டு மே 18 அன்று சுமார் 15 பேர் இரத்தவங்கிக்குச் சென்றார்கள். ஆனால் அவர்களைவிடவும் புலனாய்வுக்காரர்கள் முன்னதாகவே இரத்த வங்கியை நிறைத்திருந்தனர். கிட்டத்தட்ட 50க்கும் மேற்பட்ட படைப்புலனாய்வாளர்கள் இரத்த வங்கியில் இருக்க இடமின்றி நிலையெடுத்திருந்தார்கள். குருதிக்கொடைக்குச் சென்றவர்களை தங்கள் கைபேசிக்கமராக்களால் படம்பிடிக்கவும் அவர்கள் தவறவில்லை.

வழக்கமாக இரத்த வங்கியின் வரவேற்புப்பகுதியில் சிரித்த முகத்தோடு வரவேற்கும் தாதியர்களையோ பணியாளர்களையோ காணமுடியவில்லை. வெறிச்சோடிக்கிடந்தது. ஒருவாறு வைத்தியர் தங்கியிருந்த அறையைக் கண்டுபிடித்தார்கள். வைத்தியர் வேண்டா வெறுப்பாக அவர்களை வரவேற்றார்.

"இன்று நீங்கள் இரத்த தானம் செய்யமுடியாது" இயந்திரத்தனமான குரலில் மருத்துவர் சொன்னார்.

"ஏன்?"

குருதிக்கொடை செய்யச் சென்றவர்கள் ஒரே குரலில் இப்படிக் கேள்வி எழுப்பினார்கள். அதற்கு வைத்தியர்,

"போன 14 ஆம் திகதி அனுராதபுரம் வைத்தியசாலையில் இருந்து தேவையான அளவு இரத்தத்தை கொண்டுவந்துவிட்டோம். இப்போது இரத்தத்தை பாதுகாத்துவைக்க வசதி இல்லை" என்று ஒரு காரணத்தை கஷ்டப்பட்டு கண்டுபிடித்துச் சொன்னார். வேறு வழியின்றி குருதிக்கொடைக்கு வந்தவர்கள் வெளியேற வேண்டியிருந்தது.

'தானங்களில் சிறந்த தானம் இரத்த தானம்' என்று அடிக்கடி விளம்பரப்படுத்தும் இரத்த வங்கியினர், தாமாகவே இரத்தம் வழங்கச் சென்றவர்களை அவமானப்படுத்தி திருப்பியனுப்பியிருக்கிறார்கள். படைத்தரப்பை திருப்திப்படுத்துவதற்காகவே இந்த நடவடிக்கை.

இப்படி ஒரு நினைவு தினத்துக்காக இரத்தம் வழங்கச் செல்பவர்களை எந்த இடத்திலும் திருப்பியனுப்பியதாக வரலாறு இல்லை.

ஆனால் அந்த வரலாற்றை யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கி தொடங்கியிருக்கிறது.

"நினைவு தினங்களில் குருதிக் கொடை வழங்குபவர்களை ஊக்குவிப்பதற்காக மிகையாக இரத்தம் கையிருப்பில் இருந்தாலும் அவர்களிடம் இரத்தத்தைப் பெற்றுக்கொள்வது வழமை. உதாரணமாக அடுத்த மாதம் வரவிருக்கும் பொசன் பண்டிகையை முன்னிட்டு ஏராளமானோர் இரத்த தானம் செய்வார்கள். குறிப்பாக கொழும்பில் ஒரு வைத்தியசாலையில் மட்டும் 3,000 பைந்த் இரத்தம் சேகரிக்கப்படும். ஆனால் இதனைப் பாதுகாக்கும் வசதி அங்கில்லை. ஆனால் சேகரிக்கப்படும் இரத்தத்தின் பெரும்பகுதி கொட்டப்படும். அப்படியிருந்தும் கூட நினைவுதினத்தில் வழங்குகிறார்களே என்ற காரணத்தால் அனைவரின் குருதியையும் பெற்றுக்கொள் வார்கள். அதைப்போல யாழ்ப்பாணத்திலும் செய்திருக்க வேண்டும்" என்று கூறுகிறார் தென்னிலங்கையில் பணிபுரியும் மருத்துவர் ஒருவர்.

குருதிக்கொடைக்குச் சென்று ஏமாற்றதோடு இரத்த வங்கியை விட்டு வெளியேறியவர்கள் ஒரு விடயத்தைக் கவனித்தார்கள். வைத்தியசாலைக்கு வெளியே கண்கொத்திப்பாம்புகளாக இருந்த புலனாய்வாளர்களை பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் 'சல்யூட்' அடிக்காத குறையாக உள்ளே எந்த நேரமும் அனுமதித்துக் கொண்டிருந்தார்கள். உயிர் போகின்ற அவசரம் என்றால்கூட அப்பாவி மக்களை வைத்தியசாலைக்குள்ளே விட மறுக்கின்ற அதே பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்தான் படைப்புலனாய்வாளர்களை இராஜமரியாதையோடு 24 மணிநேரமும் உள்ளே சென்று உலவ விடுகிறார்கள்.

ம்! என்ன சொல்வது. பரமசிவன் கழுத்துப்பாம்புகள் எப்போதும் சௌக்கியமாகவே இருக்கின்றன.

### ஆமிக்கு நன்றி

வன்னியில் ஒரு கிராமம்.

மீள்குடியேறிய போது முட்கம்பிகளும், வெடிக்காத குண்டுகளும், இடிந்த வீடுகளும், இராணுவ முகாம்களுமே மக்களை வரவேற்றன. ஆனால் காலப் போக்கில் மெல்ல மெல்ல இராணுவ அடையாளங்கள் அந்தக் கிராமத்தில் இருந்து அகலத்தொடங்கியிருந்தன. இப்போது ஒரு முகாம் மட்டுமே அங்கு. ஏதாவது தேவையென்றால் மட்டுமே கிராமப்பக்கமாக சீருடைகளைக் காணமுடியும்.

சிலநாள்களுக்கு முன்னர் போர்க்கோலம் பூண்டவர்களாக முகாமிலிருந்து கிராமத்தை நோக்கி படையெடுத்தார்கள் இராணுவத்தினர்

வீடுவீடாகப் புகுந்தவர்கள் அங்கிருந்தவர்களை முற்றத்துக்கு அழைத்தார்கள். வீட்டுக்காரர்களுக்கு எதுவும் புரியவில்லை. என்ன ஏது என்று தெரியாதவர்களாக பயத்தில் நடுங்கத் தொடங்கினார்கள். கொச்சைத் தமிழில் சீருடையினர் தாங்கள் வந்த விடயத்தை விளங்கப்படுத்தினார்கள்.

"மே 18 ஆம் திகதி யாருமே விளக்கேத்தக்கூடாது. புலிகளை நினைக்கக் கூடாது" என்று அவர்கள் சொன்ன பிறகுதான் இன்னும் இரண்டுநாள்களில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினம் வரப்போகிறது என்ற ஞாபகம் கிராம மக்களுக்கு வந்தது. தங்கள் உறவுகள் உயிர் நீத்த தினத்தில் அஞ்சலிக்க வேண்டும் என்பதை ஞாபகமூட்டிய சிப்பாய்களுக்கு மானசீகமாக மக்கள் நன்றிசொல்லிக்கொண்டார்கள்.

ஊர்க் கிழவர் ஒருவர் இப்படிச் சொன்னார்.

"இனிமேல் நாங்கள் மாவீரர்தினம், முள்ளிவாய்க்கால் நாள் இதுகள ஞாபகம் வைச்சிருக்கத் தேவையில்லை. இரண்டு மூண்டுநாளைக்கு முதலே ஆமிக்காரர் வந்து நினைவுபடுத்துவாங்கள். அவங்கள் இருக்கிறதாலதான் இந்தத் தினங்கள நாங்கள் மறக்காமல் அனுஷ்டிக்க முடியுது"



வீரமகாளி அம்மன் கோயிலில் நினைவேந்தலைக் குழப்பிய கும்பல்



தேவாலயத்தில் நினைவேந்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முல்லைரமணன்

சிறுகதை



# ஆறாத வலிகள்

**அந்த ஓலைக் குடிசையில் திறந்தபடி சாப்பாட்டு கோப்பையோட ஓர் கட்டையான ஒருவர் தென்பட்டார்.என் பார்வை அவர் மீது விழ" என்ன பாக்கிறியள்... ஏன் வந்திருக்கிறியள் என்ன பார்க்கிறியள் என அவரின் வார்த்தைகள்மிகவும் கோபத்தில் வெளிவந்தன.**

காலை நேரம் உச்சிக்கு ஆதவன் பயணப்பட்டுக் கொண்டு இருந்தான். வெப்பத்தின் கொடூரத்தை என்மேல் வழியும் வியர்வையிலிருந்து புரிந்துகொண்டேன். பாதையின் அருகே அமைந்த வயல் வெளிகள் குளத்தின் நீரால் சேறாகி அடுத்த போக விளைச்சலுக்காக தயாராக இருந்தன. அவற்றினுடைய சேற்று மணம் காற்றில் கலந்து வந்து கொண்டிருந்தது.

இரை தேடும் வெள்ளைக் கொக்குகள் பல இடங்களில் அணி வகுத்து நிற்க துவிச்சக்கர வண்டி யில் அந்த பனை வடலி ஊடாக நாவற்காடு கிராமத்தை நோக்கிப் பயணிக்கிறேன். அரச திட்ட வீடுகளில் ஆங்காங்கே மனித சஞ்சாரம் தெரிகின்றது. அங்குள்ள வேம்புகளும் நாவல்களும் குளிர்மை தந்தாலும் தென்னை,வாழை என்பன வெப்பத்தால் அங்குள்ள மனிதரைப் போன்று வாடி நின்றன.

ஒரு சில வீடுகளில் ஆளரவம் இல்லாமல் புல் மண்டிக்கிடக்கிறது. சில வீடுகளில் ஆந்தைகளும்,வௌவால்களும் ஆட்சி செய்கின்றன. அச்சமில்லாமல் எல்லாவற்றையும் தரிசித்தபடி ஓர் ஓலைக் குடிசையின் முன் அமைந்த வேலியோரம் துவிச்சக்கர வண்டியை நிறுத்திவிட்டு குறிப்புப் புத்தகத்தை எடுத்தபடி நிமிர்ந்த போது என் பார்வையில் ஒரு பாட்டியும் அவளுக்குப் பக்கத்தில் இரு பெண் பிள்ளைகளும் பிளாஸ்ரிக் கதிரையில் அமர்ந்திருந் தனர்.

என்னைக் கண்டதும் அந்தச் சிறுமிகள் இருவரும் எழுந்து கொண்டனர். அதில் ஒரு கதிரையில் நான் அமர்ந்துகொண்டேன். அவர்களுடைய பார்வை யில் மிரட்சியையும், பயத்தையும் நான் அவதானித்தேன். நெற்றியில் வழிந்த வியர்வையைக் கைக் குட்டையால் துடைத்தபடி "நீங்கள் தான் மேகலாவா. ஏன் பள்ளிக் கூடம் போகவில்லை. பள்ளிக் கூடம் போகாமல் நிற்கிறது பெரிய குற்றம் அல்லவா. மீண்டும் ஏன் பள்ளிக் கூடம் போகவில்லை? காரணம் அறிய என் வினா? அவள் "திங்கட்கிழமை போறன் சேர்" என்றவள் அந்தச் சிறிய பனையின் பின்னால் ஒளிந்து கொண்டாள்.நான் தொடர்ந்தேன்.

" ஏனம்மா? ஏன் பள்ளிக்கூடம் போகல்ல. படிக்கிற வயதில இப்பிடி வீட்ட நிண்டால் உங்கட எதிர்காலம் பாழாய்ப்போகும். ஏன் போகல்ல என்ற கேள்வியைத் திரும்பத் திரும்பக் கேட்கிறன். சிறிது நேரத்தின் பின் 'பயமாய்க்கிடக்கு' என்றபடி மௌனமானாள்.

திறந்தபடி இருந்தஓலைக் குடிசையில் சாப்பாட்டுக் கோப்பையோடு ஓர் கட்டையான ஒருவர் தென்பட்டார்.என் பார்வை அவர் மீது விழ" என்ன பாக்கிறியள்... ஏன் வந்திருக்கிறியள்..." என அவரின் வார்த்தைகள் மிகவும் கோபத்தில் வெளிவந்தன.

"நாம் பாடசாலை போகாத பிள்ளையள் பாடசாலைக்கு அனுப்பிறது சம்பந்தமாக கதைக்கிறதுக்கு வந்திருக்கிறேன்" என்றதும் "நீங்கள் என்ன எங்களுக்குச் சொல்லுறது. எங்கட பிள்ளையளப் பள்ளிக்கூடம் அனுப்ப எங்களுக்குத் தெரியும். நீங்கள் ஒருத்தரும் சொல்லத் தேவையில்லை. பிச்சை எடுத்தாலும் என்ர பிள்ளையை படிப்பிச்சு ஒரு நல்ல நிலைமைக்கு கொண்டு வருவேன். நான் இவ்வளவு நாளும் பள்ளிக்கூடம் அனுப்பினான் தான்.ஆனால்..' என்றவர் கண்களில் கண்ணீர். "ஒரு... பிரச்சினையும் இல்லாமல் படிச்ச வள். இப்ப பள்ளிக்கூடம் போகமாட்டன் எண்டு நிக்கிறாள்" அவரின் அந்தப் பதிலுக்குரிய வினா தேடும் படலம் என் நெஞ்சில் எழுவதற்கு முந்தி."

நான் என்னத்தைச் சொல்ல... அந்த முள்ளி வாய்க்கால் சண்டையில என்ர மனிசியோட நாங்களும் செத்திருக்க வேண்டும். இஞ்ச பாருங்கோ நான் இந்த ஓலைக் குடிசையில ஒரு பாதுகாப்புமில்லாமல் இந்தப் பொம்பிளைப் பிள்ளையையும் வைச்சுக் கொண்டு தவியாய்த் தவிக்கிறன். எனக்கு ஒரு வீடு கூட ஒருத்தரும் தரேல்ல. என்ர புள்ள பள்ளிக்கூடம் போட்டு வரேக்க ஒரு சண்டாளன் குறுக்கால போவன் என்ர பிள்ளையின்ர கையைப் பிடிச்சு இழுத்திட்டான். நான் அப்பவே தூக்குப் போட்டுச் செத்திருக்கவேணும். இந்தப் புள்ளைக்காகப் பாக்கிறன்" என்றவர் அமைதியானார்.பின் அவரே தொடர்ந்தார். இப்ப பொம்பிளப் பிள்ளையளுக்கு எந்தப் பாதுகாப்பும் இல்லை. பொடியள் எல்லாம் கெட்டுப் போச்சுதுகள். இதுக்குப் பிறகு என்ர பிள்ளையை நான் வேலை செய்யிற இடத்துக்கு வரச் சொல்லி வரும் போது கூட்டிக் கொண்டு வாறனான். இப்பிடி இருக்கேக்க எப்பிடி என்ர புள்ளையை பள்ளிக் கூடத்துக்கு அனுப்புறது. எங்களுக்கு ஆரும் பாதுகாப்பில்லை. அந்த முள்ளி வாய்க்காலுக்க செத்திருந்தா இப்ப அந்தக் கஸ்ரம் வந்திருக்காது.நான் வேலைக்குப் போறதோ? பிள்ளையை பாதுகாக்கிறதோ....?" என்றவர் மனதில் இருந்து ஒரு பெருமூச்சு காற்றில் கலந்தது.

அவரின் வார்த்தைகளில் மனக்குமுறல்களும்,இயலாமையும் ,ஆத்திரமும் ,தாழ்வு மனப்பான்மையும் , "இனி என்ன செய்வது எப்பிடி என்ர பிள்ளையைக் காப்பாத்தப் போறன்" என்ற ஏக்கமும் அவரின் மனதில் எழுந்து மடிவதை என்னால் உணர முடிந்தது. அவருக்கு நான் ஆறுதல் சொல்லி அவரின் மனக்குமுறலை சாந்தப்படுத்த முடியாதவனாக நான் அந்த இடத்தை விட்டு அகல முற்பட்ட போது "குறைநினைக்காதேங்கோ சேர். எனக்கு ஏற்பட்ட வலி ஒவ்வொரு தகப்பனுக்கும் ஏற்பட்டால் தான் அது புரியும். போட்டு வாங்கோ" என வழியனுப்பி வைக்கிறார். துவிச்சக்கர வண்டியில் ஏறி அமர்ந்தேன். 'இப்பிடி பாதிக்கப்பட்ட தாய் தகப்பன்கள் இந்த மண்ணில் ஏராளம். அவர்களுக்கு யார் பாதுகாப்பு?' அந்த தந்தையின் குமுறலிலும் ஞாயம் இருக்கத்தான் செய்யிறது என் மனம் பலமுறை கூறிக் கொண்டது.

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேஸ்புக் நிறுவுனர் பற்றி

### அறிந்தும்... அறியாததும்...



ஃபேஸ்புக் நிறுவனர் மார்க் சுகர்பேர்க் பற்றி பல விடயங்களை அறிந்துகொள்ளும் வாய்ப்பு அனைவருக்கும் ஏற்படுவதில்லை. இளம் வயதில் தொழில் நுட்ப பணக்காரரான ஃபேஸ்புக் நிறுவனர் மார்க் சுகர்பேர்க் தனது 30ஆவது பிறந்தநாளை அண்மையில் கொண்டாடினார். அவர் பற்றிய சுவாரசியமான சில விடயங்கள் இதோ.

1. மைக்ரோசொப்ட் உயர்நிலைப் கல்லூரியில் கற்கையில் சுகர்பேர்க் இசை அப்ளிகேஷனான ஸினாப்ஸ் மீடியா பிளேயரை வேறு ஒருவருடன் சேர்ந்து உருவாக்கினார். அந்த அப்ளிகேஷனை மேலும் மெருக்கேற்றக் கோரி மைக்ரோசொப்ட் மற்றும் ஏஓஎல் ஆகிய நிறுவனங்கள் அவருக்கு வேலை கொடுக்க முன் வந்தன. ஆனால் அவர் ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் சேர்ந்து தனது மேற்படிப்பைத் தொடர்ந்தார்.

2. யூத பெற்றோருக்கு பிறந்த சுகர்பேர்க்குக்கு மத நம்பிக்கை இல்லை. அவருக்கு சொந்தமாக ஒரு ரீவி கூட இல்லை.

சுகர்பேர்க் எப்பொழுதும் ஜீன்ஸ், ரீ சேர்ட்டில் தான் இருப்பார். இந்நிலையில் அவர் மோசமாக உடை அணியும் பிரபலம் என்ற பெயரை எடுத்துள்ளார்.

3. மார்க் சுகர்பேர்க் தனது காதலியான பிரஸில்லா சானை 2012ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் திகதி திருமணம் செய்தார். விருந்துபசாரம் ஒன்றில் மலசலகூடம் போக வரிசையில் நின்றபோது தான் சுகர்பேர்க், சானும் முதன்முதலாக சந்தித்துக் கொண்டனர்.

. வருடாந்திர ஊதியமாக வீட்டுக்கு வெறும் ஒரு அமெரிக்க டொலரை மட்டுமே எடுத்துச் செல்கிறார். கூகுள் நிறுவனத்தின் நிறுவுநர்கள் லாரி பேஜ் மற்றும் செர்கி பிரின் ஆகியோரின் வருடாந்திர சம்பளமும் வெறும் ஒரு டாலரே.

5. ஹங்கேரியைச் சேர்ந்த ஷீப்டாக் வகையைச் சார்ந்த நாய் ஒன்றை வளர்க்கிறார். பீஸ்ட்(மிருகம்) என்று பெயர் வைக்கப்பட்டுள்ள அந்த நாய்க்கு ஃபேஸ்புக்கில் கணக்கு உள்ளது. அதன் பக்கத்தை 18 லட்சம் பேர் லைக் செய்துள்ளனர்.

6. சுகர்பேர்க்கு சிவப்பு-பச்சை நிறத்தை கண்டுபிடிக்க முடியாத குறைபாடு உள்ளது. அவருக்கு நீல நிறத்தை தான் நன்றாக பார்க்க முடியும். அதனால் தான் அவர் ஃபேஸ்புக்கை நீல நிறத்தில் வைத்துள்ளார்.

## விற்பனையில் கொடிகட்டிப் பறக்கும் Galaxy S5

சாம்சங் நிறுவனம் அண்மையில் புதிய ஸ்மார்ட் கைப்பேசியான Galaxy S5 இனை அறிமுகம் செய்திருந்தது.

அறிமுகம் செய்து ஒரு மாத காலம் முடிவடைந்துள்ள நிலையில் இதுவரை 11 மில்லியன் கைபேசிகள் விற்பனையாகியுள்ளதாக அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்த எண்ணிக்கை Galaxy S4 கைப்பேசி அறிமுகப்படுத்தப்பட்ட வேளை இந்தக் கைப்பேசி ஒரு மாத காலத்தில் விற்பனை செய்யப்பட்ட எண்ணிக்கையிலும் ஒரு மில்லியன் அதிகமாகும்.

இதேவேளை உலகமெங்கிலும் 125 நாடுகளில் Galaxy S5 அறிமுகம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




கடலுக்கு அடியில், 1,600 ஆண்டுகளுக்கு முன், புதையுண்டதாக கருதப்பட்ட கிளியோபாட்ரா வாழ்ந்த அரண்மனை, தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. நிலநடுக்கம் போன்ற இயற்கை சீற்றங்களால், இந்த அரண்மனை புதைந்துவிட்டதாக கூறுகின்றனர் ஆராய்ச்சியாளர்கள்.

பலவித சிலைகளும், சிவப்பு கிரனேட் தூண்களும், அரிய பொருள்களும் இதில் அடங்கும். இங்கே கிளியோபாட்ராவின் மகனின் சிலையும், கடவுள்களின் சிலைகளும் காணப்படுகிறதாம்.

அத்துடன் புதையல்களும் இருக்க வாய்ப்புள்ளதாக தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். அரண்மனையில் வைக்கப்பட்ட பல பொருள்கள், வைத்தது வைத்தபடியே இருப்பது, ஆராய்ச்சியாளர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

ரஷ்யாவை சேர்ந்த, ஜூலியர் ஸ்லாடா என்ற பெண், தன் உடலை, ரப்பர் போல் வளைத்து, மடித்து, அசத்தி வருகிறார். அது மட்டுமல்ல, இதற்கு முன், இப்படி உடலை வளைப்பதில், சாதனை படைத்தவர்களை எல்லாம் பின்னுக்கு தள்ளி, இன்று, உலகிலேயே, உடலை வளைப்பதில் சிறந்தவர் என்ற பட்டத்தை பெற்றுள்ளார்.



மாசுக்கட்டுப்பாட்டு விதிகள் கடுமையாகும் போது மின்சார வாகனங்களுக்கான வர்த்தகம் அதிகம் இருக்கும் என்பதால் பல புதிய நிறுவனங்களும் இந்த சந்தையின் எதிர்கால வலுவை மனதில்கொண்டு இப்போதே உழைத்து வருகின்றன.

அந்த வகையில், ஆஸ்திரியாவை சேர்ந்த ஹாமர்ஷ்மிட் மெசின்பாவ் என்ற நிறுவனம் ஜோஹம்மர் என்ற புதிய மின்சார பைக்கை அறிமுகஞ் செய்திருக்கிறது. வழமையான வடிவமைப்புகளை புறந்தள்ளிவிட்டு, முற்றிலும் புதுமையாக வடிவமைத்துள்ளது இந்த புதிய பைக்கின் சிறப்பம்சங்களாவன.

இந்த புதிய மின்சார பைக் ஜே.150 மற்றும் ஜே.200 என்று இரு வகைகளில் வந்துள்ளது. இவை முறையே 158 கிலோ மற்றும் 177 கிலோ எடை கொண்டவை.

இந்த வாகனத்தில் பொருத்தப்பட்டிருக்கும் பற்றறியை ஒரு முறை மின்னேற்றுவதற்கு இரண்டரை மணி நேரம் பிடிக்கும்.

இவற்றை ஒருமுறை மின்னேற்றினால் 150 கி.மீ - 200 கி.மீ தூரம் வரையிலும் செல்லும் திறன் கொண்டதாக இருக்கின்றன. இதன் பெறுமதி 25,000 யூரோ



## இணையங்களுக்கு புதிய பெயர்கள்

நாம் பயன்படுத்தும் இணையத் தள முகவரிகளில், துணைப் பெயரினை நம் விருப்பப்படி அமைக்க முடியாது. ஏனென்றால், அவை இணையதளப் பெயர்களின் வகைகளைக் குறிக்கும். தொழில் நுட்ப ரீதியாக, அவை ஏற்றுக் கொள்ளப்பட்டால் தான், அவற்றை அமைப்பதும், அனைவரும் பயன்படுத்துவதும் இயலும். com, net, biz, edu போன்றவற்றை வரைமுறைப்படுத்தும் அமைப்பாக "ஐகான்" (ICANN- Internet Corporation for Assigned Names and Numbers), செயல்பட்டு வருகிறது. அண்மையில் இந்த அமைப்பு பல புதிய வகைப் பெயர்களுக்கு அங்கீகாரம் அளித்துள்ளது. முதலில் இணையதளப் பெயர்களின் துணைப் பெயராக .com என்பதுதான் பலரும் பயன்படுத்தும் பெயராக இருந்து வந்தது. 1990 ஆம் ஆண்டளவில் உருவாக்கப்பட்ட இணைய தளங்களின் எண்ணிக்கை திடீரென பன்னாட்டளவில் அதிகமானதால், புதிய வகைப் பெயர்களை அமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதனை "dot com" boom என அனைவரும் அழைத்தனர்.

பின்னர், படிப்படியாக புதிய வகைப் பெயர்கள் தரப்பட்டன. அவற்றை இணைய நிறுவனங்களும் பயன்படுத்தத் தொடங்கின.

அண்மையில், ஐகான் அமைப்பு ஏழு புதிய வகைப் பெயர்களுக்கு அனுமதி வழங்கியுள்ளது. அவை .bike, .singles, .clothing, .guru, .holdings, .plumbing, மற்றும் .ventures. இந்த பெயர்களைக் கொண்டிருப்பது, அந்த இணையதளத்தினை உருவாக்கி வைத்து இயக்கும் நிறுவனத்தின் தன்மையைக் காட்டும். எடுத்துக் காட்டாக ".bike" என்ற வகைப் பெயர், அத்தளம் மோட்டார் சைக்கிள்களைத் தயாரிக்கும் நிறுவனத்தின் இணைய தளமாக இருக்கும் என்பதனை நாம் அறியலாம். இந்த ஏழு பெயர்களுடன் நின்றுவிடாமல், மேலும் பல புதிய வகைப் பெயர்கள், ஐகன் அமைப் பின் பரிசீலனையில் உள்ளன. இவற்றிற்கு அனுமதி வழங்குவதில், பாதுகாப்பு நடவடிக்கை முதல் பல அம்சங்களைக் கவனிக்க வேண்டி யுள்ளதாக, ஐகான் அறிவித்துள்ளது. விளம்பரத்துக்காக தங்களுக்கென மட்டும் சில வகைப் பெயர்களை வைத்துக் கொள்ள விரும்பும் நிறுவனங்கள், அவற்றிற்கான கட்டணத்தைச் செலுத்தி விண்ணப்பிக்கலாம் என்று ஐகன் தெரிவித்துள்ளது. இதற்கான கட்டணம் ஒரு லட்சத்து 85 ஆயிரம் டொலர் ஆகும். இவ்வளவு கட்டணமா? என்று வியக்க வேண்டாம். இந்த அறிவிப்பு வந்தவுடன் அப்பிள், மைக்ரோசொப்ட், வால்மார்ட், கூகுள் போன்ற நிறுவனங்கள் 100இற்கும் மேற்பட்ட தங்களின் பிரியமான வகைப் பெயர்களுக்கு அங்கீகாரம் கேட்டு விண்ணப்பித்துள்ளன. இவற்றில் .lol, .android ஆகியவையும் அடங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 6, வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட் மார்க் என்டர் பிறைஸ் ஸ்தாபனத்தால், 2014 மே 20 ஆம் திகதி வெளியிடப்பட்டது.